கல்கி

KALKI 15.9.96 ரூ. 3.00



ஒரு சுந்தரமான இல்லறம்

புதிய

KKR

இந்தியாவின் முதல் முத்திரைப் பெற்ற பாமாயில்.

நவீன விஞ்ஞான முறையில் சுத்திகரிக்கப்பட்டது

போஷாக்கூட்டும் சமையல் எண்ணெய்



தாய்ப் பாலுக்கு சமமானது என நிரூபிக்கப்பட்ட கே.கே. ஆர் பாமாயில் தனித்தன்மை வாய்ந்தது. இதர சமையல் எண்ணெய்களிலிருந்து பல வகையில் மாறுபட்டது. பாமாயில் பாம் பழத்திலிருந்து பிழிந்தெடுக்கப்படுகிறது.

வைட்டமின் A & E இரண்டையும் மிக அதிக அளவில் கொண்டுள்ளதால் உயிரணுக்கள் சேதம் அடையாமல் பாதுகாத்து உடல் நலம் சீராக இருக்க உதவுகிறது. மாரடைப்பு, புற்றுநோய் மற்றும் நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய்கள் ஏற்படக்கூடிய அபாயத்தை குறைக்க வல்லது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.





* கே. கே. ஆரின் செம் பனை பண்ணையில் இரண்டு யூனிட் (10 செண்ட் ஒரு யூனிட்) வாங்குபவருக்கு, ஒரு வருடத்திற்கு மாதந்தோறும் ஒரு லிட்டர் கே.கே. ஆர் பாமாயில் இலவசமாக வழங்கப்படும்.

KKR
பாமாயில் (இந்தியா) லிட்.,

NO. 121, மாதவரம் நெடுஞ்சாலை (வடக்கு), பெரம்பூர், சென்னை 600 011, Ph. 5375456, 5376796

ADEPT/KKR/96

கே. கே. ஆர் பாமாயில். சுத்தம் மற்றும் முழு குடும்பத்தின் ஆரோக்கியம்.



பிகக்குராமின் கோடிகள்

இந்தியா என்ற நாட்டில் பிசுக்குராம் என்று ஒரு அமைச்சர் இருந்தார். புறா மூலம் தகவல் அனுப்புவது போல், எலி மூலம் செய்திகளை அனுப்பும் எலி கம்யூனி கேஷன்ஸ் துறையில் அமைச்சர்.

அலுவலகங்களில், ஃபைல்களில் 'கோட்' போட்டு அனுப்புவார்கள். ஆனால் பிகக்கு ராமிற்கு அனுப்பப்படும் பைல்களில் 500 ரூபாய் நோட்டுகள் இருக்க வேண்டும் என்று உத்தரவு போட்டிருந்தார். ஃபைல் அனுப்ப மறந்தாலும் நோட் மட்டும்– காந்தித்தாத்தா படம் போட்ட 500 ரூபாய் நோட்டுகள் இருந் தாலும் தப்பில்லை என்று அவர் கூறியிருந்த தால், அதிகாரிகள் அடிக்கடி ஃபைல்களை அனுப்ப மறந்து போய் விட்டார்கள். யார் அதிக தடவை மறக்கிறாரோ அவருக்கு உத்தி யோக உயர்வு தரப்பட்டது.

ஒரு சமயம் ஒரு புதிய அதிகாரி நூறு ரூபாய் கட்டுகளை ஃபைலில் வைத்து அனுப்பி விட்டார். பார்த்தார் பிகக்குராம். கோபம் தலைக்கேறியது. அந்த ஆபீசரைக் கூப்பிட்டு விடுவிடென்று விட்டார். "உமக்குத் தெரியாதா, நான் காந்தியவாதி என்று. இருபத்திநாலு மணி நேரமும் காந்திஜிதான் என் மனத்தில் இருக்கிறார். இதோ பாருங்க, என் கோட் பாக்கெட்டில்... இது என்ன? எல்லாம் 500 ரூபாய் நோட்டுகள். பணத் தாசையால் இப்படி வெச்சிக்கறேன்னு நெனைச்சிங்கனா... காந்திஜியின் படம் இருக் கறதாலே தான் அதன் மேலே உயிரையே வெச்சிருக்கேன். அப்புறம் ஒரு 500 ரூபாய் நோட்டு தயாரிக்க ஐந்து நூறு ரூபாய் நோட்டைத் தயாரிப்பதை விடக் குறைவாகச் செலவாகும். போங்க, இனிமேல் இப்படி செய்யாதீங்க!" என்றார்.

பிசுக்குராம் ரூபாய் நோட்டுகளை கட்டாக அடுக்கி, படுக்கை மாதிரி செய்து அதன் மேல்தான் தூங்குவார்.

"ஏங்க இப்படி படுத்தா உறுத்தலையா?" என்று அவருடைய மனைவி கேட்டபோது, "மனசும் உறுத்தலை, உடம்பும் உறுத்தலை. காந்திஜியின் பேரைச் சொல்லி ஓட்டு வாங்கி, காந்திஜியின் குல்லா போட்டுக் கிட்டு

மந்திரியாகி, காந்திஜியின் படம் போட்ட நோட்டில் தூங்கறதை விட சுகமான அனுபவம் என்ன இருக்க முடியும்? அப்படியே உறுத்தினாலும், பொருட்படுத்தக் கூடாது. நமக்காக காந்திஜி எத்தனை கஷ்டப்பட்டிருக்கிறார்? அதை நெனைச்சுப் பார்க்கணும், ஒரு நிமிஷமாவது?''

"எதுக்கெடுத்தாலும் நோட்டு வெக்கச் சொல்றாரே, இவருக்கு இருதயமே கிடையாதா?'' என்று சிலர் (அவரது பிஏ., செகரட்டரி, நிதித்துறை டைரக்டர் நீங்கலாக!) கேட்டது அவர் காதில் விழுந்ததாலோ என்னவோ, ஒரு நாள் திடீரென்று வெளிநாடு போனார், தன் இருதய செக்-அப்பிற்கு. அந்தச் சமயம் அவர் அமைச்சர் இல்லை. இருந்தாலும் பத்து அமைச்சர் பத்தாண்டு காலத்தில் சேர்க்கக் கூடிய அளவு பணம் சேர்த்திருந்தார். சொந்தமாக விமானம் வாங்கி



பயணிக்காமல், சாதாரண சாமானிய னாக-காந்திஜியின் தொண்டராயிற்றே!- குப்பனும் சுப்பனும் செல்லும் விமானத்தி லேயே வெளிநாடு சென்றார்!

கிளம்பும்போது அவர் வீட்டுத் தோட்டக்காரரிடம், ''இந்தாப்பா. வெளிநாடு போய் வர்றேன். அதுக்குள்ள நிறைய பூஞ்செடி, கொடி, குரோட்டன்ஸ் எல்லாம் வெச்சுடு. இந்தா பணம். உரம், கிரம் வாங்கிப் போடு. மீதி பணத்தை நீயே வெச்சுக்க'' என்று சொல்லி முழுதாகப் பத்து ரூபாய் நோட்டைக் கொடுத்தார். ஏழை எளியவர்களைக் கண்டால், பணத்தைப் பணம் என்று பார்க்க மாட்டார்!

பிசுக்குராம் வெளிநாட்டுக்குப் போனதும், அவருக்கு காந்திஜி பட நோட்டுக் கட்டுகளைக் கொடுத்த ஒரு நன்றிகெட்ட ஜென்மம் சி.பி.ஐ.க்குத் தகவல் கொடுக்க, அவர்கள் பிசுக்குராமின் வீட்டில் புகுந்து நிறைய பணத்தைக் கைப்பற்றினார்கள்.

தகவல் தெரிந்ததும் பிசுக்குவிற்குப் பலவித 'நெஞ்சுவலி'கள் காலிலிருந்து தலைவரை வந்துவிடவே, சிகிச்சை பெற்று ஆறுமாதம் கழித்து இந்தியா நாட்டிற்குத் திரும்பினார்.

அவரைச் சந்திக்க இரண்டு மூன்று உதவியாளர்கள் சூழ ஒரு பெரிய அதிகாரி வந்தார்.

"நான் சி.பி.ஐ.யிலிருந்து வர்றேன். உங்களால எங்களுக்கு ஒரு காரியம் ஆகணும்" என்றார், மிகவும் பவ்யமாக.

சி.பி.ஐ.யிலிருந்து வருகிறவர் நம்மிடம் உதவி கேட்கிறாரே என்று யோசித்துக் கொண்டே, "என்ன உதவி? சொல்லுங்கள்" என்று கேட்டார்.

"கொஞ்சம் பணம் வேணும்.."

''என்னது லஞ்சமா கேட்கிறீர்கள்? அவமானமில்லையா? இந்த அழகில் சி.பி.ஐ. என்று ஜம்பமாகச் சொல்லிக் கொள்கிறீர்கள். நாடு எங்கே போய்க் கொண்டிருக்கிறது?''

''என்ன சார் செய்வது? பாங்கில் கொஞ்சம் பணமுடை. பத்துக் கோடி கொடுங்க. சீக்கிரம் திருப்பிக் கொடுத்துடறோம். எங்க பாங்கின் நிதி நிலைமை கொஞ்சம் டைட்.''

"என்ன பாங்கா?"

"ஆமாம். சென்ட்ரல் பாங்க் ஆஃப் இண்டியா... நான் தான் சி.பி.ஐ. என்று சொன்னேனே..."

"போங்கயா.. வேற வேலை இல்லை" என்று கத்தினார்.

அவர்கள் போனதும், உண்மையிலேயே சி.பி.ஐ. அதிகாரிகள் வந்தார்கள்.

கைப்பற்றிய பணத்தைப் பற்றிக் கேட்டார்கள்.

"பணமா? எனக்கு எப்படித் தெரியும்?'' நான் வெளிநாடு போயிருக்கும்போது யாராவது என் அரசியல் விரோதிகள் இப்படி செய்திருக்கலாம். இல்லாவிட்டால் என் வீட்டுத் தோட்டக்காரன் கூட செய்திருக்கலாம். 'மணி ப்ளான்ட்' வைன்னு சொல்லியிருந்ததைச் சரியாகப் புரிஞ்சுக்காமல் 'மணி'யைக் கொண்டு வந்து வச்சிருக்கலாம். இனிமேல் ப்ளான்ட் வைப்பான். இல்லாவிட்டால், என் வீட்டு சமையல்காரரும் செய்திருக்கலாம். அவரை வேலையை விட்டு நிறுத்திட்டதால் கோபத்தில் என்மேல் பழி தீர்க்கறதுக்கு இப்படி செய்திருக்கலாம்..."

சி.பி.ஐ. அதிகாரிக்குத் தலை சுற்றியது!

– **"கடுகு"**



கல்கியைச் சாடுகிறார் ஜெ.

கல்கி ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம்.

1.9.1996 தேதியிட்ட கல்கி இதழ் கண்டேன். அவ்விதழில் நீங்கள் எழுதியுள்ள தலையங்கமும் தராசு பதில்களும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கட்சி மீதும், என் மீதும், நீங்கள் கொண்டுள்ள தப்பபிப்ராயத்தையும் வெறுப்பையும் வெளிப்படையாகக் காண்பிக்கின்றன.

ஒரு சிலரை நீங்கள் தலையில் தூக்கி வைத்து ஆடுவதைப் பற்றி நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால், ஒருவர் மேல் குற்றம்சாட்டும் முன்னர், நீங்கள் ஆதாரத்தோடுதான் பேசுகிறீர்களா என்பதனை சிந்தித்துப் பார்க்க வேண்டும். நான் பெரிதும் மதிக்கும் பத்திரிகை என்பதால், இதோ நான் தரும் சில மறுப்புகள்.

1. நீங்கள் பதில் கூறியுள்ளது போல் நான் கம்பிக்குப் பின்னால் போக வேண்டிய அவசியம் வராது.

2. முன்னாள் தலைமைச் செயலர் திரு டி.வி. வெங்கட்ராமன் வீட்டில் நடந்த சம்பவம் சம்பந்தமாக முதல்வரும், அமைச்சர் ஆற்காடு வீராசாமியும் பேசிய பேச்சுக்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிரான நடவடிக்கைகளே அன்றி, லஞ்சத்துக்கு எதிரான நடவடிக்கைகள் அல்ல.

3. நான் தமிழ்நாட்டில் வாங்கிய சொத்துக்களை கேரளாவில் பத்திரப் பதிவு செய்துள்ளதாகக் கூறியுள்ளது, சுத்த அபத்தம்! ஆதாரமற்ற பொய்! யார் அப்படி செய்திருந்தாலும் அவர்கள் மேல் அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்கலாம். அப்படி எனக்கு ஏதாவது சொத்துக்கள் இருந்தால் நிதி அமைச்சர் சிதம்பரம் அவற்றை எடுத்துக் கொள்ளலாம்.

4. என்னைக் கைது செய்யாமலிருக்க முன் ஜாமீன் பெறுவது, எனது சட்டரீதியான உரிமை. இதை "சுதந்திர தின ஜோக்" என்று நீங்கள் கூறுவது அபத்தம்.

5. நான் போட்ட உத்தரவுகள் யாவும் முறையாகவே கையெழுத்திடப்பட்டுள்ளன. பல ஆயிரம் கோப்புகளில் கையெழுத்திட்டுள்ளேன். அவற்றுள் சில Judgement Error ஆவதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.

6. டாக்டர் காளிமுத்து அவர்கள் தொண்டர்கட்கு ஆற்றியுள்ள உரையை நீங்கள் தவறான அர்த்தத்தில் ஏளனம் செய்திருப்பது வருந்தத்தக்கது.

எங்கள் 5 ஆண்டு ஆட்சியில் பல சாதனைகளைச் சாதித்துள்ளோம். பல சமூக திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளோம். ஆனால் ஆங்காங்கே சில கருங்காலிகள் செய்த தவறுகளே பெரிதுபடுத்தப்படுகின்றன.

நான் முழு மூச்சாகக் கட்சியில் களை எடுத்து, கட்சி அமைப்பை சீரமைத்து, கட்சிக்கு ஒரு புதிய கொள்கையை, புதிய உத்வேகத்தை அளிப்பதற்கு அயராது உழைத்து வருகின்றேன். இத்தருணத்தில் இல்லாததையும் பொல்லாததையும் எழுதி என்னை வேதனைப்படுத்தாதீர்கள்.

Now with the wholesale exodus of the dirt, the turncoats, the inefficient and the corrupt, I seek the constructive advice of journalists to rebuild the party into a forceful movement; not this continuous mudslinging which can be demoralising.

உங்களுக்கு சந்தேகங்கள் இருந்தால், தப்பபிப்ராயங்கள் இருந்தால், அதைப் பற்றி டாக்டர் நாவலர் அவர்களின் தலைமையிலான பத்திரிகைத் தொடர்புக் குழுவிடமோ அல்லது என்னிடமோ தெளிவுபடுத்திக் கொள்ளவும்.

உங்கள் அன்புள்ள,

ஜெ. ஜெயலலிதா
பொதுச்செயலாளர்,
அனைத்திந்திய அண்ணா தி.மு.கழகம்.
முன்னாள் தமிழக முதலமைச்சர்.

கடந்த 25.8.96 இதழில் 'மயக்கத்தில் கறக்கும் மாடுகள்; ஒரு மாபெரும் கொடுமை' என்கிற தலைப்பில் ஒரு கட்டுரை வெளியிட்டிருந்தோம். சுலபமாகப் பால் கறக்க வேண்டி, ஆக்ஸிடோசின் என்கிற தடைசெய்யப்பட்ட ஊசி மருந்தைத் தங்களின் கறவை மாடுகளுக்குப் போட்டுப் பால்காரர்கள் பால் கறப்பது பற்றி எழுதியிருந்தோம். (நமது கட்டுரை தொடர்பாகச் சட்டமன்றத்திலும் கேள்வி எழுப்பப்பட்டது.) அதுபற்றி SPCA-வின் டாக்டர் பி. இராஜேந்திரனிடமும் அப்போதே குறிப்பிட்டிருந்தோம். அதற்கு அவர், 'ஆக்ஸிடோசின் போடுவதால் மாடுகள் மாத்திரம்தான் பாதிக்கப்படுகிறது என்பதில்லை. கறக்கப்படும் பாலிலும் அதன் நச்சுத் தன்மை கலக்கும் என்பதால், பாலை அருந்துகிறவர்களையும் பாதிக்கத்தான் செய்யும். இதுகுறித்து எனக்கு விளக்கமாகத் தெரியாது என்றாலும், ஏற்கெனவே செய்யப்பட்ட ஆய்வுகள் இருந்தால், அதைத் தேடிப் பிடித்து உங்களுக்கு அனுப்பி வைக்கிறேன். முடியுமானால் எங்காவது ஆய்வு செய்யவும் பார்க்கிறேன்' என்று கூறியிருந்தார்.

ஆக்ஸிடோசின் போடப்படுகிறபோது அந்த மாடுகள் எப்படியெல்லாம் வேதனைப் படுகின்றன. அதிலிருந்து கறக்கப்படும் பாலை அருந்துகிறவர்களுக்கு என்னென்ன பாதிப்புகள் ஏற்படுகின்றன என்பது பற்றி ஏற்கெனவே சிலர் ஆய்வுகள் செய்திருக்கிறார்கள். அந்த ஆய்வு முடிவுகளைத் தேடிப்பிடித்து ஜெராக்ஸ் பிரதிகள் எடுத்து நமக்கு அனுப்பியிருக்கிறார் டாக்டர். பி. இராஜேந்திரன். அதிர்ச்சி தரும் அந்த ஆய்வு முடிவுகளைத்தான் இங்கே கட்டுரையாகத் தந்திருக்கிறோம்...

அதிர்ச்சி தரும்

பிரசவம் என்பது ஒரு பெண்ணுக்கு மறுபிறப்பு என்பார்கள்; பிரசவ வேதனை அப்படிப்பட்டது. பெண்களுக்கு மாத்திரமல்ல; விலங்குகளுக்கும் பிரசவம் என்பது அப்படித்தான். என்றாலும் பிறக்கிற குழந்தையின் முகத்தைப் பார்க்கிற போது ஏற்படுகிற சந்தோஷம் எல்லையில்லாதது என்பதால், அந்தப் பிரசவ வேதனையெல்லாம் மறந்து போய் விடுகிறது.

ஆனால், கன்றுக்குட்டி எதையும் ஈன்றெடுக்காமலேயே பல கறவை மாடுகள் பிரசவ வேதனையை அனுபவிக்கின்றன! ஆம்; சுலபமாகப் பால் கறக்க வேண்டும் என்பதற்காகப் பால்காரர்கள் தங்களுடைய கறவை மாடுகளுக்குப் போடும் ஆக்ஸிடோசின் ஊசிதான் பிரசவ வேதனையை உண்டாக்குகின்றன! இந்த ஊசி போடப்படும் ஒவ்வொரு முறையும் சுமார் ஏழு நிமிடங்களுக்கு அந்த வேதனை நீடிக்கும். ஒரு நாளைக்கு இரண்டு தடவை இந்த ஊசி போடப்படுவதால், சம்பந்தப்பட்ட கறவை மாடுகள், ஒவ்வொரு நாளும் சுமார் பதினொன்கு நிமிடங்கள் பிரசவ வேதனையால் துடிக்கின்றன. எதற்காக? பால்காரர்கள் சுலபமாகப் பால் கறப்பதற்காக!

மாடுகளுக்கு இந்த வேதனையோடு மட்டும் போய் விடுவதில்லை. ஆக்ஸிடோசின் ஊசிகள் போடப்படுவதால் அந்த மாடுகள் சீக்கிரமே மலடாகி விடுகின்றன. ஒரு பசு மாடு தனது கன்று ஈனும் தன்மையை இயற்கையாக இழப்பதற்குப் பத்து

ஆய்வுகள்!


ஆண்டுகளுக்கு முன்பே இந்த ஊசிகளால் இழந்து விடுகிறது. அதனால் அது அற்ப ஆயுளிலேயே கசாப்புக் கடைக்கு அனுப்பப்பட்டு விடுகிறது.

அதன் மாமிசத்திலும் ஆக்ஸிடோசினின் நச்சுத் தன்மை கலந்து விடுகிறது.

இந்த ஆக்ஸிடோசினின் நச்சுத் தன்மை எப்படிப்பட்டது? அது மாடுகளைப் பாதிப்ப தோடு மட்டும் நின்று விடுவதில்லை. சம்பந்தப் பட்ட மாடுகளிலிருந்து கறக்கப்படும் பாலிலும் அதன் நச்சுத்தன்மை கலந்து விடுகிறது. அந்தப் பாலைக் குடிக்கிறவர்களின் கண் பார்வை யைப் பாதிக்கிறது. குறிப்பாக வளரும் குழந்தை களின் கண் பார்வையை மிக மோசமாகப் பாதிக்கிறது. காதுகளின் கேட்கும் சக்தியையும் பாதிக்கிறது.

நமது உடலிலுள்ள ஹார்மோன்களெல்லாம் ஒரே சீராகச் சுரப்பதால்தான் நமது உடலின் வளர்ச்சியெல்லாம் ஒருவிதக் கட்டுப்பாட்டி லும் நியதியிலும் நடந்து கொண்டிருக்கிறது.

ஆனால், ஆக்ஸிடோசின் ஊசிகள் போட்டுக் கறக்கப்படும் பாலை நாம் அருந்துகிற போது, அதிலுள்ள நச்சுத் தன்மை, நமது ஹார்மோன் சுரப்பிகளின் சீர்த் தன்மையைப் பாதிப்பதால், அது பாட்டுக்குக் குறைவாகவோ, அதிக



வண்ணப்படம் : மேஜர். கே. மூர்த்தி

மாகவோ சுரக்க ஆரம்பித்து விடுகின்றன.

இப்படி பாதிக்கப்படுவது பெண் குழந்தை களாக இருக்கிறபோது, அவர்கள் சிறு வயதி லேயே பருவமடைந்து விடுகிறார்கள். அல்லது அந்த நிகழ்வு தள்ளிப் போகிறது. மார்பகங் களின் வளர்ச்சி அதிதமாக இருக்கிறது அல்லது பாதிக்கப்படுகிறது. கை, கால்கள், முகம் என்று தேவையில்லாத இடங்களில் முடிகள் வளரவும் காரணமாகிறது. இத்தனையும் போதாதென்று, மலட்டுத் தன்மை ஏற்படுகிற வாய்ப்பையும் இந்த ஆக்ஸிடோசினின் நச்சுத் தன்மை ஏற் படுத்துகிறது.

ஆக்ஸிடோசின் ஊசி போட்டுப் பால் கறப்பதென்பது, ஏதோ சென்னை நகரில் உள்ள பால்காரர்கள் மட்டுமே செய்கிற செயல் என்ப

மோப்பம் பிடிக்கும் புதிய கருவி

விசேஷ முகரும் திறன் கொண்ட கருவி ஒன்றை ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் உருவாக்கி வருகின்றனர். இதன் மோப்ப சக்தி நாய் போன்ற விலங்குகளுக்கு உள்ளதை விட அதிகம்.

முக்கியமாக கொலை நடந்த இடங்களில் மோப்பம் அறிந்து தடயங்கள் கண்டறிய இது உதவும்.

விளையாட்டுத் துறையிலும் இந்தக் கருவியைப் பயன்படுத்தலாம். ஓட்டப் பந்தயம் தொடங்கும் நேரத்தில் ஒரு விளையாட்டு வீரரின் வியர்வையைத் துடைத்தெடுத்து இக் கருவி மூலம் ஆராய்ந்து அந்த விளையாட்டு வீரர் ஸ்டிராய்ட் எதையும் உட்கொண்டாரா என உடனே அறிந்து கொள்ளலாம்.

– ஆர். ஆர். பூபதி



● இந்தியாவில் இந்த வருடம் மட்டும் ஓசியில் ரயில் பயணம் செய்தவர்களிடம் வசூல் செய்யப்பட்ட அபராதத் தொகை ரூ. 25 கோடி! அடடா! நம் மக்களின் தேசப்பற்றே அலாதிதான்! அபராதத் தொகையே ரூ. 25 கோடி என்றால் அகப்பட்டுக் கொள்ளாதவர்களால் எத்தனை கோடி நஷ்டம், யோசியுங்கள்!

ஆதாரம் : தினமணி
தகவல் : ஈ.டி. விஜயகுமார்

● எந்த ஒரு அலுவலகத்தின் வரவேற்பறையிலும் 'Silence Please' அல்லது 'Be Quiet' அல்லது 'ஷ்ஷ்ஷ்ஷ்ஷ்' என்று எழுதி ஒரு குட்டிக் குழந்தை ஆள்காட்டி விரலை உதடு அருகில் வைத்திருக்கும். இப்படிப்பட்ட வாசகங்களைத்தான் பார்த்திருக்கிறோம். ஆனால், 'எலக்‌ஷன் கமிஷன்' அலுவலகத்தின் வரவேற்பறையில் எழுதப்பட்ட வாசகம் என்ன தெரியுமா? பாருங்கள்... 'Here Silence is demanded' (சேஷனின் 'அதிகாரம்' சாமி!!)

– அரிச்சந்திரன்

தல்ல; இந்தியா முழுவதிலுமுள்ள பல பால்காரர்கள் இப்படித்தான் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் மூலம் தெரிய வந்திருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் பல பால் பண்ணைகளிலும் இப்படிப் பால் கறப்பதைத்தான் நடைமுறைகளாக வைத்துக் கொண்டிருக்கிறார்களாம்!

இந்த விஷயங்களெல்லாம் எங்கும் மூடு மந்திரமாகவே நடக்கவில்லை; எல்லாம் வெளிப்படையாகவே நடக்கின்றன. குறிப்பாக அரசாங்கத்துக்கு இது பற்றியெல்லாம் மிக நன்றாகவே தெரியும். அப்படியிருந்தும் அரசாங்கம் எதற்காகக் கையைக் கட்டிக் கொண்டு இருக்கிறது? இதைத்தான் பல ஆய்வாளர்களும் கேட்கிறார்கள்!

இதோடு, இன்னொரு அதிர்ச்சி தரக் கூடிய விஷயமும் பல இடங்களில நடக்கிறது. அதாவது தங்கள் மாடுகளிலிருந்து கறக்கப்படும் பாலை கேன்களில் அடைத்துத் தூரத்திலுள்ள விற்பனை இடங்களுக்கு எடுத்துச் செல்லும் பால்காரர்கள் என்ன செய்கிறார்கள் தெரியுமா? கேன்களிலுள்ள பாலை வாகனங்களில் எடுத்துச் செல்லுகிற போது ஏற்படும் அசைவுகளால் அந்தப் பால் உறைந்து போகாமலிருப்பதற்காக, பாலைக் கறந்தவுடனேயே அதில் சிறிதளவு யூரியாவைக் கலந்து விடுகிறார்களாம். யூரியாவால் பயிர் வளரும். மனிதர்கள் வளர முடியுமா?

சாராய ஆலைகளிலிருந்து வெளிவரும் கழிவுகளான 'மால்ட்' கொடுப்பதில் எந்தப் பிரச்னையும் இல்லையாம். ஆனால், அது ஆலைகளிலிருந்து வெளியேறுகிறபோதே ஃப்ரெஷ்ஷாகக் கொடுக்க வேண்டும்; இல்லையானால் காயவைத்துப் பதப்படுத்தித் தர வேண்டும். இரண்டுங்கெட்டானாகத் தருகிற போதுதான், 'மால்ட்'டில் காளான்கள் பூத்து, மாடுகளுக்குக் கெடுதலை உண்டாக்குகிறதாம். பக்குவமாகக் கொடுக்கிறபோது கூட அளவுக்கு அதிகமாகக் கொடுத்தால் அது மாடுகளுக்குக் கேடுதான் விளைவிக்குமென்று ஆய்வுகள் கூறுகின்றன.

இத்தனை பெரிய அபாயகரமான சூழ்நிலையிலும் நமது அரசாங்கம் குருடாகவும் செவிடாகவும் இருப்பதுதான் மகா கேவலமான விஷயம்; ஆக்ஸிடோசினை விட அதிகம் பாதிக்கிற விஷயம்!

— இளங்கோவன்



ஒரு

அதிகாலை ஏழு மணி. மழை பூத்தூற வாய்ப் பெய்து பூமியைக் குளிர்வித்திருக்கிறது. மொட்டவிழும் மலர்களின் இலேசான மணம் அந்த தென் சென்னைப் பகுதி வீட்டிற்குள் நுழையும்போதே வரவேற்கிறது. வராந்தாவில் ஆடு நாற்காலி, பளபளப்பான திண்ணை... கடந்து போய் வாசல் மணியை அழுத்தக் கை உயர்த்துகிறோம்... மூடிய கதவுகளுக்குப் பின்னாலிருந்து சுருதிப் பெட்டி ஒலிக்க, கை பின்வாங்கிக் கொள்கிறது.

"தேத்யான யோகானு சுதாபச்யன்..."

– உலகின் மூலை முடுக்குகளிலெல்லாம் உள்ளங்களை உருக்கிய குரல், அம்பாளை உருகி உருகிப் பாடுகிறது.

"மாம் பாஹி சர்வேச்வரி மோக்ஷ தாத்ரி..."

– துர்கா பஞ்சரத்னம் நிறைவுற, ஏகாந்த சேவையாக அம்பாளை தரிசித்த அமைதி நம்மை ஆட்கொள்கிறது.

ஒரு நிமிடம் காத்திருந்து, சுதாரித்துக் கொள்வதுடன், பிரார்த்தனை முடிந்ததை உறுதிப்படுத்திக் கொண்டு அழைப்பு மணி அடிக்கிறோம்.

உள்ளே... வரவேற்பறைச் சுவரில்... வாழ்நாளில் பெரும் பகுதியை சதாசிவம் – எம்.எஸ். தம்பதி சரித்திரம் படைப் பதிலேயே செலவிட்டதற்குச் சான்றான புகைப்படங்கள். அவற்றுக்கும் தமக்கும் உள்ள தொடர்பை சற்றும் வெளிக் காட்டாத எளிமையுடன் எம்.எஸ். கைத்தறிப் புடைவை யும் கையில் பனையோலை விசிறியுமாய், இலேசான கவலை படர்ந்த முகத்துடன் அமர்ந்திருக்கிறார்.

'எட்டு மணிக்கு ஒரு நிகழ்ச்சியில் குத்து விளக்கு ஏற்றப் போக வேண்டும். அத னால் பார்த்தசாரதியை (உறவி னர்) போனில் கூப்பிட்டு இன்று வரவேண்டாம் என்று சொல்ல வேண்டும்.'

டெலிபோன் எண்கள் அடங்கிய புத்தகத்தை அவர் புரட்ட, குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் என்று பலரது பெயர்களிடையே 'செம்மங்குடி குருஜி' என்ற பெயர் மட்டும் அவர் சொந்தக் கையெழுத் தில் தனித்துத் தெரிகிறது.

என்பதை நெருங்கும் கட்டத்திலும் தொட ரும் சிஷ்ய பாவம்! டெலிபோன் பேசி முடித்தவர் நமது வியப்பை ஒதுக்கித் தள்ளி விட்டு விளக்குகிறார் :

"இன்னமும் கச்சேரின்னா எனக்கு பயம்தான் தெரியுமோ...? மேடைல உட் கார்ந்து பாட ஆரம்பிக்கறப்போதான் அது தானா மறைஞ்சு போறது... பத்திரிகைக்குப் பேட்டி கொடுக்கறதுன்னா அதைவிட பயம்..."

– சிரிக்கிறார்.

சதாசிவம் தயாராகி வர, துவக்க



சுந்தரமான இல்லறம்

காரியங்களுக்குக் கணக்கு வழக்கின்றி உதவும் மனப்பாங்கிற்கு இதுவே அஸ்திவாரமோ என்று சிந்தித்தபடி புகைப்படங்கள் எடுக்கத் தயார் செய்கிறோம். பணியின் முக்கியத்துவம் கருதி, பெங்களூர் பயணம் முடித்து சென்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து அவசரமாய் வந்திருக்கிறார் யோகா.

புதுமணப்பெண்ணின் கூச்சத்துடன் கணவர் அருகே ஒடுங்கி நின்று ‘போஸ்’ கொடுக்கிறார் எம்.எஸ். ‘அவர்களை அசௌகரியப் படுத்துகிறோமோ...’ என்கிற நமது குற்ற உணர்வைப் புரிந்து கொண்டதுபோல் ‘ஜோக்’ அடித்து சூழ்நிலையைக் கலகலப்பாக்குகிறார் சதாசிவம்.

“எங்க வயசெல்லாம் போட்டோவுல வருமா...?” என்கிறார்.

செப்டெம்பர் பதினைந்தாம் தேதி (ஆவணி ஹஸ்தம்) சதாசிவம் 94வயது பூர்த்தி செய்கிறார். எம்.எஸ்.ஸுக்கு செப்டெம்பர் முப்பது அன்று (புரட்டாசி பரணி) எண்பது வயது முடிகிறது!

தமிழகமும் இந்தியாவும் தங்களில் ஓர் அம்சமாகக் கருதி ஏற்றிருக்கும் தம்பதி... பல வகைகளில் புரட்சி தம்பதி என்றே சொல்ல வேண்டும்!

விழாவுக்குப் புறப்பட உடைமாற்றி வருகிறார் எம்.எஸ். அரை நூற்றாண்டுக்கும் மேலாக அருகிருந்து உதவி வரும் பணியாளர் விசாலம் பூத் தொடுத்துத் தயாராய் வைத்திருக்கிறார்.

“இது போதும்... மீதியைத் திரும்பி வந்து வேணுமானா வைச்சுக்கறேன்...” துளி பூவானாலும் வீணாக்கக் கூடாது என்கிற சிக்கன உணர்வு. நல்ல




• காந்திஜியின் பிரார்த்தனைக் கூட்டத்தில் எம்.எஸ்—சதாசிவம்...

பேட்டிக்கென நாம் செல்லும் வேறொரு மாலைப் பொழுதில், தைரியத்தை வரவழைத்துக் கொண்டு இந்த எண்ணத்தை வெளியிட, சதாசிவம் சுபாவமாகச் சிரிக்கிறார்.

சாவித்திரி திரைப்படத்தில் எம்.எஸ்.ஸை ஆண் வேடம் தரித்து நடிக்கச் செய்ததை நினைவூட்டுகிறோம்...

"அப்போதான் மலேரியா ஜுரம் வந்து உடம்பு ரொம்ப தளர்ந்து போயிருந்தது. இரண்டு பேருமா ('கல்கி' மற்றும் சதாசிவம்) வந்து கேட்டுண்டப்போ முதல்ல அழுகையா வந்தது... அப்புறம் அவா எடுத்துச் சொல்லி



• மகள்கள் விஜயா, ராதாவுடன்...

தைரியமூட்டினா... நடிச்சுட்டேன்..." என்கிறார் எம்.எஸ்.

அந்தத் திரைப்படத்தில் அவர் இசைத்த 'ப்ருஹி முகுந்தேதி' பற்றி பேச்சு வருகிறது.

"அந்தப் பாட்டை எனக்கு மாமாதான் (செம்மங்குடி) சொல்லிக் கொடுத்தார்... அது சினிமாவினால ரொம்பப் பிரபலமான பிறகு ஒரு சமயம் மாமாகிட்டேயே சில பேர் கேட்டாளாம் : 'உங்களுக்கு எம்.எஸ். பாடின ப்ருஹி முகுந்தேதி தெரியுமா...?' அப்படின்னு...! அந்தக் காலத்துலே அவர் அதைச் சொல்லி சொல்லி ஆச்சர்யப்படுவார்..." - எம்.எஸ். நினைவுகூர்கிறார்.

"ஆனால் மீரா திரைப்படம்தான் அவள் வாழ்க்கையில் திருப்புமுனை... ஹிந்தி மீரா நாடு தழுவிய அளவில் புகழ் தேடித் தந்தது" என்கிறார் சதாசிவம். "சினிமாவையே விரும்பாத ராஜாஜி கூட, அந்தத் திரைப்படத்தை புண்ணிய தினங்களில் இந்தியா முழுவதும் காட்டச் செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். பக்திதான் இசைக்கு ஆதாரம் என்பதை அந்தத் திரைப்படம் ரொம்ப வலுவாக ஊர்ஜிதப்படுத்தியது."

இதை ஒப்புக் கொண்டு ஆமோதிக்கிறார் எம்.எஸ். "மீரா படத்தினாலே எனக்கே பக்தியோட மேன்மை புரிந்தது. அதோட இவரும் (சதாசிவம்) எப்பவுமே சொல்வார் : 'எந்தப் பாட்டானாலும் அர்த்தம் தெரிஞ்சு அதோட ஒன்றிப் பாடணும். அப்படிப் பாடினால்தான் கேட்கிற ரசிகர்களும் பாட்டோடு ஒன்றுவா...'. இதையேதான் கல்கி மாமாவும் (அமரர் கல்கி) சொல்லுவார். தமிழ்ப் பாட்டுகள் தேர்ந்தெடுத்துத் தந்து பாடச் சொல்லும்போது விளக்குவார்..."

எம்.எஸ்.ஸின் கச்சேரிகள் அனைத்தையும் சதாசிவம்தான் திட்டமிடுகிறார் என்பது ஊரறிந்த ரகசியம். "இத்தனை நாளா அவர் சொல்றதைத் தான் பாடிண்டிருக்கேன். ...என்ன குறைஞ்சு போச்சு...?" என்று அவர் சர்வசாதாரணமாய்ச் சொல்வதை நம் நவீன செவிகள் நம்பக்கூட மறுக்கின்றன.

'ஒரு கலைஞருக்குத் தம் நிகழ்ச்சியை நிர்ணயிக்கும் சுதந்தரம் வேண்டாமோ...?'

- பெண்மைக்கும் வாழ்க்கைக்கும் எம்.எஸ். வகுக்கும் இலக்கணங்களைப் பார்க்க நம் கேள்வி அனர்த்தமானது என்று உணர்கிறோம்.

இன்றைய தலைமுறை குறித்து மிகுந்த கவலையுடன் பேசுகிறார். "குடும்ப வாழ்க்கையினுடைய அருமையும் புனிதமும் இளையதலைமுறைக்குப் புரிய வேண்டும். ஒரு பெண்ணுக்குக் குடும்பமும் கணவனும்தான் முதல் கடமைகள்." மிக உறுதியாகச் சொல்கிறார். முகம் தெரியாதவர்கள் குடும்பத்தில் நேர்ந்த மணமுறிவுச் செய்தி கூட அவரைப் பதறச் செய்கிறது!

'மறக்க முடியாத நிகழ்ச்சிகளைச் சொல்லுங்கள்' என்று கேட்டால் எம்.எஸ். நினைவுகூர்வது மக்சேசே விருது பெற்றதையோ

H M V பெருமையுடன் வழங்கும்

ஸ்ரீ மீனாட்சி



சுப்ரபாதம்

முதலிய

துதிப் பாடல்கள்

சங்கீத கலாநிதி ஸ்ரீமதி

எம்.எஸ். சுப்புலக்ஷ்மி

பாடியது

இந்த ஒலிநாடாவில் அமரர் "கவிகோகில" Dr. V. ராகவன் அவர்கள் இயற்றிய மீனாட்சி சுப்ரபாதம் மற்றும் "சமஸ்கிருத" ஸ்லோகங்கள் ஒரு பக்கத்திலும், மதுரை மீனாட்சி அன்னையைப் போற்றும் தமிழ்ப் பாடல்கள் மறுபக்கத்திலும் செவிக்கு விருந்தளிக்கின்றன. பக்தி ரஸம் ததும்பும் திருமதி எம்.எஸ். சுப்புலக்ஷ்மியின் இனிய குரலில் இந்த ஒலி நாடா ரசிகப் பெருமக்களுக்கு ஓர் அரிய பொக்கிஷமாகும்.

RPG

அனைத்து **H M V** கேசட் வியாபாரிடகளிடமும் கிடைக்கும்.

HMV

SRI DURGA ARTS

ஆதீனங்களாக நடித்த ஆதீனங்கள்!



• தருமபுரம் ஆதீனம்

தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதய்யர் தொடருக்கான படப்பிடிப்பு. உ.வே. சாமிநாதய்யருக்கும் திருவாவடுதுறை ஆதீனம், தருமபுரம் ஆதீனம் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பு பற்றி எடுக்க வேண்டிய சூழ்நிலை. உ.வே. சாமிநாதய்யருக்கான தொடர்பு என்பது பழைய ஆதீனகர்த்தர்களுடன் என்பதால், அவர்களைப் போல் யாரை நடிக்க வைப்பது என்கிற குழப்பம். இந்த நிலையில் ஆதீனத்துக்குள் வந்து வேறொருவர் ஆதீனகர்த்தராக நடிப்பது சரியாக இருக்காது என்று இன்றைய ஆதீனகர்த்தர்கள் கருதினார்கள். என்ன செய்வது என்று குழம்பிய டைரக்டர் ஜகந்தான், இன்றைய குருமகாசந்நிதானங்களாக இருக்கிறவர்களிடமே பழைய ஆதீன கர்த்தர்களாக நடிக்கும்படி கேட்க, அவர்களும் அப்படியே நடித்துக் கொடுத்தார்களாம்!

—சுப்ர. பாலன்

மியூசிக் அகாடமியில் தலைமை தாங்கிய தையோ அல்ல...

"அப்போ எனக்கு ரொம்ப கடுமையா டைபாய்டு வந்துடுத்து. பெண்கள் இருவருக்கும் கல்யாணம் நிச்சயமாகவிருந்த சமயம்... இந்தக் கடமையை முடிக்காமல் போய்விடுவோமோன்னு ரொம்ப கவலைப்பட்டு பகவானை வேண்டிண்டேன்..." என்கிறார்.

காஞ்சி முனிவர் அருளால் உடல் குணமாகி, அவரது ஆசி பெற்று மீண்டு, இரு பெண்களுக்கும் ஒரே பந்தலில் திருமணம் நடத்தியதை மனநிறைவுடன் சொல்கிறார்.

உரையாடல் மீண்டும் 'பக்தி' என்கிற களத்துக்கே திரும்புகிறது.

சதாசிவம் பக்தியிலும் குறிப்பாக இசையிலும் ஈடுபாடு கொள்ளக் காரணம் என்ன...?

"அந்த நாட்களில் கிராமங்களில் எல்லாம் நாதஸ்வரம்தான் பிரதானமாக இசை ஞானத்தைப் பரப்பி வந்தது. கோவில் உத்ஸவங்கள், நித்ய பூஜைகள், பஜனை... மணக்காலில் (லால்குடி அருகே) எல்லாம் நடக்கும். அதோடு பாரதி பாடல்களில் ரொம்ப ஈடுபாடு உண்டு..." என்கிறார்.

"காற்றடிக்குது கடல் குமுறுது கண்ணை விழிப்பாய் நாயகனே..." - மெல்லிய, ஆனால் உற்சாகமான குரலில் பாடிக் காட்டுகிறார்.

"தீம்தரிகிட தீம்தரிகிட..." என்று பாடுகையில் அவரது மெலிந்த உடல் அசைந்து ஆடுகிறது.

" 'எங்கள் வேள்விக் கூடமீதில் ஏறுதே தீ தீ...' என்று பாடிக் கொண்டே அன்னியத் துணிகளைப் போட்டுக் கொளுத்துவோம்..." என்று சிலிர்ப்புடன் நினைவுகூர்கிறார்.

"அப்போதெல்லாம் தேசபக்தியும் தெய்வ பக்தியும்தான் வாழ்க்கையில் பிரதானமாய் இருக்கும்... இப்போ தோசை பக்திதான் இருக்கு..." ஆதங்கத்தை ஹாஸ்யத்தில் மறைத்துச் சொல்கிறார்.

பெங்களூரில் கதர் நிலையம் நடத்த ராஜாஜி தம்மை அனுப்பி வைத்ததையும் மதுரை வைத்யநாத அய்யர் தமது பாரதி பாடல்களைக் கேட்டு ஈர்க்கப்பட்டு சுதந்தரப் போராட்டத்தில் சேர்த்ததையும் குறிப்பிடுகிறார்.

ராஜாஜியின் அன்புக்கு அடையாளமான சம்பவங்களை அடுக்குகிறார்.

"ஒன்றரை மாதம் கடுங்காவல் தண்டனை முடிந்து அன்றுதான் விடுதலையாகி வந்திருந்தேன். உடனே நாக்பூரில் போராட்டத்துக்கு வரச் சொல்லி நண்பர்கள் அழைத்தார்கள். ராஜாஜி என்னை அனுப்ப மறுத்து விட்டார். 'அவன் அழகா இருக்கான்றதுக்காக அவனைக் கூப்பிடறேளா...! அனுப்ப முடியாது...' என்று சொல்லி விட்டார். ஆனால் மறுநாளே உள்ளூரில் மீண்டும் என்னைக் கைது செய்து விட்டார்கள். திரும்பவும் சிறைவாசம்...!"

சுப்ரமண்ய சிவாவின் சீடராக இருந்து பின்னர் காந்தி மார்க்கத்துக்கு மாறியவர் சதாசிவம். ராஜாஜியின் வழிகாட்டல் அவர்

அரசியல் சிந்தனையை வகுத்துக் கொள்ள உதவியது எனில், சிறு வயது முதலே நிகழ்ந்த ஆன்மீக சந்திப்புகள் அவரது பக்தி நெறியை நிர்ணயிக்க உதவியது.

"எனக்கு ஏழு வயதிருக்கும்போது மஹா பெரியவா மணக்காலுக்கு வந்திருந்தார். என் அப்பா ஒரு சன்னியாசிப் பிரியர். அப்போது பெரியவாளுக்கும் அப்பாவுக்கும் சந்திப்பு நேர்ந்தது. பிற்காலத்திலே பெரியவா என்னைக் கேட்டதுண்டு... 'உங்கப்பாவை உனக்கு நினைவிருக்கா...? பட்டை பட்டையா விபூதியும் ருத்ராக்ஷமுமா இருப்பார்...?' (சதாசிவம் மிக இளமையிலேயே தந்தையை இழந்தவர்) என்று பரிவோடு கேட்டார் பெரியவா... வாழ்க்கையில் பெரிய மஹான்களின் தொடர்பு ஏற்பட்டது ஒரு பாக்கியம். சிறு வயதில் ராமகிருஷ்ண பரமஹம்சரின் எழுத்துக்களைப் படிப்பேன். அப்புறம் ரமண மஹரிஷியிடம் ஈடுபாடு கொண்டேன். ஒருமுறை திருவண்ணாமலையில் அவரைப் பார்க்கப் போனபோது ஒரு மணி நேரம் அவரருகே அமர்ந்து தரிசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. ஒரு சொல் கூட இருவரும் பரிமாறிக் கொள்ளவில்லை. ஆனால் அந்த மௌனத்தில் அவர் எனக்கு நிறைய உணர்த்தினார்..." என்கிறார்.

ரமணமஹரிஷி நூற்றாண்டையொட்டி எம்.எஸ்.ஸின் இசை நிகழ்ச்சி செப்டெம்பர்


இளைஞர்கள் பார்வையில்...

எம்.எஸ்.ஸுக்கு வயலின் வாசித்து வருபவர் ஆர்.கே. ஸ்ரீராம்குமார். வயது 29! மிருதங்கம் வாசிப்பவர் கே.வி. பிரசாத் – வயது 38. இந்த இளைஞர்கள் இருவருமே வியப்பும் மரியாதையும் மேலிட தங்கள் அனுபவங்களைக் கூறினார்கள்.

ஸ்ரீராம்குமார் : என் தாத்தா ஆர்.கே. வெங்கட்ராம சாஸ்திரி, அம்மாவுக்கு (எம்.எஸ்.) நிறைய வாசித்திருக்கிறார். எங்கள் குடும்பங்களுக் கிடையே தொடர்பு இருந்தவண்ணமிருந்தது. அம்மாவைப் பார்க்கப்போகும்போது, என்னை வாசிக்கச் செய்து கேட்பார், திருத்துவார்; யோசனைகள் சொல்லுவார். 'ஒருநாள் நீ ரொம்பப் பெரியாளாகி எம்.எஸ்.ஸுக்கு வாசிக்கணும்னு போய்டப் போறே..' என்று நண்பன் விஜய் சிவா விளையாட்டாகச் சொல்லிக் கொண்டிருப்பான்.



• கே.வி. பிரசாத்



• ஆர்.கே. ஸ்ரீராம் குமார்

அவன் சொன்னது போலவே நடந்தது! திடீரென்று அம்மா ஒருநாள் போன் செய்து 'ஏப்ரல் 15 அன்று வாசிக்கணுமே' என்று கேட்டார். அதே தேதியில் நான் விஜய்க்கு வாசிக்க ஒப்புக் கொண்டிருந்தேன்! அந்தக் கச்சேரி மதுரையில்.. அம்மாவுக்கு மறுப்பு சொல்ல மனமில்லை என்றாலும் விஜய்க்குக் கொடுத்த வாக்கை மீற முடியவில்லை. அதனால் 'வேறு கச்சேரி இருக்கிறது' என்று அம்மாவிடம் சொல்லி விட்டேன்.

விஷயம் தெரிந்ததும் விஜய் உரிமையோடு திட்டித் தீர்த்தான். 'நான் வேறு ஆர்டிஸ்ட் தேடிப் போட்டுக் கொள்கிறேன். முதலில் அவர்களுக்குச் சம்மதம் சொல்லு' என்று அவன் சொன்னதும் அம்மாவிடம் சம்மதம் தெரிவித்தேன்.

அன்று (15.4.89) தொடங்கி எத்தனையோ மேடைகளில் அவருக்கு வாசித்தாயிற்று. ஒவ்வொரு முறையும் முதல் முறை வாசிப்பது போல்தான் தோன்றுகிறது.

உச்சரிப்பு சுத்தம், ஆழ்ந்த பாவம் அளவான கமகம் என்று சங்கீதத்தின் உயர்வான அம்சங்களை மட்டுமின்றி வாழ்க்கைப் பண்புகளையும் அவர்களிடத்தில் கற்றுக் கொள்ள முடியும்.

இத்தனை உயர்விலும் துலங்கும் இயல்

15 அன்று ஏற்பாடாகியிருக்கிறது. சதாசிவத்தின் 94வது பிறந்த நாளன்று அது நடைபெறும் பொருத்தம் நம்மை வியக்க வைக்கிறது. அதே போல், எம்.எஸ். வழங்கியிருக்கும் மீனாக்ஷி சுப்ரபாதம் காசெட் செப்டெம்பர் 12 அன்று வெளியிடப்படுவதிலும் ஒரு பொருத்தத்தை உணர்கிறோம். தமது எண்பதாவது பிறந்த தினத்தையொட்டி, தமது சொந்த ஊரான மதுரையின் நாயகி மீனாக்ஷியம்மனுக்கு எம்.எஸ். வழங்கும் இசைக் காணிக்கை இது என்று எண்ணமிடுகிறோம்.

திட்டமிடாமல் தேடி வந்த இந்தப் பொருத்தங்களைப் பற்றிய சிந்தனைகளின்றி இந்த தம்பதியின் வாழ்க்கை தொடர்கிறது. முதுமையின் சிரமங்களைப் பொருட்படுத்தாமல் பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்பதையும் இரண்டாம் பேருக்குத் தெரியாமல் பொருளுதவி செய்வதையும் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

"இந்த அரிய தம்பதியிடம் உங்களை மிகவும் ஈர்த்த விஷயம் எது...?" என்று 1954 முதல் உடனிருந்து உதவி வரும் ஆத்மநாதனைக் கேட்கிறோம்.

"மாமா (சதாசிவம்) ஒரு சம்பவத்தை அடிக்கடி சொல்லுவார். ஆனந்த விகடனில் வேலைக்கு அழைப்பு வந்தபோது, அதற்குப் போகக் கூட அவரிடம் கைக்காசு இருக்கவில்லை. நண்பர் ஒருவர் இவருடைய முகவாட்டத்தைப் பார்த்து, பாக்கெட்டிலிருந்த கடிதத்தையும் உரிமையோடு எடுத்துப் படித்து

பான எளிமை, சக கலைஞர்களைக் குடும்ப உறுப்பினர் போல் நடத்தும் பண்பு, எல்லாவற்றுக்கும் மேலாக, அம்மாவும் மாமாவும் இணைந்து நடத்தும் தியாக வாழ்வு... என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.

இவ்வளவு பணிகளுக்கு இடையேயும் அணுகுவதற்குச் சுலபமானவராய் அவர் இருப்பது எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தும். நிறைய இளம் பாடகர்களுக்கு அறிவுரை சொல்லி வழிகாட்டியிருக்கிறார். பாட்டில் நிதானம் அவர் மிகவும் வலியுறுத்தும் அம்சம்.

அவரிடம் சில கீர்த்தனைகள் கற்றுக் கொள்ள வேண்டும் என்று எனக்கு நீண்ட நாள் ஆசை. அதை வெளிப்படுத்திய பின் ஒரு நாள் அவரே முதல் பாடமாக 'ஸ்ரீ கணபதி' கற்றுக் கொடுத்து ஆரம்பித்து வைத்தார். அதன் பிறகு பல சந்தர்ப்பங்களில் அம்மாவின் கைப்பட எழுதி வைத்த பாட்டு நோட்டுகளைப் புரட்டிப் பார்த்து 'இந்தக் கீர்த்தனை ஞாபகமிருந்தால் சொல்லிக் கொடுங்களேன்...' என்று கேட்பேன். உடனே கற்றுத் தந்துவிடுவார்!

கே.வி. பிரசாத் : 1971 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். எர்ணாகுளத்தில் குடியிருந்தோம். அங்கு எம்.எஸ். அம்மா கச்சேரி நடக்க இருந்தது. டிக்கெட் வாங்கிக் கொண்டு போய்க் கச்சேரி கேட்க அப்போது எங்கள் குடும்ப நிதி நிலைமை அனுமதிக்கவில்லை. வாங்க வழி இருந்தாலும் முடியாதபடிக்கு எல்லா டிக்கெட்டுகளும் படுவேகமாக விற்றுப் போய்விட்டன! எப்படியாவது கச்சேரி கேட்க வேண்டும் என்ற ஆசையில் என் நண்பனும் நானும் சபாவின் பின்புறச் சுவர் ஏறிக் குதித்து கட்டடத்துக்குள் நுழைந்து விட்டோம். இன்னொரு நண்பன் அங்கு மைக் ஆபரேட்டர். அவன் உதவியுடன் மேடையில் பக்கவாட்டுத் திரைக்கு அருகே அமர்ந்து கச்சேரியைக் கேட்டோம்.

இது நடந்து பதிமூன்று ஆண்டுகள் கழித்து, ஆல் இந்தியா ரேடியோவில் நான் மிருதங்க வித்வானாகப் பணியேற்ற புதிதில் அம்மா வரச் சொல்லிக் கூப்பிட்டதாகத் தெரிவித்தார் உடன் பணி செய்த கடையநல்லூர் வெங்கட்ராமன்.

"ரேடியோவில் உன் வாசிப்பைக் கேட்டு விட்டுத்தான் வரச் சொல்கிறார்கள்... வாத்தியத்துடன் வா" என்றார்.

அந்த முதல் சந்திப்பின்போது வாசித்துக் காட்டியது பிடித்துப் போக 'அடுத்து ஒரு கல்யாணக் கச்சேரி இருக்கிறது... வாசிக்கணும்' என்று சொல்லி விட்டார் மாமா.

அந்த நேரத்தில் எனக்கு எர்ணாகுளத்தில் கச்சேரி கேட்ட அனுபவம் நினைவுக்கு வர, அழுகையே வந்துவிட்டது. இப்படியொரு வாய்ப்புக் கிடைக்கும் என்று நான் அன்றைக்கு கனவில் கூட நினைக்கவில்லையே! அவருக்கு வாசிக்க ஆரம்பித்த பிறகு இந்தத் துறையில் எனக்குக் கிடைத்த அங்கீகாரமே தனிதான் என்று சொல்லத் தேவையில்லை.

'84 தொடங்கி ஏராளமான கச்சேரிகள் வாசித்து வருகிறேன். மேடையிலேயே வாசிப்பை ரசித்து உற்சாகப்படுத்தும் அவருடைய பாங்கு, பயணங்களின் போது தம் பழைய கால இசையுலக அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு எங்களுக்குப் புதிய விஷயங்களைச் சொல்லும் நேர்த்தி என்று அவரிடம் பல உயர் குணங்களைப் பார்க்கிறேன்.

எல்லாவற்றையும் விட அதிகமாய் என்னை பாதித்தது அவருடைய பக்தி. அவரையே தெய்வீக நிலைக்கு உயர்த்தி, ரசிகர்களையும் பக்தர்களாக்கிவிடும் அந்த ஆற்றலை நான் வேறு எந்தக் கலைஞரிடமும் பார்த்ததில்லை.

விஷயத்தைப் புரிந்து கொண்டிருக்கிறார். பத்து ரூபாய் நோட்டை மாமாவின் பாக்கெட்டில் செருகி அன்றைக்கு அவர் உதவியதுதான் மிகப் பெரிய திருப்புமுனையாக அமைந்தது. காலத்தில் செய்யும் உதவியின் அருமையை இப்படித் தம் சொந்த அனுபவத்தால் உணர்ந்த தாலோ என்னவோ, மாமாவும் கணக்கற்றவர்களுக்கு உதவியிருக்கிறார். அந்த உதவிகளெல்லாம் ஏதோ கையில் நிறைய பணம் சேர்ந்து விட்டது என்பதற்காகச் செய்ததையல்ல... பல சந்தர்ப்பங்களில், உதவி வேண்டிய நபர்களை, கச்சேரி நடக்கும் இடத்துக்கே வரச் செய்து, சன்மானத் தொகையை நேரடியாக அவரிடம் கொடுக்கச் செய்ததுண்டு..." உணர்ச்சி மேலிடப் பேசுகிறார் ஆத்மா.

மாலை விளக்கேற்றும் நேரம். தமது பூஜையறையில் ஸ்ரீ சத்ய சாயி பாபாவுக்கு ஆரத்தி எடுத்துப் பாடுகிறார் எம்.எஸ்.

"நாராயண நாராயண ஓம் சத்ய நாராயண நாராயண ஓம்..." அவரது ஆழ்ந்த நம்பிக்கையும் ஈடுபாடும் கற்பூர ஜோதியுடன் சேர்ந்து ஒளிர, பணியாளர்களும் குடும்பத்தாரும் திரண்டு வந்து ஆரத்தியில் பங்கேற்கிறார்கள்.

"பாபா, இந்த அறையில், இங்குதான் உட்கார்ந்தார், உணவு கொண்டார்" என்று தமது அறையைக் காட்டுகிறார் சதாசிவம். பாபாவின் திருவடி சரணங்கள், காஞ்சி முனிவரின் பிரும்மாண்ட படம், இஷ்ட தெய்வங்கள், குருநாதர்களின் படங்களுடன் ஒரு பிரத்யேகப் பூஜை அலமாரி... அதைப் பார்த்தபடி சொல்கிறார் சதாசிவம் :


"ராஜாஜி சொன்னதைத்தான் நினைத்துக் கொள்கிறேன்... 'பிறர் தன்னை நினைவு வைத்துக் கொள்ள வேண்டும் என ஆசைப் படுபவர்கள் ஒரு விஷயத்தை மறந்து போகிறார்கள்.... அப்படி அவர்களை நினைவு வைத்துக் கொள்வோரும் ஒருநாள் மறைந்து தானே போவார்கள்...!' என்று அவர் சொல்லுவார்."

– இந்த வாக்கியத்துடன் சந்திப்பை முடித்துக் கொண்டு கீதை படிக்க அமர்கிறார் சதாசிவம்.

ராஜாஜி எழுதியிருக்கும் உரையுடனான கீதை சுலோகங்கள் அடங்கிய காசெட் (சின்மயா மிஷன் பிரத்யேகமாக ஒலிப்பதிவு செய்தது) கம்பீரமாக ஒலிக்க ஆரம்பிக்கிறது.

- சிஷ்யா

அட்டை வண்ணப்படமும், படங்களும் : **யோகா**



"நான் உன்னை முதன் முதலா பெண் பார்க்க வந்தப்போ.. நீ என்னைப் பற்றி என்ன நினைச்சே தங்கம்?"

"உங்க கிருதா, மொரட்டு மீசை இதையெல்லாம் பார்த்தவுடனே எங்க எனக்கு நீங்க கட்டுப்படாம எதிர்த்துப் பேசிடுவீங்களோன்னு ரொம்ப பயந்தே போயிட்டேங்க...

- ஆர்.பி. செல்வம்



"எங்க புது மானேஜர் 'ராசிபலன்'ல ரொம்ப நம்பிக்கை உள்ளவர்."

"அப்படியா?"

"பின்னே பாரேன்... 'நாளைக்கு எனக்கு எட்டில் சந்திரன், உடல் அசதி ஏற்படும்'னு காரணம் காட்டி தற்செயல் விடுப்பு கேட்டதுக்கு உடனே அனுமதி குடுத்துட்டார்."

- இரா. சம்பத்குமார்

KALKI SHOPPING PAGE

மணக்குது! மணக்குது!! சாம்பார், ரசம்

Ruchi

உபயோகியுங்கள் ருசி கூட்டு பெருங்காயம் தூள்



RUCHI AGRO PRODUCTS PVT. LTD.
50, Giriappa Road, Madras - 600 017
TEL: 8269290, 8269438, 8275048

தனாகர்ஷண எந்திரங்கள்/சக்கரங்கள்

சர்வசக்தி வாய்ந்த முறைப்படி தயாரிக்கப்பட்ட இந்த எந்திரங்கள் தங்கள் இஷ்ட சித்தியை உடன் பூர்த்தி செய்கின்றன. ஜோதிட ஆகம சாஸ்திர முறையில் தயாரிக்கப்படும் இந்த எந்திரங்கள்/சக்கரங்களுக்கு உலகளவில் பெரும் ஆதரவு ஏற்பட்டுள்ளது. உங்கள் தேவைக்கு உடன் எழுதி பயன் பெறுங்கள்.

		ரக்ஷை ரூ.	எந்திரம் ரூ.
1.	குபேர தனாகர்ஷணம்	1000/-	1500/-
2.	ஜனாகர்ஷணம்	1000-	1500/-
3.	ஸ்வயம்வரா	750/-.	1250/-
4.	சந்தான கோபாலம்	750/-	1250/-
5.	வாகீஸ்வரி	750/-	1500/-
6.	மகாசூலினி	750/-	1500/-
7.	தோஷ நிவர்த்தி தன்வந்திரி	750/-	1500/-
8.	ப்ரத்யங்கிரா	1000/-	1500/-
9.	மகா சுதர்சனம்	750/-	1500/-
10.	மஹாலக்ஷ்மி ஸ்ரீ சக்ரா டாலர்	200/-	1500/-

தங்கள் பெயர்நக்ஷத்திரம் தெளிவான விலாசத்துடன் MO/DD SWAYAMVARALAYA (ஸ்வயம்வராலயா) பெயரில் சென்னையில் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும் வெளிநாட்டு அன்பர்கள் 300% கூடுதல் தொகை அனுப்பி பெற்றுக் கொள்ளவும் அதிக சக்தி வாய்ந்த (SUPER POTENCY) ரக்ஷை/எந்திரங்கள் விலை தனியாகத் தெரிந்து கொள்ளவும்.

ஸ்வயம்வராலயா

18, ஸ்டேஷன் ரோடு, மேற்கு மாம்பலம்,
சென்னை - 33, போன் : 425822, 4846427

TO SOLVE ALL YOUR PROBLEMS
CONSULT DIVINE ASTROLOGER, OCCULTIST
THETIYUR V MAHADEVAN WITH PRIOR APPOINTMENT.

FOR THE LOVERS OF SUNGUDI SAREES

A FINEST SUNGUDI SAREES OFFERED TO OUR CUSTOMERS PAY A VISIT AND SEE THE COOL AND COMFORT OF

SAKUNTHALA SAREES

ALSO AVAILABLE

- RANEE SAREES
- BENGAL COTTON SAREES
- BENGAL PRINTED PURE SILKS
- BATIK COTTON SAREES
- CHUDDIDAR MATERIALS (FINE & COLOURFUL BATIK WORKS)

MADURAI TEXTILES

SHOW ROOM FOR SUNGUDI SAREES
2, SIVAPRAKASAM ROAD,
PONDY BAZAAR, MADRAS - 17
(Near Agasthiyar Temple)

வாரம் ஒரு தகவல்

ஆசிரியர் தென்கச்சி. கோ. சுவாமிநாதன்

இந்தப் புத்தகம் இன்று ஒரு தகவலைப் போன்றே வாரம் ஒரு தகவலை வாசகர்களுக்கு ஆசிரியர் சுவையாகச் சொல்கிறார். படித்துப் பயன்பெற அநேக விஷயங்கள் உள்ளன.

இந்நூலில் ஞானமார்க்கம், வக்கீலும் வாய்மையும், குழப்பமும் தெளிவும், நல்லபழக்கம், மூளைக்கு வலிக்குமா, ரயில்பயணம், நாணயம், மூக்கின் முக்கியத்துவம், உயர்ந்த சிந்தனை போன்ற 214 கட்டுரைகள் அடங்கியுள்ளன. கல்கண்டில் வாராவாரம் வந்த கட்டுரைகள் புத்தக வடிவம் பெற்றுள்ளது.

வாழ்க்கையில் நீங்கள் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் இந்நூலில் நிறைய உள்ளன.

பக்கங்கள் – 312


விலை ரூ. 60–00

தேவையான புத்தகங்களை வி.பி.பி.யில் பெற கடிதம் எழுதுங்கள். வி.பி.பி. செலவு தனி. புத்தக வியாபாரிகள் எழுதவும்.

விபரங்களுக்கு

வானதி பதிப்பகம்

நெ. 13, தீனதயாளு தெரு,
தி. நகர், சென்னை – 600 017.
போன்: 4342810





1996 செப்டெம்பர் 15
தாது ஆவணி 30
மலர் : 55
இதழ் : 7

கல்கி



தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

'குல்லா போடும்' பேச்சு வார்த்தை!

காவிரிப் பேச்சு வார்த்தைக்காக பெங்களூர் சென்ற முதல்வர் கருணாநிதிக்கு, படேல் அணிவித்த ஜரிகைத் தலைப்பாகைக்கு மேலாக எந்தவொரு லாபமும் இல்லை! தமிழக முதல்வருக்கு, கர்நாடக முதல்வர் 'குல்லா போட்டு' அனுப்பி விட்டார் என்றே சொல்ல வேண்டும்.

பேச்சு வார்த்தைகளின் முடிவு பற்றிக் கேட்டால் 'ரகசியம்' என்கிறார் கர்நாடக முதல்வர். 'நல்ல தீர்ப்பை எதிர்நோக்குவதாகத்தான் உணர்கிறேன்' என்கிறார் கருணாநிதி.


அத்தனையும் பிடிகொடுக்காத வார்த்தைகள்!

பேச்சு வார்த்தை 'சுமுகமாக', 'நட்புணர்வோடு', 'விருந்தோம்பலோடு', 'நல்லுணர்வோடு' நடந்திருக்கிறது. ஆனால், தண்ணீர் வரத்தான் வழியைக் காணோம்!

எனினும், 'நல்ல தொடக்கம் இது' என்று மகிழ்ந்து கொண்டிருக்கிறார் தமிழக முதல்வர்!

இரு முதல்வர்கள் இருமுறை சந்தித்துப் பேசிய பிறகும் தொடக்கத்தின் அறிகுறிதான் தெரிகிறதேயொழிய, மக்கள் பிரச்னைக்கு விடிவைக் காணோம்.

நடுவர் மன்றத் தீர்ப்பை அமுல்படுத்தும்படி, மத்திய அரசு மூலம் கர்நாடக மாநில அரசுக்கு அழுத்தம் கொடுத்தாக வேண்டும். ராஜிநாமா செய்துவிட்டுப் போன நடுவர் மன்றத்



தலைவருக்குப் பதில் வேறொருவரை நியமிக்கும்படி, மத்திய அரசை நிர்ப்பந்திக்க வேண்டும்.

ஆனால் நடப்பது என்ன...? கர்நாடகா - தமிழக எல்லையில், கர்நாடக அரசு காவிரிக்குக் குறுக்கே புதிய அணையினை அமைத்து மின் உற்பத்தி தொடங்க இருக்கிறது. மின் உற்பத்தி முடித்து, உபரி நீரைத் தமிழகத்தின் பாசனத்துக்குத் தந்துவிடுகிறோம் என்பது கர்நாடகத்தின் வாக்குறுதி. ஆனால் முந்தைய அனுபவங்களைக் கொண்டு பார்க்கும்போது, இதை நம்புவதற்கில்லை.


தமிழ்நாட்டில் இருபது அனல்மின் நிலையங்கள் அமைக்கத் திட்டமிட்டிருக்கிறார் கருணாநிதி. கர்நாடகமும் அவ்வாறே தனது அனல்மின் உற்பத்தியைப் பலப்படுத்திக் கொள்ளலாமே.

'பிரச்னையை சுமுகமாக உரையாடித் தீர்த்துக் கொள்ளுங்கள்' என்ற உச்சநீதி மன்ற அறிவுரையை நிறைவேற்றிய திருப்தியைக் காவிரிப் பேச்சு வார்த்தைகள் அளிக்கலாம்.... ஆனால் பேச்சு வார்த்தை, மேலும் பேச்சு வார்த்தை என்று தேதி குறித்து, சம்பிரதாயமாய் சிரித்து போட்டோ வெளியிடச் செய்வதால் கருகிய பயிர் மீளுமா? வாடிய வயிறு நிறையுமா?...

நிராகரிக்கப்பட்ட 'ஜெ' மனு!

சுப்ரமண்யம் சுவாமி தாக்கல் செய்த புகாரின் பேரில், ஜெயலலிதாவின் சொத்து விவரங்களை ஆராய நியமிக்கப்பட்டார் உயர் போலீஸ் அதிகாரி லதிகா சரண்.

இந்த நியமனத்தை ஆட்சேபித்து மனுச் செய்தார் ஜெயலலிதா. விசாரணை செய்ய வேண்டிய அதிகாரியின் பெயரைக் குறிப்பிடும் உரிமை, நீதிபதிக்குக் கிடையாது என்று வாதிட்டார்.



தலைவியை ஒரு படி விஞ்சிய சேடப்பட்டி முத்தையா, தாம் சபாநாயகராக இருந்ததால், ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழ் தம்பேரில் நடவடிக்கையே எடுக்கலாகாது என்று மனு தாக்கல் செய்தார்! அரசு ஊழியர்களுக்கு ஏற்பட்டது ஊழல் தடுப்புச் சட்டம்; சபாநாயகர் அரசு ஊழியர் அல்ல என்பது அவர் வாதம்!

விசாரணைக்குத் தடைகோரிய இரண்டு மனுக்களையும் தள்ளுபடி செய்துவிட்டது உயர்நீதி மன்றம். இந்தத் தீர்ப்புகள் முக்கியத்துவம் வாய்ந்தவை.

ஜெயலலிதாவும் சரி, சேடப்பட்டி முத்தையாவும் சரி, நீதி விசாரணையைத் தாமதப்படுத்து வதற்கே இந்தத் தடைகோரும் நடைமுறைகளைக் கையாண்டிருக்கிறார்கள் என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது.

இந்திய சட்ட அமைப்பானது, ஒரு குற்றவாளி தப்பினாலும் ஒரு நிரபராதி தவறாக தண்டனை பெறக்கூடாது என்ற உயரிய நோக்கின் அடிப்படையில் வகுக்கப்பட்டது. எனவே குற்றம்சாட்டப் பெற்றவருக்கு நிறைய பாதுகாப்புகளை உள்ளடக்கியது.

துரதிர்ஷ்டவசமாக, இந்த உயர்நோக்கைக் கொச்சைப்படுத்தி, அற்ப காரணங்களைக் காட்டி நீதி விசாரணையைத் தாமதப்படுத்துவது வழக்கமாகி வருகிறது.

விஷயம் தெரிந்த அரசியல் தலைவர்களே இத்தகைய செயல்களில் அதிகமாக ஈடுபடுகிறார்கள் என்பது மேலும் வேதனைக்குரியது.

தவறுகள் நடக்கவில்லை என்பதில் உறுதியாய் இருப்பவர்கள், விசாரணையைச் சந்தித்து, தங்கள் தரப்பை நிரூபிக்கலாமே. அதை விடுத்து, விசாரணைக்கே முட்டுக்கட்டை மேல் முட்டுக்கட்டை போடுவதென்பது, அவர்கள் பேரிலுள்ள சந்தேகத்தையே அதிகரிக்கச் செய் கிறது.

ஹெக்டே விவகாரம் :

தலைகுனிய வைத்த பிரதமரின் பேச்சு!

ஹெக்டேவைக் கட்சியிலிருந்து விலக்கியவுடன் ஒன்றுமில்லாமல் போய்விடுவார் என்றுதான் தேவேகௌடா கருதியிருக்க வேண்டும். அந்த நடவடிக்கையால் ஹெக்டே கூட கொஞ்சம் ஸ்தம்பித்துத்தான் போனார். தாம் விலக்கப்பட்ட தினத்தன்று வட இந்தியாவில் எங்கோ சுற்றுப் பயணம் செய்து கொண்டிருந்த ஹெக்டே, அவசர அவசரமாக



பெங்களூர் திரும்பிய போதுதான் அவருடைய சொந்தச் செல்வாக்கு அவருக்கே புரிந்தது. தமது வீடு தேடி திரள் திரளாக வந்த தொண்டர் கூட்டத்தையும் பொது மக்களையும் பார்த்து மலைத்தார் ஹெக்டே. அப்புறம் என்ன? போராட இறங்கி விட்டார்.

தம்முடைய வீட்டிற்கு அருகாமையிலுள்ள சவுடய்யா மெமோரியல் ஹாலில் ஒரு கூட்டம் போட்டார். அரசாங்கம் பல முட்டுக்கட்டைகள் போட்டும் பலவிதமான கெடுபிடிகள் செய்தும் கூட எக்கச்சக்கக் கூட்டம். அன்று கூடிய அந்த பிரம்மாண்ட கூட்டம், மாநிலம் முழுக்கச் சுற்றுப்பயணம் செய்து தொண்டர்களைத் திரட்டும் உத்வேகத்தை ஹெக்டேவுக்குத் தர, கர்நாடகம் முழுக்க சுற்றுப்பயணத்தை ஆரம்பித்தார்.

பிரதமர் தேவேகௌடாவும் கர்நாடக முதல்வர் ஜே.எச். படேலும் இந்தச் சுற்றுப் பயணங்களை உன்னிப்பாக கவனிக்க ஆரம்பித்தனர். ஹெக்டே சென்ற இடங்களிலெல்லாம் கூட்டம் அலைமோதியது. கர்நாடகத்தின் உள்மாவட்டங்களில் இதுவரை எந்தக் கர்நாடகத் தலைவருக்கும் இந்த அளவு கூட்டம் கூடியதில்லை!

ஹெக்டேவின் மாநில அளவிலான சுற்றுப்பயணம், மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ள பாதிப்பைத் தகர்ப்பதற்காக, அவர் சென்ற அதே மாவட்டங்களுக்கு தேவேகௌடாவை அழைத்துப் போய் பொதுக்கூட்டங்கள் நடத்த ஏற்பாடு செய்தது ஜனதாதளம். தவிர இதனை பிரதமரே விரும்பினார் என்றும் கேள்வி! தேவேகௌடாவின் நிகழ்ச்சிகளும் பொதுக்கூட்டங்களும் மிக பிரம்மாண்டமாக அமைய வேண்டும் என்பதற்காகச் சகலவிதமான அரசு எந்திரங்களும் முடுக்கி விடப்பட்டன. ஆனாலும் கூட்டத்தில் இயல்பாக இருக்க வேண்டிய உற்சாக உணர்வு மிஸ்ஸிங்!

தேவேகௌடா, ஹெக்டேவைக் கடுமையாகச் சாடிய போது அதை ஆதரித்து, போதிய கைத்தட்டலோ அங்கீகாரமோ கிடைக்கவில்லை. மாறாக ஹெக்டே தம்முடைய கூட்டங்களில் தேவேகௌடாவை நாக்குக்காகக் கிண்டலடிக்கும்போது பெரும் ஆரவாரம் எழுகிறது.

ஹெக்டே தேவேகௌடாவைத் தமது பேச்சில் தாக்குவதும், பதிலுக்கு கௌடா ஹெக்டேவைத் தாக்குவதுமாக இருக்கிறார்கள். தமிழக மக்களுக்குப் பழகிப் போன இம்மாதிரியான தனிநபர் தாக்குதல்கள் கர்நாடக மக்களுக்கு ரொம்பவும் புதுசு. அதுவும் ஒரு பொதுக் கூட்டத்தில் பொலிகாளை - நாய்கள் பற்றி தேவேகௌடா சொன்ன கதையைக் கேட்டுத் தலைகவிழாதவர்களே இல்லை. பிரதமரின் தரத்தையும் கலாசாரத்தையும் இந்த ஆபாசக் கதை காட்டுகிறது என்று எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்தன!

இன்னமும் பாராளுமன்ற உறுப்பினராக இல்லாத பிரதமர் ஏதாவது ஒரு இடைத் தேர்தலில் நின்று பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய கட்டாயம் இருக்கிறது. தேவேகௌடா பிரதமரானதும் கர்நாடகத்தின் ஏதாவதொரு பாராளுமன்றத் தொகுதியில் நின்று

ஜாம் ஜாமென்று ஜெயிப்பார் என்றுதான் எதிர்பார்க்கப் பட்டது. ஆனால் ஹெக்டேவின் வெளியேற்றத்துக்குப் பிறகு நிலைமை முற்றிலும் மாறிப் போய்விட்டது. தேவேகௌடா எங்கே நின்றாலும் தோற்கடிப்போம் என்று ஹெக்டே ஆதர வாளர்களும் பாரதீய ஜனதாவும் அறிவித்துள்ளனர். இந்த நிலையில் பாராளுமன்றத்துக்கான இடைத்தேர்தலில் போட்டி யிடும் சங்கடத்தைப் பிரதமர் மேற்கொள்ள மாட்டார் என்றும், அதற்குப் பதிலாக கர்நாடகத்திலிருந்து ராஜ்யசபா வுக்குக் காலியாயிருக்கும் ஓர் இடத்தில் நின்று ராஜ்யசபா உறுப்பினராகி விடுவார் என்றும் சொல்லுகிறார்கள். இதை பிரதமர் மறுத்தாலும் அவர்கள் நம்பத் தயாராயில்லை.

இதற்கிடையில் சுற்றுப்பயணம் முடித்துக் கொண்டு திரும் பிய (சில இடங்களில் கல்லெறித் தாக்குதல்களும் நடந்தன!) ஹெக்டேவுடன் ஏழு மேல்சபை உறுப்பினர்கள் சேர்ந்திருக் கிறார்கள். விரைவில் பெரும்பாலான எம்.எல்.ஏக்கள் அவர் பக்கம் போய் ஆட்சி மாறவும் வாய்ப்பிருக்கிறது என்பதாக ஓர் அரசியல் கணிப்பும் எதிர்பார்க்கப்படுகிறது.

"இந்திரா காந்தி மிகப் பெரிய மெஜாரிடியுடன் ஆட்சி செய்து கொண்டிருந்த போது கர்நாடகத்தில் எதிர்க்கட்சி முதலமைச்சராக வந்தவர் ஹெக்டே. ஹெக்டே அரசைக் கவிழ்க்கவும் அவருக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்தவும் தம்மாலான அத்தனை முயற்சிகளையும் செய்தார் அன்றைய இந்திரா காந்தி. இந்திராவின் அத்தனை முயற்சி களையும் தம்முடைய திறமையாலும் தந்திரத்தாலும் முறியடித்தவர் ஹெக்டே. தவிர பிரமாதமான நிர்வாகத்தை யும் தந்தார். இந்த இரண்டும் சேர்ந்து கர்நாடக மக்கள் மத்தியில் அவருக்கொரு இமேஜை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த இமேஜைக் குறைத்து மதிப்பிட்டு விட்டார் இன்றைய பிரதமர்" - என்கிறார் ஹெக்டேவின் தீவிர ஆதரவாளர் ஒருவர். "தவிர அப்படிப்பட்ட இந்திரா காந்தியாலேயே ஹெக்டேவை ஒன்றும் செய்ய முடியவில்லை. நம்ம கௌடரு எம்மாத்திரம்?" என்பதும் அவருடைய கேள்வி.

அழகிப் போட்டியும் அதிரடி எதிர்ப்பும்!

• ஹெக்டே : அலைமோதும் கூட்டம்...



இந்த ஆண்டின் உலக அழகிப் போட்டியை பெங் களூரில் நடத்தும் உரிமை யைப் பெற்ற அமிதாப் பச்சன், அதற்கான பூர் வாங்க வேலைகளை ஜரூராக ஆரம்பித்து விட்டார். இதற்கிடை யில் "அழகிப் போட் டியை பெங்களூரில் நடத்தவிட மாட் டோம். இது நம் பண் பாட்டிற்கும் பாரம் பரியத்திற்கும் களங் கத்தை உண்டாக் கும் ஒரு நிகழ்ச்சி. அழகிப் போட்டி என்ற பெயரில் பெண் களை அரைநிர்வாணமாக வலம் வரச் செய்து அவமானப்படுத்து கிறார்கள். இதனை நாங்கள்



• அமிதாப் : என்ன செய்யப் போகிறார்?

அனுமதிக்கவே முடியாது. என்ன விலை கொடுத்தாகிலும் இந்த நிகழ்ச்சியை எதிர்ப்போம். நடக்க விடாமலேயே செய்வோம்" என்று அறிவித்திருக்கிறது. 'மகிள ஜாக்ரன்' - என்ற பெண்கள் அமைப்பு. அதன் தலைவியான சசிகலா ஒருபடி மேலே போய் "இதற்காக நாங்கள் தற்கொலைப் படையொன்று அமைக்கவிருக்கி றோம். அழகிப் போட்டி நடக்கும் இடங்களுக்குச் சென்று எங்க ளையே நாங்கள் தீ வைத்துக் கொளுத்திக் கொள்வோம்" என்று கூறியிருக்கிறார்.

அன்னிய நாட்டின் முதலீடு களையும் வர்த்தகரீதியான பிற தொடர்புகளையும் நம் நாட்டில் அனுமதிக்க மாட்டோம் என்று தொடர்ந்து எதிர்ப்புத் தெரி வித்து வரும் கர்நாடக விவசாயி கள் சங்கத் தலைவர் பேராசிரியர் நஞ்சுண்டசாமியும் தம்முடைய பங்கிற்குக் களத்தில்

எறும்பார் கடிக்கிறார்!

"பொதுவாழ்க்கையில் இதைப் போன்ற 'ரெய்டுகள்' சர்வ சாதாரணம்... இதில் அரசியல் நோக்கு எதுவும் இல்லை..."

— தம் இல்லத்தில் நடத்தப்பட்ட சோதனை குறித்து முன்னாள் அமைச்சர் கண்ணப்பன்.



வந்தது ஆபத்து...

தன் மீது ஏதும் பட்ட உடனே உடலைச் சுருட்டிக் கொள்ளும் சாதுவான மரவட்டை கூட தற்போது விவசாயப் பொருள்களை அழிக்கும் பூச்சி வகைகளில் ஒன்றாகி, மனித இனத்தின் எதிரியாக மாறிவிட்டது! மழைக் காலங்களில் ஈரமாக இருக்கும் மண்ணில் மரவட்டைகள் பெருவாரியாகக் காணப் படும். மனிதனுக்குத் தேவையற்ற ஈரமான கழிவுப் பொருள்களே மரவட்டையின் பாரம்பரிய உணவு. ஆனால் தற்போது விவசாயிகள் இயற்கை உரத்தை விட்டு விட்டு மிக அதிகமான ரசாயன உரங்களை உபயோகிப்பதால் மரவட்டைகளின் உணவான கழிவுப் பொருள்கள், மேல் மண்ணில் இல்லாமல் போகிறது. எனவே மரவட்டைகள் பயிர்களைத் தம் உணவாக்கிக் கொள்ள ஆரம்பித்து விட்டன!

ஆதாரம் : ஹிந்து

தகவல் : எம்.எஸ். நளினி

"பிரார்த்தனை முடிந்தது. எனக்கு வேண்டிய சக்தி கிடைத்துவிட்டது" என்று கூறிக் கொண்டே பாதிரி யாருக்கு வணக்கம் சொல்லித் திரும்பினார் ஆபிரகாம் லிங்கன்.

நண்பர் கேட்டார், "எதற்குப் பிரார்த்தனை? கடவுளை எதிரியின் பக்கம் செல்லாமல், நம் பக்கம் இழுப்பதற்குத்தானே?"

அதற்கு லிங்கன் சொன்னார்: "கடவுள் என் பக்கம் அல்லது எதிரியின் பக்கம் என்பதற்கே இட மில்லை! நாம்தான் கடவுள் பக்கம் இருக்க வேண் டும்! அதற்குத்தான் பிரார்த்தனை."

— மேல் நாட்டு மேதைகள் நூலிலிருந்து.

கே.ஏ. காளிமுத்து

குறித்திருக்கிறார். "வெளிநாட்டுப் பண முதலைகள் மொத்த உலகத்தையும் தங்களின் கீழ் கொண்டு வந்து விடச் செய்யும் பலவிதமான முயற்சி களில் இதுவும் ஒன்று. மேற்கத்திய நாடு களில் மட்டுமே நடத்திக் கொண்டிருந்த இதுபோன்ற நிகழ்ச்சிகளைப் பிற இடங் களுக்குப் பரவச் செய்து, முதலில் சமு தாயச் சீரழிவை உண்டுபண்ண வேண்டும் என்பதுதான் அவர்களின் திட்டம். இப் போது அவர்களது பார்வை ஆசியாவின் மீதும் லத்தீன் அமெரிக்காவின் மீதும் விழுந்திருக்கிறது. இந்தியாவை அந்நிய பண முதலீட்டாளர்களின் ஆக்கிரமிப்புக்குள் கொண்டு வருவதற்குத் துணைபோகிறவர் தான் நம்முடைய பிரதமர் தேவேகௌடா. ஜே.எச். படேலும் இந்தச் சிந்தனைகள் உள்ளவர் தாம். இந்தப் போட்டியை நிறுத்த எம்மாதிரியான போராட்டங்களில் இறங்குவது என்பதை நாங்கள் இன்னமும் தீர்மானிக்கவில்லை. விரைவில் அதுபற்றி முடிவு செய்து அறிவிக்க இருக்கின்றேன்" - என்றிருக்கிறார்.

பாரதீய ஜனதா கட்சி எம்.எல்.ஏவும் பரபரப்பிற்குப் பெயர்போன பெண்மணியு மான பிரமிளா நேசர்கி "ஆபாசம் என்பது டி.வியிலும் சினிமாக்களிலும் வரக்கூடாது என்பதற்கே சுப்ரீம் கோர்ட் சமீபத்தில் திட்டவட்டமாகத் தனது கருத்தைத் தெரி வித்திருக்கிறது. பெண்களைப் பொது இடத் தில் நாகரிகமற்ற முறையில் நடத்தக் கூடாது என்று சட்டங்களும் சொல்கின் றன. அப்படியிருக்க, அமிதாப்பச்சனும் மத்திய மாநில அரசுகளும் எப்படி நமது கலாசாரத்துக்கு எதிரான இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளுக்குத் துணை போகின்றன என்று தெரியவில்லை. இது சம்பந்தமான ஒட்டுமொத்தப் போராட்டங்களுக்கு நான் தலைமை ஏற்கத் தயார்!" என்று அறிவித் திருக்கிறார். இன்னமும் பல்வேறு கன்னட அமைப்புகளும் வாட்டாள் நாகராஜின் கன்னடர் கட்சியும் எதிர்ப்புத் தெரிவித் திருக்கின்றன.

இதையெல்லாம் எதிர்பார்த்தே தமது முயற்சிகளை அமிதாப்பச்சன் துவக்கியிருக் கிறார் என்றும் சொல்லப்படுகிறது. எவ்வித அசம்பாவிதங்களும் நடந்து விடாமல் இருக்கும் பொருட்டுத்தான் சமீபத்தில் பால்கே அவார்டு பெற்ற நடிகர் ராஜ் குமாரை வாழ்த்துவது போல், அவர் வீடு தேடிச் சென்று அமிதாப்பச்சன் சந்தித்து விட்டு வந்தார் என்றும் சொல்லப்படு கிறது.

பெங்களூரிலிருந்து : **அமுதவன்**

காற்றில் வரைந்த கோலங்கள்

தி. சிவசுப்பிரமணியன்



வாழ்க்கை என்பது சில சமயம் கியூ வரிசை மாதிரி ஆகிப் போகிறது. தன் வாழ்க்கையில் எல்லா விஷயமும் இது மாதிரிதான் நடந்தேறி இருப்பதாய்க் கார்த்தீசனுக்குத் தோன்றிற்று.

கார்த்தீசன் பிளஸ்-2 முடித்ததும், அப்பாதான் அவனை பி.எஸ்ஸி. ரசாயனம் படிக்கச் சொன்னார். ரசாயனத்துக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்றார்.

ஆனால் கார்த்தீசனுக்கு ஏனோ ரசாயனம் பிடிக்காது போயிற்று. அதற்காக அவன் சரிவரப் படிக்காது இருக்கவில்லை. முதல் வகுப்பில் தேர்வாகி முடித்தான். வழக்கமான முன்மாதிரிகள் போல், தினசரிகள் பார்த்து வேலைக்கு மனுச் செய்யலானான்.

இந்தக் காலகட்டத்தில் 'இண்டர்வ்யூ' நிமித்தம் நிறைய இடங்கள் செல்ல முடிந்தது. பலதரப்பட்ட மனிதர்களை உணர முடிந்தது.

ஆனால் யாவும் கொஞ்ச காலம்தான். 'சும்மா இருக்க வேண்டாமே' என்று அப்பாவுடன் விவசாயம் பார்க்கப் போக வேண்டி வந்தது. கிராமத்திலேயே வளர்ந்தவனாதலால், பெரிதாய்க் கஷ்டம் ஏதுமில்லை. வீட்டில் டிராக்டர் இருந்தது. அந்தச் சமயத்தில்தான் ஏதோ காரணங்களுக்காய் டிரைவர் நின்று போக, கார்த்தீசன் டிராக்டர் டிரைவர் ஆனான்.

அதன் பிறகு வாழ்க்கை ஒரு விசித்திரக் கோணத்தில் திரும்பிற்று. நேரம் காலம் பாராது உழைக்க வேண்டி இருந்தது. உழைத்த உழைப்புக்குப் பலன் இருந்தது. கையில் கொஞ்சம் காசு பார்க்க முடிந்தது.

உழைப்பும், அதற்கேற்ற பலனும், ஓரளவு காசும் வாழ்க்கையை நிறைவாக்கிற்று. அந்தச் சமயம், வீடு அவனுக்காய் பெண் பார்க்க ஆரம்பித்தது. இதில் ஒரு சிக்கல் வந்து சேர்ந்தது. கார்த்தீசன் படித்த பெண்ணையே மணம் செய்ய விரும்பினான்.

ஆனால் படித்த பெண்ணின் வீட்டார் விவசாயி மாப்பிள்ளைக்குப் பெண் தரச் சம்மதிக்கவில்லை.

"வெவசாயம்லாம் இப்ப சரிப்பட்டு வராதுங்க. ஒரு காலம் முப்போகம் விளைஞ்சது. இப்போ அப்படியா? காசு வர்ற மாதிரி

வரும். சட்டுனு கவுத்திரும். பையன் படிச்சிருக்கான். ஏதோ உத்யோகத்துல இருந்தான்னா, நம்பிப் பொண்ணு தரலாம். கோவிச்சுக்கப் படாது. பெண்ணைப் பெத்தவன் நிலைல இருந்து பார்த்தா உங்களுக்கே புரியும்."

எல்லாரும் தவறாது இதையே சொன்னார்கள். அரசு உத்யோகம் இல்லாவிடினும் கூட பரவாயில்லை. தனியார் வேலை செய்தாலும் சரிதான். ஆனால், விவசாயம் என்பது சரிப்படாத விஷயம், என்றார்கள்.

கல்யாணம் தட்டிப் போயிற்று.

இந்தக் குளறுபடியில் வேறு பல சிக்கல்கள் முளைத்தன. 'டிராக்டர் வருமானம்' முழுக்க செலவு செய்ததில், பாங்கில் கட்ட வேண்டிய தவணை கட்ட இயலாது போயிற்று. கடன் நெருக்க ஆரம்பித்தது. வண்டியில் ரிப்பேர், அது இது என நிறைய செலவுகள் வந்தது. தவிரவும் அந்த முறை வாழை போட்டதில், காற்று வீசி எல்லாம் சாய்ந்து விட பெருநஷ்டமாகிப் போயிற்று. வாழை வாழவும் வைக்கும். தாழவும் வைக்கும் என்பதை உண்மையாக்கிற்று.

பேசாமல் வண்டியை விற்றுக் கடனை அடைக்கலாம் என்று வீடு தீர்மானித்தது. வேதனையுடன் கார்த்தீசன் அதற்குச் சம்மதம் தர வேண்டியதாயிற்று. வண்டி விற்றுக் கிடைத்த காசில் கடன் அடைத்து, மீதிக் காசுடன் கார்த்தீசன் உத்தியோகம் தேடி சென்னைக்குப் போக வேண்டியதாயிற்று.

சென்னை என்கிற பெருநகரத்தில் எளிதாய் வேலை கிடைத்து விட்டது. ஆனால் சம்பளம் சொற்பம். "பொறுமையாய் இருப்பின் நாலைந்து வருடங்களில் வேலை நிரந்தரமாகி ஓரளவு காசு கையில் வரும் என்று சொல்லப் பட்டது. வாஸ்தவம்தான். இருபத்தி இரண்டு வயதில் அவ்விதம் வந்திருப்பின், இருபத்து ஏழு வயதில் ஒரு 'நிலைக்கு' வந்து விட முடியும். ஆனால், வேலைக்குச் சேரும் போதே வயது இருபத்து ஏழு முடிந்து விட்டது கார்த்தீசனுக்கு. வாழ்க்கையில் ஒரு 'பொசிஷனுக்கு' வர முப்பத்திரண்டு வயதுக்கு மேல் ஆகிவிடும். அதன் பிறகு திருமணம் செய்து, குழந்தைகள் பெற்று...

கார்த்தீசன் கவலை அதிகமாயிற்று. 'வேறு வழியில்லை, இதுதான் விதி' என்று ஏற்றுக் கொள்ள வேண்டி வந்தது. ஆயினும் வாழ்க்கை என்பது இனிப்பும், கசப்புமான விஷயம். வாழ்வில் முன்னேற, சந்தர்ப்பம் மறுபடி ஒருமுறை கதவு தட்டியது. கார்த்தீசனின் அக்காள் கணவன் வழியில்.

கார்த்தீசனின் அக்காள் கணவன் மத்திய ரிசர்வ் போலீசில், ஏ.எஸ்.ஐயாக இருக்கிறார். அதன் சென்னை குவார்ட்டர்சுக்குள் 'ஒரு காய்கறிக்கடை' வைக்க வாய்ப்பு வந்தது. வேலை பார்ப்பவரின் 'சிபாரிசு' இருந்தால், வாய்ப்பு எளிதில் கிடைக்கும் என்று சொல்லப் பட்டது. அதற்கு அதிக முதலீடு தேவையில்லை. பத்தாயிரம் ரூபாய் இருந்தால் போதும். கடை துவங்கி விடலாம். மிக எளிதானது அது. தொழில் போட்டி கிடையாது. நிச்சயம் வியாபாரம் ஆகும். முனைந்து செயல்பட, முன்னேறி விடலாம். கார்த்தீசனுக்கு மறுபடி நம்பிக்கை துளிர்த்தது.

"படிச்சவன் காய்கறிக் கடை வைக்கலாமா?" உறவு ஜனம் கேட்டது.

"வேறென்ன செய்றது?"

"பார்த்துட்டுத்தான் இருக்கேன். ஆனா படிப்புக்கேத்த வேலை இல்லியே. முன்னேற வாய்ப்பு இல்லையே."

"அதுக்காக நம்பிக்கை இழந்துடறதா? உன் பயோடேட்டா கொடு. எனக்குத் தெரிஞ்ச இடத்துல முயற்சி பண்றேன். கண்டிப்பா வேலை கிடைக்கும்."

"எப்போ? நாப்பது வயசுக்கு மேலயா?"

"இதான். இந்த வாய்க்கொழுப்புதான் உன்னை முன்னேற விடலை. போ, போயி காய்கறி வியாபாரம் பண்ணு. கஷ்டப்படு. எனக்கென்ன வந்துது. நல்லதைச் சொன்னா இதான் கதி."

உறவு சீறிற்று. இது இவ்விதம் என்றால், கார்த்தீசன் வீடும் இதற்கு எதிர்ப்புக் காட்டிற்று. "அதெல்லாம் கடையும் வேணாம். ஒண்ணும் வேணாம். பேசாம உத்தியோகம் பார்க்கச் சொல்லு. இதுலயே இருந்தா 'பெர்மனென்ட்' ஆயிரலாமாம். விசாரிச்சதில் சொன்னாங்க. பேசாம வேலையப் பாரு. அப்புறம், வேலை பார்க்கிற பொண்ணாப் பாத்துக் கல்யாணம் முடிச்சி வச்சிட்டா, ரெண்டு பேரும் சேர்ந்து சமாளிச்சிக்குவீங்க!" உபதேசம் வழங்கப் பட்டது.

கார்த்தீசனுக்கு விழிப்புத் தட்டிய போது மணி ஆறே முக்கால். பத்து மணிக்குத்தான் ஆபீஸ். இன்னும் முழுதாய் மூன்றே கால் மணி நேரம் இருக்கிறது. சோம்பலாய்க் கொஞ்ச நேரம் படுக்கையில் புரண்டு, பிறகு எழுந்து குளித்து வேலைக்குக் கிளம்பினான்.

பத்து மணிக்கு ஆபீஸ் சென்று கையெழுத்திட்டு, வேலை பார்க்க ஆரம்பித்த அரை மணியில் நீளமாய்க் கொட்டாவி விட்டான். "சாயங்காலம் ஒரு இடத்துக்குப் பெண் பார்க்கச் செல்ல வேண்டி இருக்கிறது. பெண் உத்யோகம் பார்க்கிறதாம். டீச்சர் வேலை. மாசம் எவ்வளவு வரும்? என் சம்பளமும், அவள் சம்பளமும் சேர்த்து எப்படிக் குடித்தனம் நடத்தலாம்?" கணக்குப் போடத் தொடங்கினான். அவ்விதம் கணக்குப் போடும்போதே, "அந்தப் பெண் எப்படி இருக்கும்?" - கனவு காணத் துவங்கினான் கார்த்தீசன்.

மற்றுமொரு சவால்! பொருளாதாரப் பெருக்கத்தில் முயல்!!

பார்ப்பதற்கு அழகானதும் ரம்மியமானதுமான சிறு முயலை இறைவன் படைத்தான். ஆமை முயலுக்கு சவால் விட்டபோது உலக பொருளாதாரம் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருந்தது. இன்று பலமுனைகளில் உலக பொருளாதாரம் வளர்ச்சியடைந்து வரும் நிலையில் முயலும் உலக பொருளாதார வளர்ச்சியிலும் தனிமனித பொருளாதார வளர்ச்சியலும் தன் பங்களிப்பை சிறந்த முறையில் செய்து வருகின்றது. தனிமனித பொருளாதார வளர்ச்சியில் "அங்கோராஸ் அக்ரோ பிரைவேட் லிமிடெட்" என்ற நிறுவனம் கீழ்காணும் திட்டத்தின் மூலம்தன பங்களிப்பை செய்து வருகின்றது.

திட்டம்					2-ம் வருட முடிவில் இடைக்கால வருமானம்		5-ம் வருட முடிவில் இறுதி வருமானம்	
திட்டம்	யூனிட்டுகளின் எண்ணிக்கை	முதலீடு	5 வருடத்திற்கு உத்திரவாதப் படுத்தப்பட்ட வருமானம்	வருடங்களுக்குப் பிறகு திரும்ப கிடைக்கும் முதலீடு	முயல்கள் எண்ணிக்கை	எதிர் பார்க்கப் படும் வருமானம்	முயல்கள் எண்ணிக்கை	எதிர் பார்க்கப் படும் வருமானம்
A	1	5000	1050	5000	50	5000	150	15000
B	5	25000	5250	25000	250	25000	800	80000
C	10	50000	10500	50000	600	60000	1750	175000
D	20	100000	21000	100000	1250	125000	3600	360000
Mini Giant		2000	420	2000	20	2000	60	6000

சிறப்பு அம்சங்கள்

- மிகக் குறைந்த முதலீடு ரூ. 5000/- (மினிஜயன்ட் ரூ. 2000/-)
- உத்தரவாதமிட்ட 21% வருட வருமானம் பின்தேதியிட்ட காசோலைகளாக (5 வருடத்திற்கு)
- 5 வருட இறுதியில் பின்தேதியிட்ட காசோலையாக திரும்ப கிடைக்கும் முதலீடு.
- 2-ம் வருட முடிவில் இடைக்கால வருமானம் 50 முயல்கள் (ரூ. 5000/- கணக்கிடப்பட்டது) 5-ம் வருட முடிவில் இறுதி வருமானம் 150 முயல்கள் (ரூ. 15,000/- கணக்கிடப்பட்டது) பின்தேதியிட்ட காசோலைகளாக.
- ஒரு வருட முடிவில் திட்டத்திலிருந்து விடுபடும் வசதி.
- விசா/மாஸ்டர் கார்டுகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

அங்கோராஸ் பைனான்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ்

- மிகக் குறைந்த முதலீடு ரூ. 10,000/- வட்டி 24% வரை. + காப்பீடு + சிறப்பு ஊக்கத் தொகை.

ANGORAS AGRO PVT. LTD.
703, Spencer Plaza,
769, Anna Salai,
Madras - 600 002.
Tel : 8522176/8525482
Fax : 044-8522176

ANGORAS FINANCE & INVESTMENTS
68, Gandhi Road,
Near National Theatre,
Tambaram West,
Madras - 600 045.





"வா, வா. உன்னைத்தான் எதிர்பார்த்துட்டிருக்கேன். சேதி தெரியுமா? ரோகிணி-ரகுவரன் கல்யாண நியூஸ் கேள்விப்பட்டியா?'' என்றான் தண்டபாணி.

"ஆமாம். நம்பவே முடியலை. கடை ஏழு வள்ளல்கள்ல ஒருத்தரை நினைச்சி ரொம்ப வருத்தப்பட்டேன். விடு. எப்படி திடீர்னு? முன்னாடியே லவ்வா?''

"நீ வேற. இன்னிய தேதிக்கு கோடம்பாக்கத்துல ஒரு பயலுக்கும் இந்த விஷயம் தெரியாது. அத்தனை பேருக்குமே எதிர்பாராத ஆச்சர்யம்தான்.''

"உனக்கு ஏதாவது விசேஷமா தெரியுமா?''

"பெரிசா லவ்வெல்லாம் ஒண்ணும் கிடையாதாம். ரெண்டுபேரும் பேசியிருக்காங்க. பிடிச்சிப் போயிடுச்சி. அவ்ளோதான்.''

"ரேவதி, ரஞ்சிதாவுக்குக் கூடத் தெரியாதாமா?''

"அது பத்தி ஏதும் நியூஸ் இல்லை. ஆனா இந்தக் கல்யாணத்துல பாதிக்கப்பட்டவர் நீ சொன்ன கடைஏழு வள்ளல்கள்ல ஒருத்தர் மட்டுமில்லை.''

"பின்னே?''

"விக்ரம்! தெரியுமில்லை. ஃபீல்டுல ரோகிணி-விக்ரமை இணைச்சி நிறைய பேச்சு அப்பப்ப வரும்.''

"கேள்விப்பட்டிருக்கேன்.''

"இன்னும் சுவாரஸ்யமான விஷயம் ஒண்ணு சொல்லட்டுமா? 'உல்லாசம்' படத்துல ரகுவரனும் விக்ரமும் சேர்ந்து நடிக்கறாங்க. அடுத்த வாரம் கோவாவுல ஷூட்டிங் இருக்கு. ரெண்டுபேரும் எதிரும் புதிருமா நடிச்சாகணும். எப்படி பேசிப்பாங்க, இவரு ரகுவரனுக்கு பொக்கே குடுப்பாரா, கை குடுப்பாரா, விஷ் பண்ணுவாரா, மூஞ்சியைத் தூக்கி வெச்சிப்பாரான்னு யூனிட் ஆளுங்க பரிதவிச்சிட்டிருக்காங்க.''

"அவுங்க எதுக்குப் பரிதவிக்கணும்? தவிக்க வேண்டியது வேற ஆள்.''

"எல்லாம் ஒரு க்யூரியாஸிட்டிதான். நேத்திக்கி, உல்லாசம் படத்து டைரக்டர்ஸ் ஜேடி-ஜெர்ரியைப் பார்த்தேன். 'அதென்னவோ தெரியலை. நாங்க ஒரு லவ் ஸ்டோரி ஆரம்பிச்சாலும் ஆரம்பிச்சோம். எங்க படத்துல நடிக்கற ஒவ்வொருத்தரும் ஏதாவது ஒரு காதல் விவகாரத்துல அடிபடறாங்கன்னு தமாஷா சொன்னாங்க.''

"ரகுவரன், விக்ரம் சரி. வேற யாராம்?''

" 'கருத்தம்மா'வின் 'தங்கை' தெரியுமில்லை. அந்த தாடிக்கார தெலுங்கு

ஹீரோவோட செமை லவ்ஸாம்."

"அப்புறம்?"

"அஜித்குமார். உனக்கே தெரியும், ஹீரா விவகாரம்."

"சும்மா இரு தண்டபாணி. காலைல தான் ஏவி.எம். 'ராசி' படத்து ஷூட்டிங்ல அஜித்தைப் பார்த்துட்டு வரேன். 'என்னங்க, நம்ம கல்கி இன்டர்வியூவுல 'we are good friends'னு சொல்லிட்டு, விகடன்ல காதலிக்கறேன்னு சொல்லியிருக்கீங்களே, ஒரு வாரத்துல ஒட்டி, காதலாயிருச்சான்னு கேட்டேன்."

"சபாஷ். என்ன சொன்னார்?"

" 'வெறுப்பேத்தாதீங்க. சுத்தி சுத்தி வந்து லவ் பண்றியா? லவ் பண்றியா?ன்னு கேட்டுட்டே இருந்தா ஒரு மனுஷன் என்ன பண்ணுவான்? வெறுத்துப் போயி, 'ஆமாம், போ. அப்படியே வெச்சிக்கங்க'ன்னு சொல்லிட்டேன். அதைப் புரிஞ்சிக்காம, 'அஜித்-ஹீரா லவ்'னு எழுதிட்டாங்க. வெறுத்துப் போயிட்டேன்' அப்படீன்னாரு."

"அப்ப லவ் இல்லையாமா?"

"ங்கொப்புறான இல்லைன்னு சத்தியம் பண்றார். நீ இல்லை; நான் இல்லை... ரோடுல யார் போனாலும் இழுத்துவெச்சி இது சம்பந்தமா ஒரு பிரசங்கமே நடத்திடறார். தெய்வீக நண்பர்கள்! போவட்டும். 'உல்லாசம்' விஷயத்துக்கு வா. இத்தனை நிஜ காதல் ஜோடிங்களை வெச்சிட்டு, எப்படிப் படம் எடுக்கறாங்களாம்? கேட்டியா?"

அஜித் ஏன் அப்படிச் சொன்னார்?

"கேக்காமலா? இது வரைக்கும் ஷூட்டிங்ல ஒரு பிரச்னை வரலை. ஸ்மூத்தா போயிட்டிருக்குன்னாங்க. தெரியுமா? உங்க பத்திரிகை பத்திப் பேச்செடுத்தாலே புல்லரிச்சிப் போயிடறாங்க ஜேடி-ஜெர்ரி ரெண்டுபேரும்."

"அட, என்னவாம் விஷயம்?"

"ஒரு வருஷம் முன்னாடி அவங்க டீ.வி. சீரியல் எடுத்திட்டிருக்கறப்ப நீங்க தான் முதல் முதல்ல பேட்டி எடுத்துப் போட்டு அடையாளம் காட்டினீங்களாம்?"

"ஆமா. 'கடிதம்'னு ஒரு சீரியல்னு ஞாபகம்."

"அதே. அந்த சீரியல் தான் அவங்களுக்கு இந்தப் படத்தையே வாங்கிக் குடுத்திருக்காம். அமிதாப்பச்சன் அந்த ரெண்டு எபிஸோட் சீரியல்லைப் பார்த்து பிரமிச்சுத்தான் கூப்பிட்டு படம் எடுக்கச் சொல்லியிருக்காரு."

"அட, பரவாயில்லையே? ஆனா ரெண்டு பேர் டைரக்ஷன்ல கிருஷ்ணன்-பஞ்சுவுக்கப்புறம் யாரும் கிளிக் ஆகலையே தண்டபாணி?"

"நான் கேட்டேனே?' என்ன சொன்னாங்க தெரியுமா? நாங்க ரெண்டு பேருன்ற நினைவே வர்றதில்லை. ஒரே ஆள் செய்யறாப்பல தான் இருக்குன்னாங்க. திருச்சி காலேஜுல படிச்சதுலேருந்து, பாலு மகேந்திராகிட்ட அஸிஸ்டென்ட்டா வொர்க் பண்ணதுலேருந்து, சீரியல் எடுத்திட்டிருந்ததுலேருந்து எப்பவும் ஒண்ணா, ஒண்ணா, ஒண்ணாவே இருக்காங்களாம்."

"சே, இதுதான்யா தெய்வீக நட்பு!"

"விடு. சத்யராஜ் ஒரு புது பாலிஸி அடாப்ட் பண்ணிருக்கார் தெரியுமா?"

"அதென்ன?"

"டபுள் ஹீரோ சப்ஜெக்ட்ஸ்-பரவலா, நிறைய பண்றதுன்னு."

"பரவாயில்லையே?"

"அதுவும் எப்படி? புது ஹீரோங்கூடவெல்லாம் நடிக்க சமீபத்துல ஒப்புதல் தந்திருக்கார். அஜித்குமாரோட சேர்ந்து ஒரு படம். அப்புறம் 'காதல் தேசம்' அப்பாஸோட ஒரு படம். 'உன்னை விட மாட்டேன்'னு டைட்டில்."

"ஆச்சர்யமா இருக்கே? எதனால இந்த திடீர் மாறுதல்?"

"கேட்டேன். ஒரு மாதிரி மோகனப் புன்னகை புரிஞ்சிட்டுப் போயிட்டார். இதை விட சுவாரஸ்யமான சமாசாரம் கேளு. 'உன்னை விட மாட்டேன்'ல சத்யராஜ் கேரக்டர் என்ன தெரியுமா? அமைதிப்படை மாதிரி வில்லனிக் ஹீரோ ரோல்."

"அமைச்சர் பதவி போனாலும், தலைவரோட துணிமணிகளை துவச்சாவது பொழச்சுக்குவேன்னு ஒரு காலத்துல பந்தாவா அறிக்கை விட்டீங்களா?"

"ஆமா? அதுக்கென்ன?"

"தலைவர் இப்போ உங்களை கையோட அழைச்சிக்கிட்டு வரச் சொன்னாரு. அழுக்கு ரொம்ப சேர்ந்து போச்சாம்..."

– ஆர்.பி.செல்வம்



"அப்படிப் போடு."

"கேரக்டர் என்னவா இருந்தா என்ன, வித்தியாசமா இருக்கணும், சூப்பரா ஓடணும் அவ்ளோதான். அதான் நம்ம பாலிஸி அப்படீங்கறார்."

"பரவாயில்லையே?"


"இதுல விசேஷம் என்னன்னா, 'உன்னை விட மாட்டேன்'- முக்காலே மூணு வாசி நகைச் சுவைப்படம். டயலாக் யார் தெரியுமா?"

"கிரேஸி மோகனா?"

"ப்ச்! புது ஆளுப்பா. இருப்பதிசாமி."

"அவர் நம்ம பத்திரிகை சாதிக்காரரில்லை? நடுவுல எங்கயோ காணாமப் போயிட்டாரு."

"எங்கயும் போகலை. 'வீரா' வுலேருந்து சுரேஷ் கிருஷ்ணாகிட்ட அஸிஸ்டெண்ட்டா இருந்தார். இப்ப இந்தப் படத்துல டயலாக் ரைட்டரா அறிமுகமாகறார். அடுத்த வருஷம் இதே கம்பெனி தயாரிப்புல ஒரு படம் டைரக்ட் பண்ணறார். கதையெல்லாம் ஓகே ஆயிடுச்சாம்."



"கேக்க சந்தோஷமா இருக்கு தண்டபாணி."

"ரொம்ப சந்தோஷப்படாதே. அடுத்த நியூஸ் சொன்னா வருத்தமாயிடுவே."

"சொல்லு."

"பாரதிராஜா- விஜயகாந்த்-ரோஜான்னு பெத்த பேருங்களா வெச்சி தமிழ்ச் செல்வன் எடுத்தும் ஒரு வாரம் கூட ஒழுங்கா போகாததுல தயாரிப்பாளர் ராமநாதன் செமை அப்செட். துட்டக் கொட்டிக் குடுத்தது இப்படி ஒரு ரெண்டுங்கெட்டான் ஆர்ட் பிலிம் எடுக்கத்தானான்னு பாக்கறவங்க கிட்டவெல்லாம் செமை புலம்பலாம்."

"நீ பார்த்தியா?"

"நான் எங்க? போன வாரம் விஜயகாந்த் ஆபீஸ் பக்கம் போயிருந்தனா? அங்க காதுல விழுந்தது. இதுல அல்டிமேட் சமாசாரம் என்னன்னா, வரிசையா ஒவ்வொரு படமா ஃபெயிலியர் ஆகிப்போக, விஜயகாந்த் ரொம்ப சீரியஸாகியிருக்காராம். அடுத்து வர்ற 'அலெக்சாண்டர்'ல பயங்கர மும்முரமா இருக்காராம். தூங்கறநேரம் தவிர மத்தபடி எப்பப்பாரு அந்தப் படத்துச் சிந்தனை தானாம்."

"வெற்றி பெற வாழ்த்திட்டு வந்தியா?"

"என் டைரக்ஷன்ல நடிச்சிங்கன்னா டெஃபனட்டா வெற்றி கிடைக்கும். ஒத்துக்கறீங்களான்னு கேக்கலாம்'னு இருக்கேன்?"

"அப்ப ஒரு நிஜ ஸ்டண்ட் காட்சி பார்க்கக் கூடிய வாய்ப்பு எனக்கு சீக்கிரம் கிடைக்கப் போறதுன்னு நினைக்கறேன். வரட்டுமா?"

- கிச்சா

"கட்சியிலிருந்து உங்களைக் கவிழ்க்க சதி நடக்குதுன்னு எப்படிச் சொல்றீங்க?"

"நேத்து எனக்கு மேடையில போட்டிருந்த நாற்காலிக்கு மூணு கால் மட்டும்தான் இருந்துச்சு!"

–கொங்கணாபுரம் வே.செந்தில்

SABARI INVESTMENTS AND PROPERTIES

18/17, First Floor, Third Cross St., opp. R.A. Puram, Corporation Office Complex,
(opp. Kaliappa Hospital), Madras - 600 028. Tele/Fax : 458931

DEPOSITS ARE ACCEPTED

SCHEME - I

CUMULATIVE DEPOSITS

Term (Months)	Minimum amount	Maturity Value for Rs. 5000	Annual yield % *
37	Rs. 5000	Rs. 10000	32.43
54	Rs. 5000	Rs. 15000	44.44
	and in multiples of Rs. 1000/-		

* Interest compounded monthly @ 24% p.a.

SCHEME - II

FIXED DEPOSITS

Term (Months)	Minimum Amount	Interest p.a.	Incentive on Deposit
12	Rs. 10000	22%	1.5%
24	Rs. 10000	23%	2%
36	Rs. 10000	24%	2.5%

+ ATTRACTIVE GIFTS

- ❑ Your Deposits are invested in Building Promotion activities, Vehicle hire purchase loan, etc.
- ❑ Company is managed by young well experienced dynamic persons with the guidence of professionals.
- ❑ Group Company of Sabari foundations Pvt. Ltd., which is already in Building Promotion activities with an annual turnover of more than Rs. 2.50 Crores.
- ❑ Post dated cheques will be issued in advance for the Interest & Deposit Amount.

7

உன்னோ வரலாமா?

இந்திரா சௌந்தர்ராஜன்

ஒரு நேர்கோடு வரைவதற்குள் நான்கு முறை மாவை அள்ளிவிட்டாள் சுகன்யா. கோல மாவு மொத்தமாகச் சேர்ந்து கொண்டு, ஒரு கம்பளி நூலைப்போல் கோணலும் மாணலுமாய் இருந்தது.

"ஒரு துளி மாவை எடுத்து, கட்டை விரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் 'மத்தியில் பக்குவமா இடைவெளிவிட்டு, இதோ - இப்படிக் கோடு இழுக்கணும்..." வசந்தி சொன்னபோது சுலபமாய்த்தான் தோன்றியது. அவள் நான்கு இழைகளைப் பிசிர் இல்லாமல் இழுப்பதைப் பார்க்க அதைவிட சுலபமாய் இருந்தது. ஆனால், மாவை எடுத்து முயற்சி பண்ண, அது மனம் சொன்னபடி கேட்டால்தானே!

"இதெல்லாம் இலேசா வந்துடுமா மன்னி... மூணு நாள் சாப்பிடாம தலைகீழா நிக்கணும், தெரியுமா...?" - பக்கத்தில் குந்தி உட்கார்ந்திருந்த வசந்தி, முகத்தை சிரியலாக்கிச் சொன்னபோது, அவள் கண்கள் மட்டும் குறும்பாக மின்னின.

ஒரு கணம் திகைத்து, அந்த கண்களைப் பார்த்ததும் கலகலவென்று சிரித்தாள் சுகன்யா.

"சிரிச்சுண்டே வாசல்ல உட்கார்ந்துட்டீங்கோ? இரண்டு பேரும்... மணி அஞ்சாச்சு... உள்ளே வந்து விளக்கேத்த வேண்டாமா?"

சுகன்யாவிடமிருந்து கோலமாவை வாங்கி, அவள் இழுத்திருந்த மொத்தைக் கோட்டைச் சுற்றியே அழகாக ஒரு புதிய வடிவத்தை உருவாக்கி விட்டாள் வசந்தி.

சுகி அதை வியந்து முடிப்பதற்குள் உள்ளே டெலிபோன் ஒலித்தது.

"ஸ்ரீராமாக இருக்குமோ?" நினைத்தபடியே வசந்தி பின் தொடர எழுந்து உள்ளே போனாள் சுகன்யா.

மாமியார் போன் எடுத்துப் பேசிக் கொண்டிருந்தார்.

"சரி... பார்த்து, ஜாக்கிரதையா வா..." போன் வைக்கப்பட்டது.

"ஸ்ரீராம்தான் பேசினான். வர நாழியாகுமாம்.... காத்திருக்க வேண்டாம்னான்... அவங்கிட்டே மாத்துச் சாவி இருக்கு..."

பொது அறிவிப்பாகச் சொல்லிவிட்டுப் போய் விட்டாள் சரஸ்வதி.

சுகன்யாவுக்கு ஏமாற்றத்துடன் இலேசான கோபம் வந்தது.

'ஸ்ரீராமுக்குத் தன்னைக் கூப்பிட்டுப் பேசத் தோன்றவில்லையே.... ஆபீஸுக்கு மீண்டும் போன் செய்யலாமா? வேண்டாம்; வரட்டும்... நேரில் பேசிக் கொள்ளலாம்.'

கல்யாணமாகி ஒரு வாரம் ஓடிவிட்டது. இரண்டாம் நாளே வேலையில் சேர்ந்து விட்டான் ஸ்ரீராம். முக்கியமான கன்ட்ராக்ட்களை முடிக்க வேண்டிய நெருக்கடியான காலகட்டம் அவனுக்கு என்பது சுகன்யாவுக்குத் தெரியும்.

'இருந்தாலும் 'சுகி' என்று ஒரு வார்த்தை போனில் அவன் பேசியிருக்கலாம். அவனுக்குத்தான் தோன்றவில்லையென்றால் அவன் அம்மாவுக்காவது தோன்றாதோ... அவரிடத்தில் நான் இருந்தால், 'இரு உன் பெண்டாட்டியிடம் பேசு' என்று போனைக் கொடுத்திருப்பேனே... பெண் மனசு இன்னொரு பெண்ணுக்குப் புரியாதோ...'

சிந்தனை ஓட ஓட... சுகன்யாவைத் தனிமையுணர்வு வந்து சூழ்ந்து கொண்டது. முகம் அலம்பி அதைத் துடைத்துப் போட முயன்று, வெற்றி பெறாமலே தன் துணிகளைப் பிரித்துப் போடலானாள் சுகன்யா.

"மன்னி... இந்தாங்கோ பூ...." வசந்தியின் புன்னகையும் நித்தியமல்லியின் நறுமணமும் சேர்ந்து ஆறுதல் தந்தன.

"என்ன பண்ணிட்டிருக்கீங்க..." வண்ணக் குவியலுக்கு மத்தியிலிருந்தவளை வசந்தி கேட்டாள்.



"என்ன செய்யறதுன்னே புரியலை... எங்கிட்டே இருக்கிற முக்கால்வாசி பிளவுஸ் ஸ்லீவ் லெஸ்ஸா இருக்கு... நைட் டிரெஸ்ஸும் அப்படியே... தனியா துணியை வாங்கி ஒட்டுப் போட்டுக்கலாமான்னு பார்க்கறேன்..."

வசந்தி சிரித்துவிட்டுக் கேட்டாள். "ஏன் மன்னி...? உங்களுக்கு இப்படி கையில்லாம பிளவுஸ் போட்டுக்கலாம்னா கூச்சமாயிருக்காது...?"

"இல்லையே... கொஞ்சம்கூட கூச்சமாயில்லை... ஏன் கூச்சப்படணும்...?"

வசந்தி ஆச்சர்யப் பார்வை பார்த்தாள்.

"அப்படின்னா இப்பவும் நீங்க இந்த ஸ்லீவ் லெஸ்ஸையெல்லாம் போட்டுக்கத் தயார்னு சொல்லுங்க..." - சுகன்யாவின் ரவிக்கை ஒன்றை ஜாக்கிரதையாக நுனிவிரலால் எடுத்துக் கேட்டாள்.

"நோ, இந்த வீட்டுக்கு வந்தப்புறம் இனிமேல் இதெல்லாம் போட்டுக்கறதில்லைன்னு முடிவு பண்ணிட்டேன்."

"அப்பா, அம்மாவுக்குப் பயந்துதானே? அண்ணா ஒண்ணும் சொல்லமாட்டான்னு

தங்க நகை பரிசு!

இன்னும் 19 வாரங்கள் வெளிவரப் போகிற இந்தத் தொடர்கதை, வாராவாரம் ஓர் எழுத்தாளரின் பெயரில் வெளியாகும். ஆனால் முழுக் கதையையும் எழுதுபவர் ஒரே எழுத்தாளர்தான்! யார் அவர்?

வாரா வாரம் படித்து, யூகித்துக் கொண்டே இருங்கள். கடைசி வார அத்தியாயத்துடன் வெளியாகப் போகிற கூப்பனில், 'தொடரை எழுதியவர் யார்?' என்கிற உங்கள் யூகத்தை எழுதி அனுப்புங்கள்.

உங்கள் யூகம் சரியானதாக இருந்தால் உங்களுக்குத்தான் மின்னும் தங்க நகை பரிசு!

பலர் சரியான விடை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் ஓர் அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

தெரியும்..."

"பயமில்லை வசந்தி இது... இங்க எனக்கு 'அக்ஸப்டன்ஸ்' கிடைக்குமான்னு தேடற முயற்சி..."

- வசந்திக்கு இது முழுவதுமாகப் புரிந்ததோ இல்லையோ... சற்று மௌனமானாள்.

"உனக்குக் கல்யாணமாகிற சமயத்துல நான் சொல்றது புரியும்."

வசந்தி அப்படியே முகம் சிவந்து போனாள்.

"என்னது இது; இப்பவே மணவறையிலே நிக்க வைச்ச மாதிரி வெட்கப்படறே?"

"சும்மாயிருங்கோ மன்னி, நீங்க இன்னும் பூவே வைச்சுக்கலையே நான் வைச்சு விடட்டுமா?"

"ப்ளீஸ்..." என்று சுகி அவளுக்குப் பின்னந் தலையைக் காட்ட, "இப்படி கிழக்கு முகமா நில்லுங்கோ..." என்று சுகன்யாவைத் திருப்பி நிறுத்தி, மல்லிச் சரத்தை அழகாக மடித்துச் சூட்டினாள் வசந்தி.

"வலிக்கலையே...?" என்று கேட்டபடியே தலை முடியில் அவள் பூவைச் செருகிய பரிவு சுகன்யாவைத் தாக்கியது.

"இல்லை... வலிக்கலை...?" என்றாள் அடங்கிய குரலில்.

"கல்யாணத்துக்கு வந்த ரவிக்கைத் துணியெல்லாம் இருக்குமே மன்னி... அதோட ஒரே ஒரு அளவு ரவிக்கை - கை வைச்சது - குடுங்கோ. பக்கத்துத் தெருவிலே சுபத்ரா தைச்சுத் தருவா..."

"ஆகட்டும் எடுத்து வைக்கிறேன்."

ஸ்ரீராமின் கார் சப்தம் கேட்டு விழிப்புத் தட்டியது. கலைந்திருந்த புடைவைத் தலைப்பை அள்ளிப் போட்டுக் கொண்டு போய்க் கதவைத் திறந்தாள் சுகன்யா. வீடு தூங்கிக் கொண்டிருந்தது.

"ஏன் எங்கிட்டே பேசலை...?"

ப்ரீஃப் கேஸை உள்ளே பெட்ரூமில் வைக்கச் சென்றவனைப் பின் தொடர்ந்தபடியே கேட்டாள்:

"ஒரே வேலை... விஷயத்தை அம்மாகிட்டே சொல்லிட்டமேன்னு வைச்சுட்டேன்...."

"எங்கிட்டே பேசணும்னு உனக்குத் தோணலை இல்லை...?"

- குரல் நடுங்கிய சுகன்யா ஸ்ரீராமுக்குப் புதுசாய்த் தெரிந்தாள்.

"என்ன ஆச்சு? ஆர் யூ ஓ.கே...?" என்று - தோளில் கை வைத்துக் கேட்டான்.

"போய்க் குளிச்சுட்டு சாப்பிட வா...." தோளிலிருந்து அவன் கை விலக்கிச் சொன்னாள்.

"அஞ்சு நிமிஷத்துல வரேன்...."

ஆறாவது நிமிடம் சாப்பாட்டு மேஜை யருகே உட்கார்ந்தான். பக்கத்தில் உட்கார்ந்தபடி பரிமாற ஆயத்தம் செய்தாள் சுகன்யா.

சாதத்தைப் பிசைந்தபடி இடது கரத்தை நீட்டினான். "கை குடு... நாளைக்கு சண்டே ஆபீஸ் போகாம இருக்கணுமேன்னு இன்னிக்கு எல்லாத்தையும் முடிச்சுட்டு வரேன். நாளைக்கு முழுக்க உன்னோடதான்."

அவளும் இடது கை நீட்ட, அதைப் பற்றி, பொத்திக் கொண்டே சாப்பிட்டான்.

"எப்படியெல்லாம் சின்ன குழந்தை மாதிரி என்னைச் சமாதானம் பண்ண வேண்டியிருக்கு இல்லே?" நிதானத்துக்கு வந்து கேட்டாள்.



"அவுங்க உறவு முறிஞ்சதுல உங்களுக்கு என்ன சந்தோஷம்?"
"ஒரு ஜோக் எழுத்தாளரைப் பார்த்து கேட்கிற கேள்வியா இது? ஒரு பத்து ஜோக்காவது இதை வச்சு எழுதிட மாட்டேனா...?"
– சீர்காழி வி. ரேவதி

"இதானே ஆரம்பம்... இன்னும் என்னவெல்லாம் பாக்கியிருக்கோ...!"

"சொல்லட்டுமா?"

"வேண்டாம்! Don't spoil the surprises..." சாப்பிட்ட தட்டை அவள் அலம்ப கொல்லைப் புறம் போனபோது கூடச் சென்றான். மேஜையைத் துடைத்து சுத்தம் செய்ய உதவி, "கொஞ்சம் டி.வி. பார்க்கலாமா?" என்றபோது, "வேண்டாம்! பேசணும்..." என்றான்.

பார்வையில் கேள்விக்குறி தேக்கி படுக்கையறைக்கு அவளைப் பின் தொடர்ந்தான். கதவைச் சாத்தித் தாழிட்டு விட்டு கட்டிலில் உட்கார்ந்தாள்.

"சொல்லு..." தலையணையில் சாய்ந்தபடி கேட்டாள்.

"எனக்கு ஒண்ணுமே புரியலை இந்த வீட்டுலே... தட்டு கழுவறதிலேருந்து தேங்காய் துருவறது வரை எல்லாத்துக்கும் ஒரு சாஸ்திரமோ, சட்டமோ இருக்கு... கேட்காம செஞ்சா தப்பாயிடுது. கேட்டுச் செய்யலாம்னா இது கூடத் தெரியலையான்ற மாதிரி ஒரு பார்வை வருது... ஒரு 'ரூல் புக்' மாதிரி எல்லாத்தையும் எழுதிக் கொடுத்துடுன்னு கூட வசந்தி கிட்டே சொல்லிப் பார்த்தேன்... நடக்கலை..."

"ம்..."

"நீயாவது எனக்கு எல்லாத்தையும் சொல்லிக் கொடு ஸ்ரீராம்..."

"சரி சொல்றேன். ரூல் நம்பர் ஒன். அஞ்சரை மணிக்கே காலைல எழுந்துடணும். அப்புறம் பல்தேய்க்காமல் கிச்சனுக்குள்ளே போகக் கூடாது. குளிக்கறதுக்கு முந்தி பூஜையறைப் பக்கம் போகக் கூடாது. குளிச்சால் தான் சமையல் செய்யலாம். சமையலை ஆரம்பிக்கறதுக்கு முந்தி வாசலில் கோலம் போடணும். சமையலறையிலயும் அன்னன்னைக்குச் சமைக்கற பண்டங்களை, நாள்பட வைக்கக்கூடிய பண்டங்களோட சேர்க்கக் கூடாது. 'பத்து, பத்து'ங்கறது இதுதான்! நல்ல பண்டங்கள் கெட்டுப் போயிடக் கூடாதேங்கற ஜாக்கிறதை உணர்வினால் ஏற்பட்ட விதி... ஃப்ரிட்ஜ் இல்லாத நாட்களில் ஏற்படுத்தினது..."

"ஆனா, இப்போதான் ஃப்ரிட்ஜ் இருக்கே... நாம அதையும் வேற வசதிகளையும் வைச்சுக்கிட்டு இல்ல இவ்வளவு ரூல்லோட கஷ்டப்படறோம்!"

"ரொம்ப முக்கியமான ஒரு ரூல் சொல்றேன்... ஆனா அது உனக்குப் பிடிக்காம கூட இருக்கும்..."


"என்ன?"

"உன்னை மாதிரி பெண்கள், அதுவும் புது மருமகப் பெண்கள், இந்த மாதிரி தர்க்க ரீதியாவெல்லாம் யோசிக்கக் கூடாது. யோசிச்சா விடை கிடைக்காது. கஷ்டம்தான் அதிகமாகும்..."

"அதுக்காக மூளையையும் சிந்தனையையும் கழட்டி வைச்சுடவா முடியும்.. அது பாட்டுக்கு யோசனை ஓடத்தான் செய்யும்.. ஆனா ஆதாரமான விஷயம் புரியுது... தர்க்க ரீதியில் ஒரு காலத்துல ஏற்பட்ட விதிகள் இப்ப உணர்வு ரீதியா வாழ்க்கைல கலந்து போயிடுத்து.. அதனால அந்த உணர்வுகளை மதிச்சாகணும்."

"இப்ப குரு யாரு, சிஷ்யர் யாருன்னே புரியலையே..."

"இந்த வீட்ல இருக்கிற வரைக்கும் நீதான்



"என் உடம்பே எனக்கு எதிரா சதி செய்யுது!"
"என்ன விஷயம்?"
"ஜாமீன் கிடைச்சப்புறம் நெஞ்சு வலி வருது!"
— அம்பை தேவா

குரு மிஸ்டர் ஸ்ரீராம்!"

"அப்படியானால், மிஸஸ் சுகன்யா... இதோ இன்னும் சில விதிகளைச் சொல்கிறேன்..."

உபதேசம் கேட்கும் போலி பாவனையில் அவள் தலையைத் தாழ்த்தி, மடக்கிய இடக்கை மேல் வலக்கை பிடித்து வாய் பொத்தினாள்.

தலையணையிலிருந்து நிமிர்ந்து முன்னுக்கு வந்தான் ஸ்ரீராம்.

"இந்தத் தலையிலே எப்போதும் பூ இருக்கணும்" - அவன் வலக்கரம் அவள் பின் தலையை வருடியது.

"இந்த நெற்றியிலே எப்போதும் குங்குமம் இருக்கணும்" - அவன் இடதுகை அவள் முகத்தை நிமிர்த்த, இதழ்கள் புருவங்களுக்கிடையே பதிந்தன.

"இந்தக் கழுத்தில் எப்போதும் தாலிச் சரடு இருக்கணும்". அவன் இரு விரல்கள் மட்டும் அவள் வெண் கழுத்தை வருடின.

"இந்த நெஞ்சு எப்பவும் சந்தோஷத்தையே சுமக்கணும்..."

இறங்கத் தயங்கி நின்ற அவன் கரங்களைப் பற்றி வழிகாட்டலானாள் சுகன்யா.

(தொடரும்)

கல்லூரி மாணவிகள் நடித்த படம்; ஜனாதிபதி பாராட்டிய படம்!

"ஹாய்யோ! இட் வாஸ் ஸோ எக்ஸைட்டிங்!" என்றார் ரீனா.

"அந்த ஷூட்டிங் அனுபவத்தை ஆயுசு முழுக்க மறக்க முடியாது!" என்றார் தீபாலட்சுமி.

"ரெண்டு நாள்... வந்ததும் தெரியலை. போனதும் தெரியலை. கனவு மாதிரி இருக்கு!" என்றார் ருசிதா சிங்.

வாய் ஓயவில்லை. கார்த்திகாயினி, மல்லிகா மேனன், பூஜா, நித்யா என்று ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரியின் ஹிந்தித் துறைப் பெண்கள் அத்தனை பேரும் புல்லரித்துப் போயிருக்கிறார்கள்.

என்ன விஷயம்?

அவர்கள் ஈடுபட்ட ஒரு செயல் பற்றி, ஜனாதிபதி சங்கர்தயாள் சர்மா, தில்லிக்குக் கூப்பிட்டுப் பாராட்டியிருக்கிறார்.

செயல் - பொது இடங்களில் தடவாமல் இந்தி பேசுவது எப்படி என்கிற ஒன்றரை மணி நேர வீடியோ கேஸட் தயாரித்திருப்பது. செலவு - சுமார் இரண்டுலட்ச ரூபாய்!

ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரியின் ஹிந்தி துறைத் தலைவர் மதுதாவன் ஒரு பஞ்சாபி. சென்னைக்கு வந்த புதிதில் தமிழுக்கு ரொம்பவே தடவியிருக்கிறார். (இப்போ கொஞ்சம் கொஞ்சம் பேஸ்றர்.) தம்மைப் போல்தானே, வடநாடு செல்லும் தென்னிந்தியர்கள் மொழி புரியாமல் தவிப்பார்கள்! இதற்கு ஏதாவது செய்யவேண்டும் என்று யோசித்திருக்கிறார்.

விளைவு?

• மாணவிகள் மல்லிகா மேனன், தீபா லட்சுமி, ருசிதா சிங், ரீனா குமாரி, நித்யா, பூஜா...



டாக்டர் குச்ரு, டாக்டர் ஜெயலட்சுமி விஸ்வநாதன் (இவர் மகளிர் வைணவக் கல்லூரியின் இந்தித் துறைக்காரர்), கமலா விஸ்வநாதன் தவிர தம்மையும் சேர்த்து ஒரு குழு ஏற்படுத்தி, ஒரு ஸ்கிரிப்ட் தயாரிக்கத் தொடங்கியிருக்கிறார்.

ரயில்வே ஸ்டேஷன், பஸ் ஸ்டாண்ட், போஸ்ட் ஆபீஸ், ரேஷன் கடை, ஓட்டல், பி.எஸ்.ஓ., மருத்துவமனை, பேங்க் இதுமாதிரி நாம் அதிகம் புழங்குகிற பொது இடங்களைப் பட்டியலிட்டு, தேர்வு செய்து, அங்கே என்னென்ன பேச வேண்டியிருக்கும், எப்படியெல்லாம் கேள்விகள், சந்தேகங்கள் வரக்கூடும் என்பதையும் பட்டியலிட்டு, அவற்றை எளிய ஹிந்தியில் எப்படிக் கேட்பது, பதில் சொல்வதை எப்படிப் புரிந்து கொள்வது என்று பாலபாடமாகச் சொல்கிறது அந்த ஸ்கிரிப்ட்.



• சர்மாஜியிடம் பாராட்டுப் பெறுகிறார்கள், டைரக்டரும் மற்ற ஆசிரியைகளும்....

இதை அடிப்படையாக வைத்து, ஒவ்வொரு இடத்திலும் நடைபெறுகிற சிறு சிறு சம்பவங்களைக் - கதை போலவே காட்சிகள் அமைத்து, கல்லூரி மாணவிகளையே நடிக்க வைத்துப் படமாக்கியிருக்கிறார்கள்.

முதல் வரிசையில் மாணவிகள் உணர்ச்சிவசப்பட்டிருப்பது இது பற்றித்தான்.

"நமக்குப் பிடிக்கிறதோ, இல்லையோ, வெளிமாநிலங்களுக்குப் போனால் ஹிந்தி இல்லாமல் பிழைக்க முடியாது என்கிற நிலை உருவாகி விட்டது. இலக்கண சுத்தமாக அ, ஆ விலிருந்து ஆரம்பித்துப் படிக்கிற பொறுமையெல்லாம் இப்போது யாருக்கு இருக்கிறது? இது மாதிரி ஸ்போக்கன் ஹிந்தி கேஸட்டுகள்தான் இனி ஒரே புகலிடம்" என்றார் பேராசிரியர் ஜெயலட்சுமி.

இந்த பிராஜக்டில் இந்தி - ஆங்கில - தமிழ் மொழித் தொடர்பாளராக இவர் ஆற்றியிருக்கிற பணி அதிகம்.

"நாங்கள் எங்கள் ஷூட்டிங்கைப் பொது இடங்களில் வைத்திருந்தோம். ரயில்வே ஸ்டேஷனில் நடக்கிற சம்பவமா - சென்ட்ரலுக்குப் போனோம். போஸ்ட் ஆபீஸா - ஒரு போஸ்ட் ஆபீஸில் பேசி அனுமதி பெற்று அங்கே ஒரு காட்சி வைத்தோம். பாங்க் என்றால் பாங்க். பஸ் ஸ்டாண்ட் என்றால் நிஜமாகவே பஸ் ஸ்டாண்டுகளுக்குப் போய் படப்பிடிப்பு நடத்தினோம்! இதனால் ஆர்வமுடன் கூடி விடுகிற பொதுமக்களைச் சமாளிப்பதே ஒரு அனுபவமாக இருந்தது" என்கிறார் இவர்.

மதுதாவன் ஒரு ரசமான சம்பவம் சொன்னார். ரயில்வே ஸ்டேஷனில் கூலிகள் அதிக பணம் கேட்டு பேரம் செய்தால் எப்படி சமாளித்து வழிக்குக் கொண்டு வருவது என்றொரு காட்சி, படத்தில். இதைப் படமாக்கிக் கொண்டிருந்த போது, சில நிஜ ரயில்வே கூலிகள் சண்டைக்கு வந்து விட்டார்களாம்! 'எங்களைப் பற்றி



இப்படியெல்லாம் சொல்கிறீர்களே' என்று அழாத குறையாக அவர்கள் புலம்ப, சமாளிக்க வெகு சிரமப்பட்டிருக்கிறார்கள்.

மதுதாவன் சொன்ன மற்றொரு விஷயம் – "சும்மா ஷூட்டிங் பார்த்துக் கொண்டிருந்தவர்களே, முடிந்ததும் ஓரிரு ஹிந்தி வார்த்தைகள் பேச ஆரம்பித்து விட்டார்கள்!"

ஜனாதிபதி சங்கர்தயாள் சர்மாவுக்கு ஒரு சாம்பிள் கேஸட் அனுப்பிவிட்டு இவர்கள் அந்த விஷயத்தையே மறந்து விட்டிருந்த நிலையில் அவரிடமிருந்து ஒரு கடிதம் வந்திருக்கிறது. "உங்கள் கேஸட் பார்த்தேன். உங்களை நேரில் சந்திக்க விரும்புகிறேன்!" என்று. ஒதுக்கப்பட்டிருந்த அரைமணி நேரத்தில் ஜனாதிபதியைச் சந்தித்து வந்த அனுபவம் பற்றி உணர்ச்சிபொங்கக் குறிப்பிடுகிறார்கள், இப் பேராசிரியர்கள். (சர்மா ரூமில் ஒரு பாரதியார் படமும் முப்பது கோடி முகமுடையாள் வரிகளும் பிரும்மாண்ட சைஸில் இருக்கின்றனவாம்.)

"உங்கள் கேஸட் பார்த்தேன். மிக அற்புதமாக வந்திருக்கிறது. நீங்கள் ஏன் பிற மொழிகளிலும் இதைச் செய்யக் கூடாது?" என்று உற்சாகமூட்டிக் கேட்டிருக்கிறார் சர்மாஜி.

இந்த கேஸட், இந்தி – ஆங்கிலம் வாயிலாக. இப்போது தமிழ் வாயிலாக இந்திக்கான இதே கேஸட்டின் டப்பிங் பணி நடந்து கொண்டிருக்கிறது.

எல்லாம் சரி. யார் இத்தனை அக்கறையாக இந்தி கற்க வீடியோ கேஸட் வாங்கிப் பார்க்கப் போகிறார்கள் என்று கேட்டால், "இப்போதே பள்ளி, கல்லூரிகள், வங்கிகளிலிருப்போரிடமிருந்தெல்லாம் ஆர்டர்கள் வரத் தொடங்கி விட்டன!" என்றார் பேராசிரியர் மதுதாவன். தவிர வியாபார ரீதியில் யூஜிசியின் உதவியையும் நாடியிருக்கிறார்கள்.

"தயாரிப்புச் செலவுதான் மிக அதிகமாக இருக்கிறது. சேவையாக நாங்கள் செய்யும் இத்தகைய காரியங்களுக்கு அரசாங்கம் உதவினால் நன்றாக இருக்கும்" என்கிறார்கள்.

"நீங்கள் சர்மாவிடமே ஒரு வேண்டுகோள் வைத்திருக்கலாமே!"

வைத்திருக்கிறார்கள்.

"அரசுத் தரப்பிலிருந்து ஏதாவது உதவி கிடைக்க நிச்சயம் வழிசெய்கிறேன்" என்று உறுதியளித்திருக்கிறாராம் சர்மாஜி.

- ஔரங்கசீப்

வண்ணப் படங்கள் : **சாய்வர்ஷா**

ஜாலி போட்டி - 4 முடிவு

'தலைவர்களைத் தெரிகிறதா?' என்று கேட்டு, பத்து தலைவர்களின் முகங்களைக் கார்ட்டூனில் தந்திருந்தோம். பலர் சரியாகக் கண்டுபிடித்து விட்டார்கள். எனவே குலுக்கல் முறையில் ஒருவரைத் தேர்வு செய்தோம்.

ரூ. 5000/- பரிசு பெறும் அந்த அதிர்ஷ்டசாலி:

வி. ஜெயலட்சுமி,
25, விவேகானந்தபுரம் முதல் தெரு,
மேற்குமாம்பலம், சென்னை - 600 033.

வாழ்த்துக்கள்!

<u>சரியான விடைகள்:</u>

1. லல்லுபிரசாத் யாதவ்,
2. கருணாகரன்,
3. கன்ஷிராம்,
4. ஹெக்டே,
5. வாழப்பாடி ராமமூர்த்தி,
6. வாஜ்பாயி,
7. மாயாவதி,
8. ஷரத்பவார்,
9. நெடுஞ்செழியன்,
10. பி.ஏ. சங்மா.



நரசிம்ஹனின் இடது திருநேத்திரம் சந்திரன்!

தன்னுடைய திவ்ய மனோகர ரூபத்தினாலே எல்லோரையும் ஆகர்ஷிப்பவன். சின்னக் குழந்தை முதல் முதியோர் வரை அத்தனை பேரையும் ஆகர்ஷிப்பவன். 'சந்தா மாமா ராவே', 'நிலா நிலா ஓடிவா!' என்று எல்லா மொழிகளிலும் விளையாட்டுப் பாடல்களால் வரவேற்கப்படுகிறான்.

சோம சமம் என்று ஒரு பெரிய யாகம் செய்வார்கள் சந்திரனுக்கு. என்ன கொடுக்கிறான் இந்த சந்திரன்...?

கன்றுடன் கூடிய பசுவைக் கொடுக்கிறான். பாலை வருஷிக்கக்கூடிய, பலத்தையும் புஷ்டியையும் தரவல்ல... வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்! சந்திர அனுக்கிரஹத்தினாலேதான் அது கிடைக்கும்.

குதிரை! வேகமாகப் போகக்கூடிய, நல்ல சுழியையுடைய குதிரைகள் ஒரு நாட்டிலே இருந்தால் நிரம்ப க்ஷேமம் உண்டாகும். அவற்றை அளிப்பவன் சந்திரன்.

வீரம் - இந்த வீர சப்தத்துக்கு நல்ல புத்ரன் என்று அர்த்தம். நித்ய கர்மானுஷ்டானங்களை விடாமல் பண்ணக்கூடிய சத்புத்திரன் ஏற்பட வேண்டும் என்று பிரார்த்திக்கிறது யாகம்.

வீட்டிலே எல்லோராலும் கொண்டாடப் படக்கூடியவனாய், சபையிலே கொண்டாடப்படுபவனாய், அப்பாவின் கீர்த்தியை உலகிலே பிரகாசிக்கச் செய்யக்கூடியவனாய் இருக்கும் புத்திரன்.

— இவையெல்லாம் சோமதேவன் - சந்திரனால் ஏற்படுகிறது.

இத்தனையையும் கொடுக்கும் சந்திரன்தான் பகவானின் இடது திருநேத்திரம்.

மூன்றாவது நேத்திரம் அக்னி - அக்னிக்கு வித்வான் என்று ஒரு பெயர். வித்வான் என்றால் வழிகாட்டி. 'நல்ல மார்க்கத்திலே என்னை அழைத்துப் போ. என்னிடத்திலே இருக்கக்கூடிய பாவக் குவியலைப் போக்க வழிகாட்டு' என்று அக்னியை வேண்டுகிறது உபநிஷத் மந்திரம்.

பாவங்களிலே இரண்டு வகை! சஞ்சிதம்; பிராரப்தம்.

சஞ்சிதம் என்றால் இன்னும் பலனைக் கொடுக்க ஆரம்பிக்காதது - அவிழ்க்காத மூட்டை! அதாவது, இந்தப் பிறவியிலே நாம் செய்து வரும் பிழைகளினால் நம் கணக்கில் ஏறிக் கொண்டிருக்கும் பாவ மூட்டை!

'பிராரப்தம்! என்ன பண்றது... அனுபவிச்சாகணும்...' என்று பேச்சு வழக்கிலே சொல்வதுண்டு. இந்த பிராரப்தம் என்பது ஏற்கெனவே எடுத்த பிறவிகளில் செய்த பாவங்களுக்கு நாம் இப்போது அனுபவித்து வரும் பலன்!

'இந்தப் பாவங்கள் மொத்தத்தையும் நீ



போக்கடிக்க வேண்டும்' என்று அக்னியை வேண்டுகிறோம். 'பதிலுக்கு நாங்கள் உனக்கு என்ன செய்ய முடியும்...? நம : நம : என்று ஸ்தோத்திரம் பண்ணலாம்; அவ்வளவுதான்' என்று இறைஞ்சுகிறோம்.

'அக்னி மாதிரி நான் ஜொலிக்க வேண்டும். மனிதர்க்குள்ளே உயர்ந்த வகை வேண்டும். என்னையும் உன்னைப் போன்ற தேஜஸ்வியாக ஆக்கு...' என்று பிரார்த்திக்கிறோம்.

நல்வழிப்படுத்தக் கூடியவன் அக்னி; அனைத்தையும் கொடுக்கக்கூடியவன். யார் துதித்தாலும் ஐச்வர்யத்தைக் கொடுக்கக்கூடியவன். இப்படிப்பட்ட வரங்களை அருளக்கூடிய அக்னியானது பகவானுடைய மூன்றாவது திருநேத்திரம்.

சூரியன், சந்திரன், அக்னி என்ற மூன்று கண்களுடையவன். ஆதலினாலே தபன இந்து அக்னி நயன : என்று நரசிம்ஹனைச் சொல்லி ஆராதிக்கிறோம்.

ம்ருத்யு ம்ருத்யவேஸ்வா : என்றும் நரசிம்ஹனை ஆராதிக்கிறோம்.

ம்ருத்யு – மரணம்! ம்ருத்யுவுக்கு ம்ருத்யுவாய் இருக்கக்கூடியவன் நரசிம்ஹன் என்பதாலே ம்ருத்யு பயம் நீங்க, சம்சார பயம் நீங்க அந்த எம்பெருமானின் திருவடியை ஆச்ரயிக்க வேண்டும். ம்ருத்யுவையும் விரட்டியடிக்கும்படியான பராக்கிரமமுடையவன் நரசிம்ஹன்!


விச்வயோனி : விச்வாத்மா என்றும் அவனை அழைக்கிறோம். விச்வயோனி : விச்வத்துக்கெல்லாம் காரணமாய் இருக்கக் கூடியவன்.


ப்ரஹலாதப்ரியனான நரசிம்ஹனை முமுக்ஷுபாஸ்ய தேவதை என்று சொல்வதுண்டு. சம்சாரம் வேண்டாம் என்று நினைப்பவர்கள் அவனை உபாஸனை பண்ண வேண்டும்.

சம்சாரம் வேண்டாம் என்கிற விவேகம் மட்டும் எப்போது வரும் என்றே சொல்ல முடியாது!

சௌபரி என்று ஒரு மஹரிஷி – 'வெளியிலே இருந்தால் உலகம் நம்மைக் கெடுக்கிறது' என்று கருதி சமுத்திர ஜலத்துக்கு அடியிலே போய் உட்கார்ந்து கொண்டார். உட்கார்ந்து தவம் பண்ணினார். பத்தாயிரம் வருஷத்துக்கு ஒரு முறைதான் கண்ணைத் திறப்பார் அவர்!

குறையொன்றுமில்லை





''ஈவு இரக்கமின்றி ரவுடிகள் மீது நடவடிக்கை எடுப்போம்னு அமைச்சர் சொல்லியிருக்காரே...?''
''எப்படியாவது எங்க கட்சியை அழிச்சிடணும்னு பார்க்கிறார்... அது வெறும் பகல் கனவாகத்தான் முடியும்!''
- சீர்காழி வி. ரேவதி

வெளியிலே வருவார். ஏதாவது பழமிருந்தால் பறித்துச் சாப்பிட்டு விட்டு மறுபடியும் சமுத்திரத்துக்குள்ளே போய் விடுவார்.

ஒரு சமயம் அவர் கண்ணைத் திறந்த போது, ஒரு மீன் குடும்பம் கடந்து செல்வதைக் கண்டார் - தாத்தா, பாட்டி தொடங்கி பேரன், கொள்ளுப்பேத்தி என்று சுமார் இருநூறு மீன்கள் ஒரே குடும்பமாய்ப் போய்க் கொண்டிருந்தன. உடனே அவருக்கு மனசிலே ஏக்கம் வந்ததாம்.

'அடடா! வாழ்க்கைன்னா இதுவல்லவா வாழ்க்கை! இப்படி அழகா குடும்பமா இருக்கறதை விட்டுட்டு மூக்கைப் பிடிச்சுண்டு ஜலத்தடியிலே உட்கார்ந்திருக்கோமே...? இதுனாலே நாம் என்னத்தைக் கண்டோம்' என்ற சிந்தனை வந்ததாம்.

உடனே அவர் தவம் அப்படியே கலைந்து போய்விட்டது.

மீன்களைப் போல் குடும்பமாக வாழ வேண்டுமென்றால் திருமணம் செய்துகொள்ள வேண்டுமல்லவா...? ஒரு சன்னியாசிக்கு யார் பெண் கொடுப்பார்கள்...? யோசித்துப் பார்த்த சௌபரி, மாந்தாதா என்கிற இக்ஷ்வாகு வம்ச மன்னனிடம் போனார். அந்த மன்னருக்கு ஐம்பது பெண்கள்!

'ஐம்பது பெண்களிலே ஒரு பெண்ணை நமக்குக் கன்னிகாதானம் செய்து கொடுக்க மாட்டாரா என்ன...' என்கிற தைரியம் முனிவருக்கு!

ஆனால், எவ்வளவுதான் பெண் குழந்தைகள் இருந்தாலும், எந்தத் தந்தைதான் ஒரு வயோதிகருக்கு அவர்களைத் திருமணம் செய்து வைக்க ஒப்புக் கொள்வார்! அல்லது எந்தப் பெண்ணாவது ஒரு வயோதிகனை விரும்பி வரிப்பாளா...!

ராஜாவுக்கு ரொம்ப் தர்மசங்கடமாகப் போய்விட்டது. ஒரு உபாயம் செய்து இக்கட்டிலிருந்து தப்பிக்க முயன்றார்.

"சுவாமி! எங்கள் குல வழக்கம் என்னவென்றால், பெண்கள் யாரை வரிக்கிறார்களோ அவருக்குத்தான் அவர்களை மணமுடித்துக் கொடுப்போம். அந்த மாதிரி சுயம்வரம் வைக்கும் குலவழக்கத்தை நான் மீற முடியாதே; நிர்ப்பந்தம் இருக்கிறதே" என்றார் சௌபரியிடம்.

சௌபரி சளைக்கவில்லை. "எனக்கொரு ஆட்சேபணையும் இல்லை. உங்கள் பெண்கள் இருக்கும் இடத்துக்கு என்னை அழைத்துப் போங்கள். அவர்களில் யாரேனும் என்னை வரித்தால் கல்யாணம் பண்ணிக் கொடுப்பீர்கள் அல்லவா...!" என்றார்.

அரசன் ஒப்புக் கொண்டான். "கட்டாயம் கொடுப்பேன்" என்று சொல்லி அந்தப்புரத்துக்கு அழைத்துப் போனான்.

அங்கே, உள்ளே நுழையும்போதே அதிரூப சுந்தரராக, மன்மதனையும் பழிக்கக்கூடிய ரூபனாய் நுழைந்தார் முனிவர்.

அந்தப்புரத்திலிருந்த ஐம்பது ராஜகுமாரிகளும் ஒரு சேர அவரை வரித்து விட்டனர்! எல்லோருக்கும் போட்டியே வந்து விட்டதாம். ஓடிச் சென்று, அரசனிடம் விஷயத்தைச் சொன்னார்கள். அவனும் வேறு வழியின்றி, கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதற்காக ஐம்பது பெண்களையும் அவருக்கே மணமுடித்துக் கொடுத்தான். அவரும் ஒவ்வொரு பெண்ணையும் தனித்தனியே கல்யாணம் பண்ணிக் கொண்டு, தன் பின்னோடு அழைத்துப் போனார்.

நடந்து போகையிலே, தனக்குப் பின்னால் வந்த மனைவிமாரைத் திரும்பிப் பார்த்தார் முனிவர். "மீன் குடும்பத்திலே கால் பங்கை அடைந்திருக்கிறோம்' என்று ரொம்ப மகிழ்ச்சி அவருக்கு!

தனித்தனியாக ஐம்பது பவனங்கள் (வீடுகள்) நிர்மாணம் பண்ணினார். ஒவ்வொரு கிரஹத்திலும் ஒரு மனைவியைக் குடிவைத்தவர், அத்தனை கிரஹங்களிலும் தானும் இருக்கும்படியான மாயத் தோற்றத்தை ஏற்படுத்தினார். ஐம்பது கிரஹங்களிலுமிருந்தவர் வெளியே மரத்தடியிலேயும் இருக்கலானார்!

இப்படி ஒரு கிழவருக்குக் குழந்தைகளைக் கொடுத்து விட்டோமே என்ற வருத்தத்துடன் சக்ரவர்த்தி மாந்தாதா, தம் பெண்களைப் பார்க்க வந்தார்.

ஒரு பெண் விடாமல் அத்தனை பெண்களும் தந்தையை ஸ்தோத்திரம் பண்ணி வணங்கினார்கள்! 'இப்பேர்ப்பட்ட ஒரு வரனுக்கு எங்களைக் கல்யாணம் பண்ணிக்

கொடுத்தீர்களே... நாங்கள் சகல போகத்தோடு சந்தோஷமாயிருக்கிறோம்' என்று ஒத்தாற்போல் ஐம்பது பெண்களும் சொன்னார்கள்!

பார்த்தார் மாந்தாதா. முதல் பெண்ணைத் தனியே அழைத்து விசாரித்தார். அவள் சொன்னாள் :

“தந்தையே, நான் ரொம்ப மகிழ்ச்சியாகவும் சுபிட்சமாகவும் இருக்கிறேன். எனக்கொன்றும் போகத்தில் குறையில்லை. ஆனால் ஒரே ஒரு கஷ்டம்...

“என்ன கஷ்டம்...?” என்றார் தந்தை.

“எப்போது பார்த்தாலும் பர்தா (கணவர்) இங்கேயே என் வீட்டிலேயே இருக்கிறார். மற்ற தங்கைகளின் கிரஹத்துக்குப் போவதேயில்லை... அவர்களை நினைத்தால் எனக்கு மனசுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது” என்றாள்.

அடுத்த மகளைத் தனியாய் விசாரிக்கையிலும் மாந்தாதாவுக்கு இதே பதில் கிடைத்தது! தொடர்ந்து ஐம்பது பெண்களும் இதே பதிலைச் சொன்னார்கள் தந்தையிடம்!

இப்படிப்பட்ட மகிழ்ச்சியான வாழ்க்கையினூடே ஒவ்வொரு கிரஹத்திலும் ஐம்பது குழந்தைகள் பிறந்தன. அவர்கள் வளர்ந்து நடக்கும் பருவத்திலே, குடும்பமே ஒன்றாயிருந்த ஒரு சமயத்தில், தன் பின்னே பார்த்துக் கொண்டார் முனிவர். “ஆஹா! எத்தனை அழகான குடும்பம் என்னுடையது!” என்று வியந்து கொண்டார்.

இவ்வாறு மகிழ்ந்தபடியே போய்க் கொண்டிருந்தபோது திடீரென்று அவருக்கு விவேகம் வந்துவிட்டது!

இந்த விவேகம் மட்டும் எப்போது, எங்கிருந்து, எப்படி வருமென்று சொல்வதற்கேயில்லை!

'இப்போது நாம் குடும்பஸ்தனாகி என்ன சாதிச்சோம்...' என்ற எண்ணம் வந்தது அவருக்கு.

'பந்தத்தை இப்படி அதிகமாக்கிக் கொண்டோமே.... ஜலத்துக்குள்ளே உட்கார்ந்திருந்தபோது ஒரு பந்தமில்லாமல், ஒரு நிர்ப்பந்தம் இல்லாமல் இருந்தோமே. இப்போது ஏகப்பட்ட பாசத்தினால் பிணைக்கப்பட்டிருக்கிறோமே..! அநியாயமாய் ஒரு மீன் குடும்பம் நம்மைக் கெடுத்து விட்டதே' என்று... 'தடாரென்று' அத்தனை பந்தங்களையும் உதறிவிட்டு, மறுபடியும் பழையபடி ஜலத்திலே போய் உட்கார்ந்து கொண்டார்.

இந்தக் கதையை ஆராய்ந்து பார்த்தால் எதுவுமே சாசுவதமில்லை என்பது புரிகிறது.

சாச்வதமான நித்யானந்தத்தை அடைய வேண்டுமென்றால் யாரை உபாஸனம் செய்வது...?

நரசிம்ஹனைத்தான் உபாஸனை செய்ய வேண்டும்!

(தொடரும்)

ஹலோ சுகமா?

உங்கள் குழந்தைக்குத் திக்குவாயா?

நம்ம நாட்டுல நூத்துல ஒரு குழந்தைக்குத் திக்குவாய் இருக்கு. எல்லாரும் நினைச்சிக்கறாப்பல இது ஒரு வியாதி இல்லை. குணப்படுத்தறது சிம்பிள். ஆனால் ஒரு விஷயம். இருபது வயசுக்கப்புறம் மெதுவா ட்ரீட்மென்ட் எடுத்துக்கப் போனா பிரயோஜனமில்லை. சாதாரணமா ஒண்ணரை, ரெண்டு வயசுலேருந்து எட்டு, ஒன்பது வயசுக்குள்ளேதான் இது ஆரம்பிக்கும். அப்பவே கவனிச்சு சரிபண்ணிட்டா பின்னாடி பிரச்னை இல்லை.

போன வாரம் என் ஃபிரெண்ட் மாலுவோட அக்கா குழந்தைக்கு ஃபர்ஸ்ட் பர்த்டே நடந்தது. போயிருந்தேன்.

அவங்களோட முதல் பையன் அருண் (8 வயது) துள்ளிக் குதிச்சி, விளையாடிட்டிருந்தவன், திடீர்னு ஒரு கண்ணாடி டப்பாவைக் கீழே தள்ளிட்டான். பயங்கர சப்தத்தோட அது விழுந்து உடைஞ்சதும் அலறிட்டான். அவன் அப்படி அலறும்போதுதான் தெரிஞ்சது, அவனுக்குத் திக்குவாய் அப்படீன்னு. 'சே, பாவம்'னு நினைச்சுக்கிட்டேன்.

மாலு சொன்னா.... அவனை யாரோ ஒரு சாமியார்கிட்ட கூட்டிட்டுப் போய்க் காட்டினாங்களாம். அவர் எலுமிச்சம் பழத்தை நாக்குல தேய்ச்சாராம். அப்புறம் பாட்டில் பாட்டிலா தேன் தடவினாங்களாம். மந்திரிச்ச விபூதியை சாப்பிடவெச்சாங்களாம். 'நோ யூஸ்'னு வருத்தப்பட்டா மாலு.

'போடீ இடியட்'னு நல்லா திட்டிட்டேன்.

நம்ம நாட்டுல நூத்துல ஒரு குழந்தைக்குத் திக்குவாய் இருக்கு. எல்லாரும் நினைச்சிக்கறாப்பல இது ஒரு வியாதி இல்லை. குணப்படுத்தறது சிம்பிள். ஆனால் ஒரு விஷயம். இருபது வயசுக்கப்புறம் மெதுவா ட்ரீட்மென்ட் எடுத்துக்கப் போனா பிரயோஜனமில்லை. சாதாரணமா ஒண்ணரை, ரெண்டு வயசுலேருந்து எட்டு, ஒன்பது வயசுக்குள்ளேதான் இது ஆரம்பிக்கும். அப்பவே கவனிச்சு சரிபண்ணிட்டா பின்னாடி பிரச்னை இல்லை.

இதுக்காக டாக்டரைத் தேடிப் போகணும்னு அவசியம் இல்லை. பொறுமையும் அக்கறையும் இருந்தா வீட்டுலயே குணப்படுத்திடலாம்!

எப்படி?

சிம்பிள்! 'திக்குவாய்' அப்படீங்கறது என்ன? குழந்தைங்க இயல்பாகவே நிறைய பயம், அதிர்ச்சி, துக்கம், சங்கோஜம், பரபரப்பு, கோபம் அடையறவங்களா இருந்தாங்கன்னா, அது 'திக்குவாய்'ல கொண்டு போய் விட்டுடும். இது ஒருவிதமான மன இறுக்கத்தோட வெளிப்பாடுதான்.

இப்ப நாமே சடார்னு ஏதாவது அதிர்ச்சி நியூஸ் கேள்விப்பட்டா வாயடைச்சுப் போறதில்லையா?

அதே மாதிரி, எப்பவும் மனசுக்குள்ள ஏதாவது விஷயத்தைப் போட்டு உழப்பிட்டிருக்கற குழந்தைங்களுக்குப் பேச்சு தடுமாறும். தடுமாறித் தடுமாறிப் பேசிப் பேசி, அதுவே பின்னால பழக்கமாயிடும்.

'இதுக்கு நாம என்ன பண்ண முடியும்? மனோதத்துவ டாக்டரானா, மனசுக்குள்ள புகுந்து பார்க்கலாம்'னு கேப்பீங்க... திக்குவாய் வந்தப்புறம்தான்னு இல்லை. பொதுவாவே பத்து வயசு வரைக்கும் குழந்தைகளுக்கு வீட்டுக் கஷ்டம் பத்தியோ, பணக்கஷ்டம் பத்தியோ மத்த பிரச்னைகள் பத்தியோ தெரியறது நல்லதில்லை.

சந்தோஷமான, தென்றல் மாதிரியான விஷயங்கள் மட்டும்தான் அவர்களுக்குத் தெரியணும். அடிக்கடி கூப்பிட்டு, மடியில உட்கார வெச்சிக் கொஞ்சணும். கிண்டல், கேலியெல்லாம் கூடவே கூடாது.



சில குழந்தைகளுக்குத் திக்குவாய் தீவிரமா இருக்கலாம். அப்ப மட்டும் நல்ல சைக்யாட்ரிஸ்டைப் பார்த்தாக வேண்டியது அவசியம். அவங்க 'சைக்கோ தெரபி' அப்படீங்கற சிகிச்சை தருவாங்க. அதாவது, அவங்க மனசுல இருக்கற கவலை, பயம், இனம்புரியாத நடுக்கம் இதையெல்லாம் பேசிப் பேசியே சரிபண்றது.

அதே மாதிரி பேச்சுப் பயிற்சி தருவாங்க. நூறு வார்த்தை, அம்பது வார்த்தைகளை மொத்தமா குடுத்து படிக்கச் சொல்வாங்க. எந்த வார்த்தை அதிகம் திக்கறது, ஒரு திக்கலுக்கும் அடுத்ததுக்கும் எத்தனை செகண்ட் இடைவெளின்னு எல்லாம் கவனிச்சி, அதுக்கேத்தாப்பல ட்ரீட்மென்ட். இந்த சைக்கோ தெரபி, பேச்சுப் பயிற்சியெல்லாம் வீட்டுலயே கூட செய்யலாம்தான்! நான் முன்னாடியே சொன்ன மாதிரி பொறுமையும் அக்கறையும் நிறைய வேணும்!

முக்கியமான விஷயம். இந்த மாதிரி திக்குவாய்க்கெல்லாம் கூட சூரணம் இருக்குன்னு சொல்லிட்டு, இப்ப சிலர் கிளம்பியிருக்காங்க. தப்பித் தவறிப் போய் மாட்டிக்காதீங்க. குழந்தைகளுக்கு அந்த கண்ட மருந்துகளினாலே சைடு-எஃபெக்ட்ஸ் வர வாய்ப்பு அதிகம்.

டாக்டர்களே கூட திக்குவாய்க்கு மாத்திரை, மருந்தெல்லாம் தர்றதில்லை. பொதுவா, நரம்புகளுக்கு வலு கொடுக்கிற டானிக், மாத்திரைகள்தான் தர்றாங்க. அதனால கவனமா இருக்கணும்.

- சுமி

"ஞானபீட விருதுகளை விடச் சிறந்த விருதுகளும், பரிசுகளும் நாள்தோறும் எனக்குக் கிடைத்துக் கொண்டுதான் இருக்கின்றன - நாள்தோறும் வாசகர்களிடமிருந்து வரும் கடிதங்கள் வாயிலாக."

- "இலக்கிய உலகில் நீங்கள் செய்திருக்கும் சிறப்பான பணிகளுக்குரிய பரிசுகளும் விருதுகளும் ஏன் உங்களுக்குக் கிடைக்கவில்லை?" என்று கல்கண்டு இதழுக்காக என்னைப் பேட்டி கண்டபோது கேட்ட கேள்விக்குத்தான் நான் மேலே குறிப்பிட்ட பதிலை அளித்தேன்.

● ஆயிரக்கணக்கான கடிதங்களின் அன்பு மழையில் ஆசையோடு நனைபவன் நான்.

அதனால் - இதயத்தில் படியும் ஈரத்தைத் துவட்டிக் கொள்வதே இல்லை.

இந்த உலகத்தின் பொருமலும், எரிச்சலும், புறக்கணிப்பும் என்னைச் சுடும்போதெல்லாம் உலர்ந்து போகாமல் கவிஞனாக நான் உலவிக் கொண்டிருப்பதற்குக் காரணமே இத்தகைய கடிதங்கள்தாம்!

● ரசிகர்களின் கடிதங்கள்தான் எத்தனை ரகம்! எனக்கு வந்த கடிதங்களில் இது அபூர்வ ராகம்.

● சிறப்பாசிரியராய் இருந்து நான் தயாரித்த குமுதம் இதழ் வெளிவந்தவுடன் இந்தக் கடிதம் குமுதத்தின் கதவுகளைத் தட்டி, பின்

அதே இந்தப் பெண்...

என் வீட்டுக் கதவுகளையும் தட்டியது. தட்டியது என்று சொல்வதைவிட, என்னைத் திட்டியது என்று சொல்லலாம்.

நீண்ட காலத்துக்கு முன் நடந்த ஒரு நிகழ்ச்சியை இதழ் தயாரிப்பில் எனக்கு உதவியாய் இருந்த நண்பர் ஜே. சந்தானம் அவர்களிடம் நினைவு கூர்ந்திருந்தேன்.

என் தமிழ்க் கவிக்கு,
நாம் நலம், நீர் நலமென்பதை நிரூபித்த
நின் மலர் கண்டேன். நன்றி!
27.9.90 தேதியிட்ட தங்கள் தயாரிப்பின்
குமுதம் இதழ் பக்கம் 77-ல், தாங்கள் இன்று
வரை சந்திக்காத எங்கே அந்தப் பெண்?...
அதே... அந்தப் பெண்ணின் சிறு மடல்,
17.12.88 அன்றைய மலேசிய விமானத்தில்
நடந்த சிறு நிகழ்ச்சியைத் தங்கள் எழுத்துக்
களோடு இன்று ஞாபகப்படுத்திக் கொண்
டதை எண்ணி, வியப்பிலாழ்ந்தும், தங்கள்
சிந்தனைக்கு ஒரு சிறு விளக்கத்தையும் இத்
துடன் சமர்ப்பிக்கிறேன்.
அன்றைய விமானத்தில் (ஜன்னல்)
ஓரமாக அமர்ந்திருந்த தங்களை எதேச்சை
யாகப் பார்க்க நேர்ந்ததும் அதுவும் முதன்
முதலாக...! அப்போது ஏற்பட்ட பூரிப்பில்
எனது டைரியில் தங்கள் நலம் கேட்டு நான்
எழுதி என் அருகே அமர்ந்திருந்த சிறுமியிடம்
கொடுத்துத் தங்களிடம் காண்பிக்கச் சொன்
னேன். என் 'நலவெண்பாவை'ப் படித்த
தாங்கள் அதன் மறுபக்கத்தில் தங்களின் முத்
தான கையெழுத்தில்,
வானத்தில் சந்தித்தோம்.
பூமியில் பேசுவோம்!
வாழ்த்துக்களுடன்.

என் விசாரிப்புக்கும், வாழ்த்துக்கிட்டிய
சந்தோஷத்தை நினைக்காத நாளில்லை! நீர்
மறந்த என் விசாரிப்புகள் இதோ...
என்... தமிழ்க்கவி.
நலம்தானே!
நீ நலமெனில்...

அதனால் வந்த வம்பு - இந்த அம்பு!

கடிதத்தில் இழையோடும் குறும்பை மட்டுமல்ல - கோபத்தையும் ரசித்தேன்.

வழக்கம் போல் இக்கடிதத்திற்கும் நான் பதில் எழுதவில்லை என்று நினைக்கிறேன். இப்போது அதற்காக வருந்துகிறேன்.

எத்தனை சிரமமாக இருப்பினும் இனி மேலாவது வாசகர்களின் கடிதத்திற்கு பதில் எழுதிவிட வேண்டும் என்ற எண்ணத்தை இப்போது எனக்குள் ஏற்படுத்தியிருக்கிறது கல்கி.


"எங்கே அந்தப் பெண்?" என்ற தலைப்பில் குமுதத்தில் வெளியான செய்தி இதுதான் :

கோவாலம்பூருக்கு விமானத்தில் போய்க் கொண்டிருந்தேன். பின்வரிசையிலிருந்து ஓர் ஒன்பது வயதுச் சிறுமி என் அருகில் வந்தாள். அவள் கையில் ஆட்டோகிராஃப் நோட்டு.

"அக்கா உங்கள் ரசிகை. உங்கள் கையெழுத்து வேண்டுமாம்."

திரும்பிப் பார்க்கிறேன். தொலைவில் பளீரென்று ஒரு பெண்ணின் புன்னகை. நான் எழுதிக் கொடுக்கிறேன். 'ஆகாயத்தில் அறிமுகமானோம். பூமியில் சந்திப்போம்.' அதன் பிறகு அந்தப் பெண்ணை இன்று வரை சந்திக்கவே இல்லை.

தொகுப்பு : **அருண் சரண்யா**



என் தமிழும் நலம்!
உமது விரல் வித்துக்களை
அவ்வப்போது -
நான் அறுவடை செய்தபோது
இப்படித்தான்
'ஆகாயத்தில் பறப்பதாக' நானும்
அதன் கவிச்சுகத்தில் 'கனவு' கண்டதுண்டு!

இங்கு நிஜத்தில்... 'தமிழோடு நான்...'!
இனி உலகத்தில் என் பிறவி பயனடையும்.
எம் குருதேவா...!
இஃதென்ன அதிசயம்.
எம் விமானியும் + நானும் அருகருகே!
எம் 'முதல் அநுபவம்' இது—
என் மூச்சுக்காற்றில் -
உன் மூச்சும்... கலக்கிறதே!

தமிழே!
உன் (கவி) வித்தினை புதிதாய்க் கொஞ்சம்
எனக்குத் தூவிடு'
'தட்சணையை'... தாயகம் திரும்பியதும்
தருகிறேன்...!

அன்புடன்...
'அதே..... அந்தப் பெண்!'
(உன் பாஷையில்)

என் விசாரிப்பை மறந்த உனக்கு என்ன தண்டனை தரலாம்? என் 'சிரிப்பை' மறக்காத உனக்கு என் சிந்தையை மறந்த செயல் குற்றமல்லவா? சரி... விட்டுவிடுகிறேன்...! தீர்ப்பை எம் சகோதரி மல்லிகா மேத்தாவிடம் எதிர்பார்க்கின்றேன்!

அன்புடன்,
'அதே அந்தப் பெண்...!'

வி.ஐ.பி.க்கு வந்த கடிதங்கள் :

கவிஞர் மு. மேத்தா



நீ என்றென்றும் இருந்தால்

எஸ். எஸ். பூங்கதி

இன்று மதியம் என் வண்ணக் கனவுகள் கறுப்பாகும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அப்போது ஓசை இல்லாமல் என் மனசு கிழிந்தது சாய்ராமிற்குத் தெரியாது...

மதியம் –

"தனியா பேசணும்னு கூப்பிட்டீங்களே...?" நான்.

எங்கிருந்தோ வந்து எனக்குள் படபடப்பு உட்கார்ந்து கொண்டது. எதை எதையோ எதிர்பார்த்து, எனக்குள் மிதந்து கொண்டிருக்கும் என்னை ஆழமாய்ப் பார்த்தார் சாய்ராம். தனியாகப் பேச ஆசைப்பட்டவர் தயங்குகிறார். ஏன்...? அதுதானா? நான் எதிர்பார்த்ததுதானா...? இருக்கலாம். எனக்குள் படபடப்பு மேலும் கூடியது.

சாய்ராம் எதுவும் பேசாமல் வானத்தைப் பார்த்தார். அசையும் மரக்கிளையைப் பார்த்தார். கிளையிலிருந்து பறக்கும் புறாவைப் பார்த்தார். அந்தப் புறாவுடன் பறக்கும் என் மனசையும் பார்த்தாரா...? தெரியவில்லை.

'சீக்கிரம் சொல்லுங்க...' என்று அவர் மனசை உலுக்க மனமில்லை. காத்திருந்தேன்.

"கோவிச்சுக்க மாட்டீங்களே...?" தயக்கம் கலந்த பீடிகை.

"உங்ககிட்ட கோவிச்சுக்க யாருக்குத்தான் மனசு வரும்...?"

என் மனத்தில் விரிந்து கிடக்கும் ஆர்வம் என் பேச்சில் வெளிப்பட ஆரம்பித்தது. லேசாய்...

"மிஸ் மீரா... உங்களுக்கே தெரியும். நான் இங்க ட்ரான்ஸ்ஃபர்ல வரும்போது எப்படி இருந்தேன்னு... இங்க வந்த பிறகுதான் நிம்மதி என்னைத் தேடி வந்துச்சு. எனக்கு நிம்மதி கொடுத்த இந்த ஊர்லேயே பொண்ணு பார்த்து கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படறேன். இன்னும் ரெண்டு மாசத்துல எனக்கு வேற ஊருக்கு ட்ரான்ஸ்ஃபர் வந்துடும். அதுக்குள்ள கல்யாணத்தை வெச்சுக்கிட்டா நல்லா இருக்கும்... ஸோ..."

எனக்குள் மின்னலா... அல்லது சந்தோஷமும் மனசும் உரசிக் கொண்டதால் ஏற்பட்ட வெளிச்சமா...

"நம்ம பாங்க்லேயும் சரி... வெளியிலயும் சரி, உங்களை விட அதிக பழக்கம் எனக்கு வேற யாரும் கிடையாது. அதனால..."

மனிதர் பேசாமல் சஸ்பென்ஸ் கதை எழுத ஆரம்பிக்கலாம். 'டோன்ட் பி லேட்'. மனசு அவரிடம்



கெஞ்சியது. அதைப் புரிந்து கொண்டார் போலிருக்கிறது. சட்டென்று சொன்னார் –

''எனக்கு நல்ல பொண்ணா பார்க்க வேண்டியது உங்க வேலை...''

இடி என்னை நொறுக்கியது.

''வாட் டிட் யு ஸே?'' அதிர்ச்சியில் வார்த்தை நடுங்கியது.

''எனக்காக நீங்க நல்ல பொண்ணா பார்க்கணும். பழகற விதம், பேசற பேச்சு, படிப்பு, அன்பு... எல்லாம் உங்களுக்கு ஈக்குவலா இருந்தாப் போதும். குறிப்பிட்டுச் சொல்லணும்னா உங்களை மாதிரி ஒரு பொண்ணு...''

என்னை மாதிரிதான். ஆனால் நான் வேண்டாம்.

என் கனவுச் செடியில் ஆஸிட் மழை. தாங்குமா...? இப்பச் சொல்லுங்க. சாய்ராம் வெடிவைத்தது என் வண்ணக் கனவுகளுக்கு மட்டுமா... எனக்கும் சேர்த்துத்தானே...?

'என்ன நீ சாய்ராம் மேல தப்பு சொல்லிக்கிட்டு... எப்போதாவது உன்னை லவ் பண்றேன்'னு சொல்லியிருக்காரா?...' என் மனசு கால் மேல் கால் போட்டு உட்கார்ந்து கொண்டு என்னை அதட்டியது.

அதுக்கென்ன தெரியும்... கூட சேர்ந்து கும்மாளம் போட்டுவிட்டு, இப்போது கிழிபட்டதும் ஒதுங்கிக் கொண்டுவிட்டது. அத்துடன் அதிகாரம் வேறு.

'லவ் பண்றேன்'னு சொன்னாத்தான் காதலா...? தொட்டுத் தழுவிப் பேசினாத்தான் காதலா..?

பார்வை போதாதா... உள்ளத்தை கூட்டி சுத்தப் படுத்துகிற மாதிரி சின்ன புன்னகை போதாதா...?

பிஸியான பாங்க் வேலைகளுக்கு நடுவே எதிர்பாராமல் எப்போதாவது இருவர் கண்களும் சந்தித்துக் கொண்டால், இரண்டு பேருமே பட்டும் படாமலும் சிரித்து வைப்போமே... இது காதல்தானே... 'நீங்க லீவு போட்டுட்டா அன்னைக்கு பூரா எனக்கு வேலையே ஓட மாட்டேங்குதுங்க...' என்று அவர் அசடு வழிந்தபோதெல்லாம் உச்சி குளிர்ந்ததே.. இது காதல்தானே...? ஒருநாள் என் கர்ச்சீப்பை எடுத்து அவர் முகம் துடைக்க.. அன்று முழுவதும் எனக்குள்ளே நான் மிதந்து கொண்டிருந்தேனே... அது காதலால்தானே...?

நான் அப்படித்தான் நினைத்திருந்தேன். சாய்ராம் நினைக்கவில்லையா...

இரவு முழுவதும் சாய்ராம் நினைவு தூக்கத்தை ஓட ஓட விரட்டிக் கொண்டிருந்தது.

''என்ன மீரா... கண்ணெல்லாம்

சிவந்திருக்கு?"

குளித்து முடித்துத் தலை துவட்டும் போது அம்மா கேட்டாள். ஏன் முரண்பாடு... மனசு கறுத்திருக்கு. கண் மட்டும் சிவந்திருக்கா...?

'ராத்திரி முழுக்க துளி கூட தூக்கம் இல்லை...' அம்மாவிடம் சொல்ல முடியுமா...? கேள்வி கேட்டுத் துளைத்து விடுவாள். 'ஏன்... உடம்புக்கு என்னாச்சு...? லீவு போட்டுட்டு வர்றியா, டாக்டர் கிட்டப் போகலாம்...?'

"அம்மா..."

அம்மா தோசையின் மேல் சட்னி வைத்தபடி "ம்ம்?" என்றாள்.

"எங்க பாங்க் கேஷியருக்கு நல்ல பொண்ணா வேணுமாம். வரதட்சணை எல்லாம் எதுவும் அதிகமா எதிர்பார்க்கலே. பொண்ணு என்னை மாதிரியே அழகா... கொஞ்சம் படிச்சிருந்தா போதுமாம். உடனே கல்யாணத்தை வெச்சுக்கணும்னு இருக்கார். யாரைப் பார்க்கலாம்? நம்ம மாமா பொண்ணு சீதாவை முடிச்சுடலாமா?"


வெலவெலத்தை கெட்ட கண்கள். நேரங்காலம் கிடையாதா? அம்மாவிடம் என்னைக் காட்டிக் கொடுத்துவிடும் போலிருக்கே... அம்மாவிற்கு தெரியாமல் பொங்கும் கண்ணீரை எப்படித் துடைப்பது? இம்சை.

"ஏண்டி... நல்ல இடம்னு சொல்றே. எவனுக்கோ ஏன் பார்க்கணும்?... உனக்கு முடிச்சுட்டா என்ன?.."

அதைக் காதால் கேட்பதில் எவ்வளவு இனிமை... கிழிந்து போன மனசுக்குத் தையல் போடுவது மாதிரி இருந்தது. பிறகுதான் உறைத்தது. வெறும் ஊசியில் நூல் இல்லாமல் போடும் தையல் இது.

அரை தோசையை அரைமணி நேரமாய் நான் சாப்பிடுவதைப் பார்த்து... "என்னாச்சு உனக்கு...?" அம்மா கேட்டாள், லேசான கவலையுடன்.

"நீங்க ஏன் வெளிமாநிலங்கள்ல கூட சொத்து வாங்கிப் போட்டீங்க, தலைவரே?"
"எவ்வளவு நாள்தான் 'ரீஜனல் பாலிடிக்ஸ்' நடத்தறது. தேசிய நீரோட்டத்துல கலந்துடலாம்னுதான்!"
- சீர்காழி வி. ரேவதி



"பசிக்கலேம்மா..."

எழுந்தேன்.

"ஏன்...?"

"பசியை மனசு தின்னுடுச்சு."

அம்மாவுக்குப் புரிந்திருக்குமா?

"**எ**னக்கு பொண்ணு பார்க்க ஆரம்பிச்சுட்டாங்களா...?" லஞ்ச் அவரில் சாய்ராம் கேட்டார்.

"தயக்கமா இருக்கு.." நான்.

"ஏன்?..."

"என் செலக்ஷன்ல தப்பு நடந்திடுமோன்னு..."

"டோன்ட் ஒர்ரி, மீரா. நீங்க ஒரு கழுதையைக் கட்டிக்கச் சொன்னாலும் அது கூட அட்ஜஸ்ட் பண்ணி குடும்பம் நடத்துவேன்..."

அடப்பாவி. அந்தக் கழுதை அளவிற்கு கூடவா நான் இல்லை...?

"சாப்பிடப் போகலையா...?" கேட்டேன்.

"பயமா...? உங்க சாப்பாட்ல பங்கு கேட்பேன்னு..."

"அப்படி நான் பயப்பட வேண்டிய அவசியமே இல்லை."

"ஏன்...?"

"சாப்பாடே எடுத்துட்டு வரலே..."

"வாங்க ஹோட்டலுக்கு போகலாம்..."

"சாப்பிட பிடிச்சா எடுத்துட்டு வந்திருக்க மாட்டேனா...?"

"புரியலையே..."

"நீங்க ஆம்பளை. பொம்பள மனசு உங்களுக்கு புரியாது!"

எவ்வளவு நேரம்தான் புரண்டு புரண்டு படுப்பது... யாரையும் பகைத்துக் கொள்ளாத நான் தூக்கத்தை மட்டும் எப்படி பகைத்துக் கொண்டேன்...? தெரியவில்லை. என் உதடுகள் தான் புன்னகையைத் தொலைத்து விட்டன என்றால் கண்களும் போட்டி போட்டுக் கொண்டு தூக்கத்தைத் தொலைத்து விட்டு வந்து நிற்கிறதே... என்ன செய்ய? எனக்குள்ளேயே இன்னொரு மீராவை வளர விட்டது என் தவறுதானே...

'மீரா... மாமாகிட்டே பேசினேன். அவரை பெண் பார்க்க அழைச்சுட்டு வரச் சொன்னார். நாளைக்கு லீவுதானே... நல்ல நாளும் கூட... பேசி முடிச்சிடலாம்.'

அம்மா சொன்னதை இப்போது நினைத்தாலும் நெஞ்சை யாரோ அழுத்துவது மாதிரி

இருந்தது. நாளை நல்ல நாளாம். அம்மாவிற்கு என்ன தெரியும்... என்னைப் பொருத்தவரை நாளை துக்கமான நாள் என்று.

இந்தக் கல்யாணம் முடியும் வரை என் மனத்தில் இருப்பதை முகம் எதிரொலிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்... எனக்குள் பயம் துளிர்விட ஆரம்பித்தது. சிதாவுக்கோ, மற்றவர்களுக்கோ என் மேல் சந்தேகம் வரக்கூடாது... இந்தக் கல்யாணத்தை நான் சந்தோஷமாக நடத்தி வைப்பது மாதிரி நடிக்க வேண்டும். எனக்கு நடிப்பு வருமா...?

எங்கேயோ கிளம்ப, கையில் பூட்டு சாவியுடன் தயாராய் இருந்த சாய்ராம் "வாங்க... வாங்க..." என்று என்னை உற்சாக மாய் வரவேற்றார்.

அவரைப் பார்க்க எனக்குப் பொறாமை யாக இருந்தது. எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறார்... நான் எப்போது இதுபோல் சந்தோஷமாக இருப்பேன்...? அப்படி ஒரு பாக்கியம் இனி கிடைக்குமா?... எனக்குள் வளர்ந்த கேள்விகள் அவர் வார்த்தைகளால் வெட்டப்பட்டன.

"ஏன் நின்னுட்டீங்க?... உள்ள வாங்க..."

'நின்னுட்டேனா?... இல்லையே, நல்லாப் பாருங்க. செத்துட்டேன்!' தொண்டைக் குழி வரை வந்த வார்த்தைக்குத் தடைபோட்டது எது?

"முதல் தடவையா இங்க வரீங்கன்னு நினைக்கறேன். ஐயாம் வெரி ஹாப்பி..." சாய்ராம் முகத்தில் பிரகாசிக்கும் புன்னகை.

'தயவுசெஞ்சு நான் இங்கிருந்து போகிற வரைக்கும் சிரிக்க வேணாம்'ன்னு சொல்ல லாமா?.... இல்லை என்றால் எனக்குள் இருக் கும் இன்னொரு மீரா விழித்துக் கொள் வாளே...

"உங்களுக்கு என் மாமா பெண்ணைப் பேசி முடிக்கலாம்னு இருக்கோம்... உங்களுக் குப் பிடிச்சிருந்தா! பெண் பார்க்கப் போ...க... லா...மா...?"


நெருப்பில்லையே அந்த வர்த்தைகள்... பிறகு ஏன் என் தொண்டைக் குழியிலிருந்து நுனி நாக்கு வரை சுட வேண்டும்...?

அவர் எதுவும் பேசாமல் மௌனமாக இருந்தார். அவருடன் பேசிக் கொண்டிருக்கும் பாக்கியம் இன்னும் எத்தனை நாட்களுக்குக் கிடைக்கப் போகிறது...

மௌனத்தை உடைத்தேன்.

"என் சொந்தமே வேணாம்னு நினைக்கறீங் களா...? வேற பொண்ணு வேணா பார்க்கட் டுமா...?"

பூனா பிள்ளையார்!



எந்த சந்தில் திரும்பினாலும், ஒரு பிள்ளையார் ஜகஜ்ஜோதியாகக் காட்சி அளிப்பார். கோட் சூட்போட்ட பிள்ளையார், ஹாக்கி மட்டையுடன் பிள்ளையார், அட்லாண்டா காட்சியுடன் ஒரு பிள்ளையார், சித்தி, புத்தியுடன் ஊஞ்சலாடும் பிள்ளையார் என்று ராட்சத அளவில்! எல்லாவற்றிற்கும் சிகரமாக "தகுடு சேட்" பிள்ளையார் காட்சி அளிப்பார். லட்சக்கணக்கான சீரியல்பல்பில் அலங்காரம் கண்கொள்ளாக் காட்சி.

போன வருஷம், மைசூர் அரண்மனை செட்டிங், இந்த வருஷம் 'உஜ்ஜயின் மஹாகாளேஸ்வர்' கோயில் மாடல். விநாயக சதுர்த்தியையொட்டி விழாக்கோலம் பூண்டு, பூனா நகர் "பூலோகத்தின் ஸ்வர்க்கம்" போல் காட்சி அளிக்கிறது.

— இந்திரா ராகவன்

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

சாய்ராம் என்னை உற்றுப் பார்த்தார். கண்கள் தகதகத்தன. முகத்தில் என்றும் காணாத மாற்றம்.

"என்னாச்சு... பதிலே காணோம்?!..." நான்.

"ஏன் இப்படி சொல்றீங்க...?"

'திக்'கென்றது.

"புரியலையே...?"

"நீங்க பொம்பள. ஆம்பள மனசு உங்களுக்குப் புரியாது!"

எனக்குள் சிலீரென்று எதுவோ பாய்ந்து குளிரவைத்தது. அவரை ஆசையுடன் நிமிர்ந்து பார்த்தேன்.

அவர் கண்களில் காதல் காத்திருந்தது. எனக்காக!



37. பறிபோன பொக்கிஷம்!

கண்டகோபாலனின் சித்தத்தில் வெற்றியளித்த போதை, நிதானத்தை அறவே துடைத்து விட்டிருந்தது.

சிற்ப மண்டபத்தில் நிகழ்ந்தவற்றைக் காவலர்கள் தெரிவித்தபோது, அதிகமாக அதைப் பற்றிக் கவலை கொள்ளாமல் சிறைக்குள்ளிருந்த மன்மசித்தனைக் காண விரைந்து கொண்டிருந்தான் அவன். எகத்தாள சிரிப்புடன் மன்மசித்தனை நெருங்கியவன், "காஞ்சியைக் கைப்பற்றுவது அத்தனை எளிதல்ல மன்மசித்தா" என்று கூறவும் செய்தான்.


மன்மசித்தனின் பதில் அலட்சியமாக வந்தது. "எந்த நிலையும் யாருக்கும் ஸ்திரமல்ல கண்டகோபாலா, உன் வெற்றியின் நிலை தாற்காலிகமானதுதான். விரைவில் மாறிவிடும்" - மன்மசித்தன் பதிலில் பெரும் தத்துவம் ஒலித்தது.

தோல்வியடைந்த பின்பு தத்துவம் பேசும் மன்மசித்தனை இன்னும் சற்று சீண்டிப் பார்க்க விரும்பிய கண்டகோபாலன், "மன்மசித்தா, ஒன்று மட்டும் எனக்கு விளங்கவில்லை" என்றான் போலிப் பரிவு ஒலித்த குரலில்.

"என்ன விளங்கவில்லை?" - எரிச்சலுடன் வந்தது மன்மசித்தனின் எதிர்க்கேள்வி.

"பகை உனக்கும் எனக்கும்தானே? நீ வீரன்தானே? எதற்காக சிற்பமண்டபம் சென்றாய்? என் மகளின் கரங்களைத் துண்டிக்க ஏன் கட்டளையிட்டாய்? அதற்கு எப்படி உனக்கு மனம் வந்தது?"

மன்மசித்தன் ஒருகணம் தாமதித்தே பதில் கூறினான். "எந்த சித்திரத்தைப் பொத்தப்பியில் சிலையாகவே வடிக்கப் போவதாகக் கூறி மன்னரின் தூதரிடம் என்னை எச்சரித்து அனுப்பி வைத்தாயோ, அந்த சித்திரத்தைத் தீட்டியது உன் மகள்தானே? சிற்ப மண்டபத்தில் அதைக் கண்டதும் உணர்ச்சியுடைய எந்த மனிதனுக்கும் ஏற்படும் ஆத்திரம் எனக்கும் ஏற்பட்டது" என்றவன் சற்று நிதானித்தான். தொடர்ந்து, "அந்த மஞ்சள் முகச்



சீனன் மட்டும் குறுக்கிடாவிட்டால் அவன் கரங்களைத் துண்டித்தும் இருப்பேன்'' என்றான் எரிச்சலுடன்.

கூட்டைத் தட்டியதும் பறந்து பரவும் தேனீக்களாக கண்டகோபலன் சித்தத்தில் கேள்விகள் பல பறந்து குழப்பத்தில் அவனை ஆழ்த்தின. ''மன்னரின் தூதரை உன்னை எச்சரிக்க அனுப்பி வைத்தேனா? யார் அந்தத் தூதர்? என்ன சித்திரம்? என்ன சிலை?'' - அவன் கேள்விகள் குழப்பத்திலேயே உதிர்ந்தன.

"ஆம். மன்னரின் தூதர்தான். இங்கிருந்து நம் தலைநகர் செல்லும் வழியில் பொத்தப்பிக்கு வந்து என்னை எச்சரித்தார். அந்த சித்திரத்தையும் காட்டினார். அவர்... அவர் பெயர்... ஆதித்யர்'' என்று முடித்தான் மன்மசித்தன். இதற்குள் அவன் முகத்திலும் குழப்பமும் சந்தேகமும் படர்ந்திருந்தன.

மேற்கொண்டு மன்மசித்தன் விவரிக்க விவரிக்க, கண்டகோபாலனின் தலை சுழலும் ஸ்திதிக்கே வந்தது. பாண்டிய தூதனாக வந்த சீனன் கூறியபடி, காகதீய மன்னன் தன்னை அகற்றிவிடத் தீர்மானித்திருப்பது உண்மைதான் என்ற விவரம் அவனைத் தாக்கியது. சோழ தூதனாக வந்த ஆதித்யன், சித்திரத்தைக் கொண்டு மன்மசித்தனை ஆத்திரமூட்டித் தன்னிடம் சிக்க வைத்திருப்பது பெரும் லாபம் என்பது புரிந்தாலும், காகதீய மன்னர் நேரிடையாக காஞ்சியை நோக்கி வந்தால், தான் தாக்குப்பிடிப்பது கடினம் என்பதும் புரிந்தது அவனுக்கு. மன்மசித்தனைத் தான் சிறை வைத்த பின்பு, மன்னன் கைகளைக் கட்டிக் கொண்டு பார்த்துக் கொண்டிருக்க மாட்டான் என்பதும் தெளிவாகவே புரிந்தது. ஆனால் சீனன் கூறியபடி ஆதித்யன் பாண்டிய இளவலா? - கண்டகோபாலன் குழம்பிய சித்தத்துடன் திரும்பி நடந்தான்.

சிறைக் கம்பிகளைப் பிடித்தபடி வெறித்த மன்மசித்தன் நிலையும் பெரும் குழப்பத்திலாழ்ந்தே கிடந்தது.

அரண்மனையை அடைந்து தன்



அருள்வாக்கு



அறைக்குள் உலவியபடியே சிந்தனையில் மூழ்கிவிட்ட கண்டகோபாலனுக்கு, காகதீய மன்னன் திருக்காளத்தியில் பாசறை அமைத்து விட்ட செய்தியும் வந்து சேர்ந்தது. இத்தனை காலம் காஞ்சியின் மன்னனாக சோழச் சக்கரவர்த்திகள் அமர்ந்த அரியணையில் அமரும் பாக்கியம் கிடைத்தவனுக்கு, காகதீய மன்னனுக்கோ, மனுமசித்தனுக்கோ அடங்கி வாழும் நிலை கிட்டுவதை விட உயிரை இழப்பதே மேல் என்ற எண்ணம் திடமாகவே எழுந்தது.

சிந்தனையுடன் உலவியவன் சட்டென்று நின்றான். அறையின் மூலையிலிருந்த பெரும் மரப்பேழையை விறுவிறுவென்று அணுகியவன், அதிலிருந்து சோழ தூதர் கொண்டு வந்த ஓலையுடன் முன்பு சோழர்களிடமிருந்து வந்திருந்த பல ஓலைகளையும் எடுத்துப் பிரித்தான். சோழ மன்னன் ஒப்பமும், சைவத் துறவியாரின் ஒப்பமும், இலச்சினைகளும், சோழதூதர் அளித்த ஓலையுடன் ஒத்திருப்பதையும், எழுத்துக்களும் ஒரே விதமாக இருப்பதையும் கவனித்தவன், தூதராக வந்த ஆதித்யன் அளித்த ஓலை, போலியாக இருக்க முடியாது என்ற தீர்மானத்துக்கு வரவும் செய்தான். அடுத்து அவன் புத்தி துரிதமாக இயங்கத் தொடங்கியது. சோழ மன்னன் அழைப்பின் பேரிலேயே சோழ நாட்டை அடைந்து விட்டால், அவர்களுக்கு உதவவும், தான் அங்கேயே ஸ்திரப்படுத்திக் கொள்ளவும் செய்வது மட்டுமின்றி காகதீய மன்னனும் சோழ மன்னர் ஆதரவை மீறி எதுவும் செய்ய இயலாது என்ற தீர்மானத்திற்கும் வந்தான். நெருங்கி வரும் அபாயத்திலிருந்து மீள இதைவிடச் சிறந்த வழியேதும் புலப்படவில்லை அவனுக்கு. இருக்கும் காலமும் குறைவு என்ற உண்மை அவனை உடனே செயலில் இறங்கவும் வைத்தது.

பிரதானிகளையும் படைத்தலைவர்களையும் அழைத்து தனது தீர்மானத்தை வெளியிட்டவன், காஞ்சியின் செல்வங்களையும், விலையுயர்ந்த மணிகளையும் பொன்னையும், கற்களையும் பேழைகளில் ஏற்றி, போர்க்களிறுகளின் மீது கயிறுகளைக் கட்டிச் சுமக்க ஏற்பாடுகள் செய்யும்படி உத்தரவிட்டான். ஸ்வர்ணமுகி, ரதமொன்றில் தகுந்த பாதுகாவலுடன் பின்தொடர ஏற்பாடு செய்தவன், உடன்வர விரும்பிய படைத்தலைவர்களுடன் புறப்பட்டான். கதிரவன் மறைந்து முதல் ஜாமம் தொடக்கத்தில் தெற்கு நோக்கிய அவன் பயணம் ஆரம்பமானது.

'எந்த நிலையும் யாருக்கும் ஸ்திரமல்ல' என்ற மனுமசித்தனின் வார்த்தைகள் வேத வாக்கு போல் தோன்றியது கண்டகோபாலனுக்கு. பின்புறத்தில் விலகிக் கொண்டிருந்த காஞ்சியின் உயர்ந்த மதில்களைப் பார்த்தபடியே ரதத்தில் அமர்ந்திருந்த ஸ்வர்ணமுகியின் உள்ளத்தில் பெரும் துக்கம் சூழ்ந்து கிடந்தது. காஞ்சிமா நகரையும் தான் சேர்த்த கலைச் செல்வங்களையும் விட்டுப் பிரிவது பெரும் சோகத்தையளித்தாலும் காவிரி பாயும் சோழ நாட்டிற்குத்தான் செல்கிறோம் என்ற நினைவு சற்று ஆறுதலையும் ஏற்படுத்தியது அவளுக்கு.

ஏறக்குறைய பத்து காதங்கள் வந்தபின்பும், சோழ எல்லையில் உலவுவதாகக் கூறப்பட்ட பாண்டியர் படைகளின் எந்த அறிகுறியும் தென்படவில்லை. எந்த இடையூறும் ஏற்படாத கண்டகோபாலனுக்கு நம்பிக்கையையும், தானிட்ட திட்டம் சரியானதுதான் என்ற திருப்தியையும் ஏற்படுத்தியது. அதிகமாகப் பந்தங்களை ஏற்ற வேண்டாமென்றும், துரிதமாக அணிவகுப்பை நடத்தவும் உத்தரவிட்டவன், கவசங்களுடனும் இடையில் தரித்த வாளுடனும் புரவியிலமர்ந்து முன்னால் சென்றான்.

அதே சமயத்தில் காஞ்சிக்குத் தெற்கில் – கண்டகோபாலன் விரைந்து கொண்டிருந்த பிரதானப் பாதையிலிருந்து விலகிய கிளைப் பாதையின் முடிவிலிருந்த ருத்ரவாலீஸ்வரத்து குகைக் கோயிலில் – பெரும் பரபரப்பு நிலவிக் கொண்டிருந்தது. குகை வாயிலில் காடவ வீரர்கள் வாட்களுடனும் வேல்களுடனும் பந்தங்களின் ஒளியில் காத்துக் கொண்டிருக்க, உட்பகுதியில் காடவராயன் தன் உபதலைவர்களிடம் தனது திட்டத்தை விளக்கிக் கொண்டிருந்தான். காஞ்சியிலிருந்து வந்து கொண்டிருந்த செல்வங்களும் போர்க்களிறுகளில் வரும் பொற்குவியல்களும் தனது சிறுபடையை நிர்வகிக்கப் போதுமானவை என்பதை உணர்ந்தவன், அவற்றை அபகரிக்கும் தனது திட்டத்தை விளக்கத் தொடங்கினான்.

உபதலைவனொருவனின் குரல் எழுந்தது. "பிரபு, கண்டகோபாலன் படையில் மூவாயிரத்துக்கும் குறையாத வீரர்கள் இருக்கிறார்களே பிரபு... நம் திட்டம் நிறைவேறுமா?" என்று.

காடவராயன் அவனை எரித்து விடுவது போல பார்த்தான். "முட்டாளே! எடுத்த எடுப்பிலேயே அவநம்பிக்கையுடன் பேசாதே.

பிள்ளையார் யானைக்கு யானை; குழந்தைக்குக் குழந்தை. அதனால் அவரை எத்தனை பார்த்தாலும் போதும் என்ற திருப்தி உண்டாவதில்லை. கள்ளம் கபடம் இல்லாத குழந்தை மனசு அவருக்கு. குழந்தை போல் நல்ல உள்ளம்; யானை மாதிரி தேகபலம், புத்திக் கூர்மை; எல்லாவற்றுக்கும் மேலாக தெவிட்டாத அழகு; ஆனந்தம் பொங்கிக் கொண்டிருக்கிற ரூபம்.

சேராததெல்லாம் அவரிடம் ஸ்வபாவமாகச் சேருகிறது. கழுத்துக்குக் கீழே குழந்தை; மனித வர்க்கம். மேலே முகம் யானை; மிருக வர்க்கம். ஆனால் அவர் வாஸ்தவத்திலே தேவ வர்க்கம். தேவர்களுக்குள் முதல் பூஜை பெறும் தெய்வமாக இருக்கிறார்.

குழந்தையாக இருந்துகொண்டே மஹா பெரிய தத்வங்களுக்கு ரூபகமாக (personification) இருக்கிற பிள்ளையாரிடம் பல தினுசான மாறுபாடுகள் (contrasts). இதிலே ஓர் அழகு. வித்தியாசமானதெல்லாம் அவரிடம் சேர்ந்திருப்பதாலேயே அவரிடம் எல்லாம் ஐக்கியம் என்றாகிறது. உதாரணமாக, ஒரு கையில் ஒடிந்த தந்தம் என்றால், இன்னொரு கையிலே கொழுக்கட்டை வைத்திருக்கிறார். அதற்குள் தித்திப்பாக இருக்கிற வஸ்துவுக்குப் பெயர் பூர்ணம். பூர்ணம் என்றால் முழுமை. ஒரு கையில் இருக்கிற தந்தம் மூளி; இன்னொன்றிலோ முழுமை. எல்லாம் நிறைந்த பூரணப் பொருள் பிள்ளையாரேதான். இதை அறிந்து கொள்வதுதான் பேரானந்தம். ஆனந்தத்துக்கு இன்னொரு பேர் மோதம், மோதகம். கொழுக்கட்டைக்கும் மோதகம் என்றே பெயர்.

இன்னொரு மாறுபாடு; பிள்ளையார் குழந்தை. அதனால் பிரம்மசாரி. ஆனால் இவர் யானையாக வந்து வள்ளியை மிரட்டியதால்தான் அவள் ஸுப்ரம்மண்ய ஸ்வாமியைக் கல்யாணம் செய்து கொண்டாள்! இன்றைக்கும் கல்யாணம் ஆக வேண்டுமானால் இந்தக் கட்டைப் பிரம்மசாரியை வேண்டிக் கொள்கிறார்கள். இதற்கு என்ன அர்த்தம்? அவர் இருக்கிற நிலையில் அவருக்கு வேண்டாததையெல்லாம் கூட, அவர் நிலைக்கு மாறாக இருக்கிற நமக்குப் பரம கருணையோடு கொடுத்துக் கொஞ்சம் கொஞ்சமாகத் தூக்கி விடுகிறார். தாம் உட்கார்ந்த இடத்தை விட்டு அசையாமலே இருந்தாலும், பக்தர்களை ஒரே தூக்காகத் தூக்கி உச்சத்தில் சேர்த்து விடுவார்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

காஞ்சியிலிருந்து கண்டகோபாலன் வெளியேறி வரும் செய்தியை அறிவித்தவனே நீதான். உடன்வரும் செல்வங்களின் அளவும் நீ கூறியவைதான். அதை நாம் அடைய வகுக்கும் திட்டத்தில் நீயே அவநம்பிக்கை காட்டலாமா? நாம் கண்டகோபாலனுடன் சென்று போரிடவா போகிறோம்?'' என்றான் உஷ்ணம் தெறித்த குரலில்.

''விளங்கவில்லை பிரபு. போரிடாமல் அந்தப் பேழைகளை அடைவது எப்படி?'' என்ற அந்த உபதலைவனைத் தொடர்ந்து பல குரல்கள் ஒலித்தன.

இருக்கையிலிருந்து எழுந்து அனைவரையும் கையமர்த்திய காடவராயன், ''கவனமாகக் கேளுங்கள். நம் உபதலைவன் கூறியபடி கண்டகோபாலன் மூவாயிரம் வீரர்களுடன் வந்து கொண்டிருப்பது உண்மைதான். அதிலும் பாதிக்கு மேல் புரவி வீரர்கள். ஒரு பகுதி முன்னணியிலும் மறுபகுதி காலாட் படைகளின் பின்னால் பேழைகளைச் சுமந்த யானைகளைச் சுற்றியும் வந்து கொண்டிருக்கிறது. நாம் இறுதிப் பகுதியை மட்டுமே தாக்க வேண்டும்.''

உபதலைவன் குரல் மீண்டும் ஒலித்தது : ''முன்னாலிருக்கும் புரவி வீரர்கள் நம்மைத் தாக்க மாட்டார்களா பிரபு?''

''பொறுமையாகக் கேள். தெற்கே செல்லும் பாதை பாலாற்றைக் கடந்தபின் தென்னாறு வரையில் நேர்ப்பாதையாகச் செல்கிறது. பிறகு கிழக்கு நோக்கி வளைந்து மல்லைத் துறையிலிருந்து வரும் பிரதான பாதையுடன் இணைகிறது. இடைப்பட்ட அந்தப் பகுதி மலைகளும் குன்றுகளும் நிறைந்த காட்டுப் பகுதி. பாதையும் குறுகலாகி வளைந்து வளைந்து குன்றுகளினிடையே செல்கிறது. அந்த இடத்தை கண்டகோபாலன் வெள்ளி முளைப்பதற்குச் சற்று முன்னதாக அடையலாம். நாம் முன்னதாகக் குறுக்கு வழியில் சென்று காத்திருக்க வேண்டும்'' – காடவராயன், தான் கூறியவை வீரர்கள் மனத்தில் பதிய சற்று அவகாசமளித்து விட்டுத் தொடர்ந்தான்.

''முன்னாலிருக்கும் புரவி வீரர்கள் குன்றுகளின் வளைவு திரும்பியதும் நான் சமிக்ஞை தருகிறேன். உடனே இறுதிப் பகுதியில் தாக்குதலைத் தொடங்குங்கள். புரவியிலிருந்தபடியே களிறுகளின் பொக்கிஷக் கயிறுகளை அறுத்து விட்டால் பேழைகளைக் கைப்பற்றி விடலாம். துரிதமாக பேழைகளைத் தயாராக இருக்கும் எனது ரதத்தில் ஏற்றி விட்டால் பிறகு கவலையில்லை. நீங்கள் என்னைப் பின்தொடர்ந்து வந்து விடுங்கள். ஆனால் ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக் கொள்

ளுங்கள். நம் நோக்கம் போரிடுவது அல்ல. நம் வீரத்தைக் காட்டுவதுமல்ல. பேழைகளைக் கைப்பற்றுவது மட்டுமே. புறப்படுங்கள்" என்ற உத்தரவுடன் முடித்தான் காடவராயன்.

சோழ நாட்டை விழுங்க வரும் பெரும் சர்ப்பம் போல் இருளில் நகர்ந்து கொண்டிருந்த கண்டகோபாலனின் படைப்பிரிவு தென்னாற்றைக் கடந்து கொண்டிருந்தது. இரு பக்கங்களிலும் கரிய பூதங்களைப் போல் எழுந்து நின்ற குன்றுகள், பல ரகசியங்களை மறைத்து வைத்திருக்கும் குகைகள் போலத் தெரிந்தன. காற்றில் அபாயம் கலந்திருப்பதை நுகர்ந்த புரவிகள் ஓரிருமுறை கனைத்து வீரர்களை எச்சரிக்க முயன்றன. அச்சத்தில் கண்சிமிட்டிய விண்மீன்கள் துணைக்கு விடிவெள்ளியை அழைத்து விட்டு ஒவ்வொன்றாக மறைய முற்பட்டன. விண்மீன்களுக்கு ஆறுதல் கூற முயன்ற பின்னிரவின் நிலவும் அச்சத்தில் வெளுத்துக் கிடந்தது.

அழகிய பெண்ணின் இடைபோல குறுகிக் கிடந்த பாதையில் புரவிகளும் வீரர்களும் பின்தொடர்ந்த களிறுகளும் மிக நெருக்கமாகவே சென்றன. அணிவகுப்பு, சர்ப்பத்தின் வால் போல நீளமாகத் தொடங்கியது. எங்கோ ஒற்றை நரியொன்று ஓலமிட்டு ஓய்ந்தது. பாறையொன்றின் மீதிருந்து தீப்பந்தமொன்று கொள்ளிவாய்ப் பிசாசாக ஆடியது. அடுத்து, அணிவகுப்பின் பின்பகுதியில் எழுந்தது பெருங்கூச்சல்! உயர்த்திய வாட்களுடன் அணிவகுப்பைத் திடீரென ஊடுருவிய காடவராயனின் படையினர், யானைகளின் மீது அமர்ந்து வந்த பாகர்களையும் வீரர்களையும் குறிவைத்து ஈட்டிகளை எறிந்தபடியே நெருங்கினர். ஈட்டிகளில் சில, களிறுகளின் மீதும் பாய்ந்ததால் திடீரென எழுந்த பிளிறல்கள் அந்தப் பிராந்தியத்தையே கலங்க அடித்தன. வாட்கள் மோதும் ஒலியும், வீரர்களின் கூக்குரல்களும் தொடர்ந்து கேட்டன. பேழைகளைக் கட்டியிருந்த கயிறுகளை வாட்களால் வெட்டி, பேழைகளைப் புரவியிலிருந்தபடியே தாங்கிக் கொண்ட காடவர்கள் மற்ற வீரர்கள் அளித்த பாதுகாப்பில் தூரத்தில் இருளில் தயாராக நின்ற ரதத்தை நோக்கி விரைந்தனர்.

நேர்ந்த அபாயத்தை உணர்ந்து கொண்ட கண்டகோபாலன், வீரர்களிடையே வழியேற்படுத்திக் கொண்டு பின்பகுதிக்கு விரைந்தான். புரவி வீரர்களைப் பக்கவாட்டிலும், காலாட்படை வீரர்களை நேர் எதிரிலும் நிற்கச் செய்து, அம்புகளைப் பொழிய உத்தரவிட்டான். வந்தவர்கள் நிச்சயம் பாண்டியர்கள் அல்ல, காடவராயனின் வீரர்கள் என்பதை உணர்ந்து கொண்டான். சினம் தலைக்கேற வாளைச் சுழற்றியவன், காடவர்கள் தப்பிக்க முற்படுவதையும் தனது பொக்கிஷப் பேழைகளில் பாதிக்கும் மேல் பறிபோயிருப்பதையும் கண்டு, புரவி வீரர்களின் ஒரு பிரிவை காடவ வீரர்களைத் தொடர்ந்து சென்று தாட்சண்யமின்றிக் கொன்று விடுமாறும் உத்தரவிட்டான். கள்ளர்களைப் போல தாக்கி, பேழைகளுடன் ஓடத் தொடங்கிவிட்ட காடவர்களைக் கண்டு திகைப்பில் நெடுநேரம் நின்றான் கண்டகோபாலன்.

இடையில் ஏற்பட்ட அந்தக் குறுக்கீட்டினால் சற்றுக் கலக்கம் உண்டானாலும் எடுத்த தீர்மானத்தின்படி சோழநாட்டை அடைந்து விடுவதே உசிதம் என்ற எண்ணம் அவனுக்கு மட்டுமின்றி உடன் வந்த படைத் தலைவர்களுக்கும் உறுதிப்பட்டது. கருக்கல் முடிந்து, ஒளிபரவத் தொடங்கிய தருணத்தில் அணிவகுப்பை ஒழுங்குபடுத்திய கண்டகோபாலன், மீண்டும் பயணத்தைத் தொடர முற்பட்டான்.

பாதையை மூடிக்கிடந்த இருளையும், குன்றுகள் பொதித்து வைத்திருந்த ரகசியங்களையும் வெளிப்படுத்தியபடி கதிரவன் உதயமாகிக் கொண்டிருந்தான். கிழக்கு நோக்கித் திரும்பிய பாதையில் நகர்ந்த அணிவகுப்பு, அரை ஜாம நேரத்தில் மல்லையிலிருந்து வரும் பிரதானப் பாதையை அடைந்தது.

குன்றுகளைத் தாண்டி சமவெளிக்கு வந்த பாதையின் வளைவில் திரும்பிய கண்டகோபாலன், எதிரே விரிந்த காட்சியைக் கண்டு திக்பிரமையில் உறைந்தான். உடன் வந்த படைத்தலைவர்களும் பிரமிப்பில் அடித்து வைத்த சிலைகளாக உறைந்தனர்.

எங்கோ இன்னும் பல காதங்களுக்கப்பால் இருப்பதாகக் கருதிய பாண்டியர் படை அவன் எதிரில் அணிவகுத்து நின்றிருந்தது! பின்புறத்திலிருந்து வீரர்களின் வாட்களும் வேல்களும் கதிரவன் ஒளியில் மின்ன, தனது சாம்பல் நிறப் புரவியில் ஆரோகணித்து, சலனமற்ற கூர் விழிகளால் கண்டகோபாலனை உற்றுநோக்கியபடி அமர்ந்திருந்தான் ஜடாவர்ம வீரபாண்டியன்.

தோளின் பின்புறமிருந்து அந்த சினத்து வாளின் பிடி மட்டும் எட்டிப் பார்க்க, புரவியொன்றில் அமர்ந்திருந்தான் தூதனாக வந்த சினன். வீரபாண்டியன் அடுத்து ஏதோ கூறியதைத் தொடர்ந்து சினனின் புரவி சமத்கார நடையுடன் கண்டகோபாலனை நெருங்கியது.

(தொடரும்)



• பேப்பர் படிச்சீங்களா நிகழ்ச்சியில்...



• நடராஜன்

முகம் மாறி வரும் DD5!

தனியார் தொலைக் காட்சிகளின் ஆரவாரமான வெற்றி ஒருபுறம் இருக்க, தூர்தர்ஷனின் ஐந்தாவது சேனல் (செயற்கைக்கோள் ஒளிபரப்பு) சப்தமில்லாமல் மக்களிடையே வரவேற்பு பெற்று வருகிறது. சினிமாவைக் குறைத்துக் கொண்டு போட்டிகள், மருத்துவம், பட்டி மன்றம், விளம்பரதாரர் நிகழ்ச்சிகள் என்று முற்றிலும் முகம் மாறி விட்டது சேனல்-5.

ஏன் இந்த திடீர் மாற்றம்? போட்டிகளைச் சமாளிக்கவா? தொலைக்காட்சி நிலைய இயக்குநர் நடராஜனைச் சந்தித்த போது, ''தூர்தர்ஷனுடன் யாரும் போட்டி போட முடியாது. எப்போதும் நாங்கள்தான் நம்பர் ஒன்!'' என்று அதிரடியாக ஆரம்பித்தார்.

''தமிழ்நாட்டில் மட்டுமல்ல; வெளி மாநிலங்களிலும் டிடி-5 நிகழ்ச்சிகளுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. டிடி-5ல் ஒளிபரப்பாகி நல்ல வரவேற்பு பெறும் விளம்பரதாரர் நிகழ்ச்சிகளுக்கு முதல் சேனலில், தமிழ் ஒளிபரப்பு நேரத்தில் மறு ஒளிபரப்பு செய்யும் வாய்ப்பும் தருகிறோம். இதனால் சீரியல் தயாரிப்பாளர்களுக்கு இரட்டை மகிழ்ச்சி என்பதுடன் நிறைய பேர் 'நான்-நீ' என்று போட்டி போட்டுக் கொண்டு வரத் தொடங்கியிருக்கிறார்கள்!'' என்கிறார் நடராஜன்.

திரையுலகப் பிரபலங்கள் பலர் தற்போது டிடி-5க்கு வந்திருப்பது ஒரு வியப்பு என்றால் சமீபத்தில் ஒட்டு மொத்தமாக 16 தொடர் நிகழ்ச்சிகளுக்கு இங்கே அனுமதி தந்திருக்கிறார்கள்.

ஜெமினி கணேசன், 'அன்றும் இன்றும் என்றும்' என்ற தலைப்பில் தமது திரையுலக அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளப் போகிறார்.

செய்தித்தாள் அடிப்படையில் 'பேப்பர் படிச்சீங்களா?' என்றொரு குவிஸ் வரப் போகிறது.

சுஜாதாவின் கொலையுதிர்காலம் நாவலை, பத்திரிகையாளர் பாவைசந்திரன் தொடராக வழங்கப் போகிறார். (சுஜாதாவின் மற்ற நாவல்களும் தொடர்ந்து வரப் போகின்றனவாம்!)

மாவட்டவாரியாக கேபிள் டீவி ஆபரேட்டர்களைச் சந்தித்து ஆதரவு திரட்டல், அவர்களை குஷிப்படுத்த கவர்ச்சிகரமான பரிசுத் திட்டங்கள் என்று இப்போது மும்முரமாக இருக்கிறது தூர்தர்ஷன்.

தனியார் டீவிக்களுடன் போட்டி இல்லை என்று நடராஜன் சொன்னாலும் நடவடிக்கைகள், போட்டியில் ஜெயிக்கிற வேகத்தைத்தான் காட்டுகின்றன. எது எப்படியோ, உருப்படியான நிகழ்ச்சிகள் தொடர்ந்து வந்தால் சரி.

- எஸ். சந்திரமௌலி

அம்மாவின் அறிக்கைகளில் கவர்ந்த அம்சம்...?

நீங்கள் கேட்டவை
— தராசு

● ஜோ. ஜெயக்குமார், நாட்டரசன்கோட்டை.

? நாடாளுமன்றம் மற்றும் சட்டசபையில் பெண்களுக்கு 33 சதவிகிதம் இட ஒதுக்கீடு அளிக்கும் சட்டம் நிறைவேறினால், நாட்டில் பெரும் அளவில் மாற்றம் ஏற்படும் என்று வி.பி. சிங் கூறியுள்ளாரே...?

! ஒரு புடலங்காய் மாற்றமும் ஏற்படாது. அந்தந்த கட்சிகளைச் சேர்ந்த ஆண் பிரபலங்கள் தத்தமது வீட்டுப் பெண்களை நிற்க வைத்து, அவர்கள் மூலம் தாங்களே சட்டமன்றம், நாடாளுமன்றம் மற்றும் உள்ளாட்சி மன்றங்களில் இருந்து வருவார்கள். எதற்கெடுத்தாலும் ஒதுக்கீடு என்பது அபத்தம். அனைவருக்கும் சமவாய்ப்பு என்பதே சரி.

● ஆர். அருணாசலம், திருவண்ணாமலை.

? சச்சினின் தலைமையில் நடந்த முதல் கிரிக்கெட் போட்டி எப்படி இருந்தது?

! நன்றாகவே இருந்தது. நம்மிடம் உள்ள முக்கிய குறைபாடு, சிறந்த போலர்கள் இல்லாததே - குறிப்பாக வேகப் பந்து வீச்சாளர்கள்.

● எஸ். ராமசுப்ரமணியன், தூத்துக்குடி.

? ரகுவரன் - ரோகிணி திருமணம் பற்றி தராசின் கமெண்ட் என்ன?

! எதிர்பாராததுதான் எனினும் வாழ்த்துக்கள்!

● அஜார், சென்னை - 18.

? அம்மாவின் அறிக்கைகளில் தங்களைக் கவர்ந்த அம்சம் எது?

! நகைச்சுவை!

● ரொசாரியோரவிச்சந்திரன், சென்னை - 59.

? இந்தியன் வங்கியின் முன்னாள் நிர்வாக இயக்குனர் எம். கோபால கிருஷ்ணன் த.மா.காவில் சேர்ந்தது குறித்து...?

! அதான் சேர்ந்த வேகத்திலேயே வெளியே வந்துட்டாரே! நிஜமோ பொய்யோ, சில குற்றச்சாட்டுகளால் தமது இமேஜ் பாதிக்கப் பட்டுள்ளதால் கட்சியின் இமேஜும் பாதிப்புக்குள்ளாகக் கூடாது என்கிற நல்ல எண்ணம் பாராட்டுக்குரியது.

● ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம் - 1.

? 'இந்திய அரசியலை இயக்கும் ரிமோட் கண்ட்ரோலே வருக...' என்று மதுரையில் கருணாநிதிக்கு விளம்பரம் வைக்கப்பட்டுள்ளதே?

! தப்பு! ரிமோட் கண்ட்ரோலில் உள்ள பல பட்டன்களுள் இவரும் ஒரு பட்டன் - அவ்வளவுதான்!

● கு. கணேசன், காட்டாங்குளத்தூர்.

? சசிகலா தொடர்பைத் துண்டித்து, 'சுதாகரன் தனது வளர்ப்பு மகன் அல்ல' என்று அறிவித்த ஜெயலலிதாவின் செயலை, அ.தி.மு.க.வினர், 'மாபெரும் தியாகம்' என்று வர்ணிக்கிறார்களே...?

! காதிலே பூ சுற்றுவதில் தலைவியை மிஞ்சி விட்டார்கள்!

● பி. அன்பழகன், காத்தநத்தம்.

? தாழ்ந்து போவதால் நமக்கு அவமானமா?

! தலைசாய்ந்து நிற்கும் கதிர்களில் தான் பதர்கள் இருக்காது... Oliver Goldsmith எழுதிய நாடகத்தின் தலைப்பு She Stoops to Conquer!



● என். கே. மூர்த்தி, சென்னை - 4.

? முதன் முறையாக இந்தியாவில் நடக்கப் போகும் உலக அழகிகள் போட்டிக்குச் சில மாதர் சங்கங்கள் எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றனவே...? இந்த விஷயத்தில் நீங்கள் யார் கட்சி...?

! தோற்கிற கட்சி! அயல்நாட்டு மோகம் சகல

துறைகளிலும் இங்கு வேகமாகப் படையெடுத்து நம்மை வெற்றி கொண்டு வருகிறது. அதில் ஒரே ஒரு அம்சம்தான் அழகிப் போட்டி என்பது.. மேற்கத்திய மோகம் என்கிற பெரும் புய லைத் தடுத்து நிறுத்த முடியுமா...? அடி மைப்பட மாட்டோம் என்று மக்களே தீர் மானித்தால்தான் உண்டு!

● இ. சுபாகரன், சென்னை – 33.

? ஜெயலலிதா சுதாகரனை வளர்ப்பு மகனாகச் சட்டப்படி சுவீகாரம் செய்ய வில்லையாமே...?

! எதையுமே சட்டப்படி, தர்மப்படி செய் யாதவர் – இதையும் செய்யவில்லை என்றா கிறது.

● சி. தேவி, விருதுநகர்.

? மக்கள் முதலீடு செய்யும் பணத்தை ஏமாற்றும் போலி நிதி நிறுவனங்கள் பற்றி?

! மக்களின் பேராசையைச் சாதகமாக்கிக் கொண்டுதான் ஏமாற்றுக் கம்பெனிகள் உலா வருகின்றன. நியாயமான ஆசைகள் உடைய யாரும் ஏமாறுவதில்லை.

● இ. ராதாகிருஷ்ணன், பட்டுக்கோட்டை.

? கோயம்பேடு வணிக வளாகத்திற்கு 'கருணாநிதி' பெயர் வைக்கவேண்டும் என்று அமைச்சர்கள், எம்.எல்.ஏக்கள் விடுத்த கோரிக்கையை முதல்வர் நிராகரித்துவிட் டாரே...?

! இதனாலெல்லாம் கலைஞரைத் திருப்திப் படுத்த முடியாது என்று இப்போதாவது புரிந்து கொண்டால் சரி... அமைச்சர்களும் எம்.எல். ஏக்களும் தத்தம் கடமைகளைச் செவ்வனே, நாணயமாக ஆற்றி, நல்லாட்சி வழங்கினாலே முதல்வரின் பெயரை சரித்திரம் போற்றும் வகையில் விளங்கச் செய்ய முடியும்.



● த. சீனிவாசன், தாண்டாம் பாளையம்.

? 'ஆளுக்காக அல்ல, கொள்கைக்காகவே அ.தி. மு.க.வில் இருக்கிறேன்...' என்கிறாரே நெடுஞ்செழியன்.

! கொள்கை என்னவாம்... கொள்ளையா?

● கு. நாகராஜன், குருசாமிபாளையம்.☐

? எம்.எல்.ஏக்களுக்குச் சம்பள உயர்வு தேவைதானா...?

! அமைச்சர்களுக்கு இருபத்தைந்தாயிரம், எம்.எல்.ஏக்களுக்குப் பதினைந்தாயிரம் என்று தாராளமாகச் சம்பளம் தரலாம். கூடவே, இதற்கும் மேல் லஞ்சம் வாங்குவோரைத் தண்டிக்க, கடுமையான சட்டங்கள் கொண்டு வர வேண்டும்.


• அவசர விலகல்


• ஒதுக்கீடு ஜுரம்!


• முதல் முயற்சி


• சட்டப்படி...


• ....செல்லாது!


• பட்டன் மட்டுமே

●ஆர்.கே. எஸ். சங்கனி, கடலாடி.

? ஒவ்வொரு இல்லத்தரசிக்கும் அவர் விரும்புகிற ஒரு நாளில் வாராந்திர விடுமுறை அளிக்கப்படவேண்டும் என மாநிலங்களவையில் காங்கிரஸ் உறுப்பினர் சரோஜ் கபார்டே மசோதா கொண்டு வந்தது பற்றி...?

! 'இன்னிக்கு உனக்கு லீவுதானே, என் துணிகளைத் துவைச்சுடு அல்லது ஸ்பெஷலா பிரியாணி பண்ணிடு... அல்லது பசங்க ஸ்கூல்ல டீச்சரைப் பார்த்துட்டு வந்துடு...!' இப்படி மற்ற நாட்களில் முடியாத எக்ஸ்ட்ரா வேலைகளை அந்த நாளில் அவள் தலையில் கட்ட சௌகரியமாய் இருக்கும்!

● எஸ். விஜயலட்சுமி, ஸ்ரீவில்லிபுத்தூர்.

? "அயோக்கியனின் கடைசி புகலிடம் அரசியல்" என்பது உண்மையா?

! முதல் புகலிடமே அதுதான் என்று சொல்கிற அளவுக்கல்லவா இன்றைக்கு நிலைமை இருக்கிறது!

☐ ரூ. 25 பரிசு பெறுபவர் :
கு. நாகராஜன்,
7/15, பாவடித் தெரு,
குருசாமிபாளையம், சேலம் – 637 403.



செய்திகள் வாசிப்பது செம்பியன்

தண்ணீர் ஊற்றி காரையும் ஸ்கூட்டரையும் ஓட வைக்க முடியுமா? முடியும் என்கிறார் ராமர்! தண்ணீருடன் ஒரு மூலிகையைக் கசக்கிச் சாறு பிழிந்து கலக்கி, சில ரசாயனப் பொருள்களையும் சேர்த்தால் பெட்ரோலுக்குப் பதில் படுமலிவான ஒரு எரிபொருள்! ராமரின் இந்த கண்டு பிடிப்பு டில்லியில் படேபடே விஞ்ஞானிகளை வியக்க வியக்க வைத்திருக்கிறது. மேலும் ஆராய்ச்சிகள் செய்து தொழில் ரீதியாக இதைத் தயாரிக்கு முன் சர்வதேச "பேடண்ட்" உரிமை பெற்று விடுவதில் ராமர் தீவிரமாக இருக்கிறார். ராமரின் முயற்சிகள் வெற்றி பெற்றால் அவர் கோடீசுவரர் ஆவது மட்டுமல்ல; இந்தியாவே குபேர நாடாகும் வாய்ப்புண்டு! இந்த would be கோடீசுவரர் பள்ளிப்படிப்பைப் பாதியில் விட்டவர்!



• மேண்டி

தொழில் வியாபாரத்தில் லாபநோக்கு எவ்வளவு முக்கியமோ அந்த அளவுக்கு நேர்மையும் முக்கியம் என்ற கருத்துடன் செயல்படுவோர் அரிதாகி வரும் இந்நாளில், எம்.வி. அருணாசலத்தின் மறைவு ஒரு பேரிழப்பு. வட்டித் தொழில் நடத்தி வந்த குடும்பம், நாடு சுதந்தரம் பெற்ற பிறகு, 'தொழில் துறை முன்னேற்றம்தான் தேசபக்தி' என்று உணர்ந்தது. முருகப்ப செட்டியார் செயலில் இறங்கினார். அடுத்த தலைமுறையைச் சேர்ந்த எம்.வி. அருணாசலம் தொழில் வர்த்தகத்தை ஒரு சாம்ராஜ்யமாக விரிவடையச் செய்தார். தொழிலாளர் நலன் பேணுவதிலும் சமுதாய நலனுக்குச் செய்வதிலும் 'முருகப்பா குரூப்' முன்னிலையில் நின்றது. 'இந்தக் கொடையுள்ளம், எளிமை, நாணயம் எல்லாம் எப்படி வந்து சேர்ந்தன?' என்று நான் ஒரு சமயம் அதிசயத்துடன் கேட்டபோது, 'அதெல்லாம் குடும்பச் சொத்து, எல்லாவற்றுக்கும் அடிப்படை இறையுணர்வு' என்றார் எம்.வி.ஏ., அடக்கத்துடன். 'முருகப்பா குரூப்' நிறுவனங்களில் இந்தப் பாரம்பரியம் தொடரட்டும்.



• எம்.வி. அருணாசலம்

செப்டம்பர் 15-ம் தேதி 419 ஆயுள் கைதிகள் விடுவிக்கப்படவிருக்கிறார்கள். இது முதல்வரின் மனிதாபிமானத்தை உணர்த்தினாலும் 'விவேகம்தானா?' என்று யோசிக்கவும் வைக்கிறது. ஆயுள் தண்டனை பெற்றவர்கள் மிகக் கொடிய குற்றங்களைப் புரிந்தவர்களாகத்தான் இருப்பார்கள். நடத்தை காரணமாக இவர்களுடைய சிறைத் தண்டனைக் காலம் படிப்படியாகக் குறைவதுமுண்டு. வெவ்வேறு தருணங்களில் இவர்கள் விடுவிக்கப்படும் போது, போலீஸுக்கு இவர்கள் மீது ஒரு கண் வைத்திருப்பது எளிது. ஆனால் ஒரு தலைவரின் பிறந்த நாள் என்று காரணம் கூறி, ஏராள குற்றவாளிகளைத் திடீர் விடுதலை செய்யும்போது புதிய பிரச்னைகள் உருவாக வாய்ப்புண்டு. பலர் திருந்திய வாழ்க்கை நடத்தலாம். வேறு பலர் சமூகத்தில் மறுபடி ஒன்ற முடியாமல் தவிக்கலாம். இவர்களால் போலீஸுக்குப் புதிய தலைவலிகள் உருவாவது சாத்தியமே.

குழந்தை வேண்டும் என்ற ஆவலில் 'மெட்ரோடின்' என்ற மருந்தை உட்கொண்ட மேண்டி, எட்டு குழந்தைகளை ஒரே சமயத்தில் கருவுற்றிருக்கிறாள்! இதனால் தாய்-சேய்கள் இரு தரப்புக்குமே ஆபத்து என்பதால் 'சில கருக்களை அழித்து விடலாம்' என்ற மருத்துவ ஆலோசனையை இந்த பிரிட்டிஷ் பெண்மணி ஏற்கவில்லை. எட்டு குழந்தைகளும் ஆரோக்கியமாகப் பிறந்தால் கோடீசுவரியாகி விடுவாள்! அத்தனை பரிசுகள் காத்திருக்கின்றன. ஐந்து மாதங்கள் பாக்கி!



புத்ரி சண்டை!

இந்தோனேஷியாவுக்கும் இந்தியாவுக்கும் நிறைய ஒற்றுமைகள் உண்டு. ராமாயண காவியத்துக்கு இரண்டு நாடுகளிலும் மகத்துவம், கடவுள் வழிபாட்டு முறை; சமூக வாழ்க்கை போன்ற அம்சங்களில் இந்த ஒற்றுமை.

அரசியலில் மிகப் பெரிய வேற்றுமை. இங்கே ஜனநாயகம், மக்களாட்சி. அங்கே தலைகீழ்.

ஐந்நூறு உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றம். ஆளுங்கட்சியின் பெயர் கோல்கர் கட்சி. அதற்கு 282 உறுப்பினர்கள். அதிபருக்கு விசுவாசமான ராணுவத்திலிருந்து ஒரு நூறு பேர் எம்.பி.க்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அப்படியானால் எதிர்க்கட்சி என்பதே இல்லையா?

அங்கேதான் பிரச்னையே ஆரம்பம்.

ஜெனரல் சுகர்ணோவை நினைவிருக்கிறதா? இந்தோனேஷியாவின் தவப் புதல்வராக இன்றும் (இப்போது உயிருடன் இல்லை) மதிக்கப்படுபவர். அந்நாட்டின் முதல் அதிபர்.

அவரைப் பதவியிலிருந்து இறக்கிவிட்டு - வேறெப்படி? ராணுவப் புரட்சியின் மூலம்தான்- ஆட்சியைப் பிடித்தவர் சுகார்தோ. பிடித்ததோடு மட்டுமல்ல; முப்பது வருடங்களுக்கு மேலாக இன்னும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருப்பவரும்

• மெகாவதி சுகர்ணோபுத்ரி

அவரே.

சர்வாதிகாரம் தலைவிரித்தாடும் எந்த நாட்டிலும் எப்போதாவது நிச்சயம் ஒரு மக்கள் இயக்கம் தலை தூக்கவே செய்யும். இந்தோனேஷியாவிலும் தூக்கியது. தூக்க வைத்திருப்பவர் மெகாவதி சுகர்ணோபுத்ரி. ஆம் அந்த சுகர்ணோவின் 'புத்ரி'தான்.

இந்தோனேஷிய ஜனநாயகக் கட்சியின் தலைவியாக அவர் சர்வாதிகாரத்தை வீழ்த்தக் குரல் கொடுத்தார்.

இதென்னடா தலைவலி என்று சுகார்தோ சமயம் பார்த்துக் கொண்டிருந்தார். மெகாவதியின் கட்சியில், தொண்டர்களிடையே ஒரு சிறிய பிளவு. அந்தப் பிளவையும், அரசியல் சட்டத்தில் உள்ள ஒரு பிரிவையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட அரசு + ராணுவம், இந்தோனேஷிய ஜனநாயகக் கட்சியின் மாநாட்டைக் கூட்டி, அதில் மெகாவதியை தலைமைப் பதவியிலிருந்து இறக்கிவிட்டு, தங்களுக்கு சாதகமாக இருக்கக் கூடிய சுர்யாடி என்பவரை தலைவராக்கி விட்டது!

மெகாவதியின் ஆதரவாளர்கள் வெகுண்டெழுந்தனர். தலைநகர் ஜாகர்தா நகரத்தின் வீதிகள் ரணமாயின. பள்ளிக்கூடங்கள், அரசுக் கட்டடங்கள் கொளுத்தப்பட்டன. உயிர்ச்சேதம், பலத்த காயங்கள் தலைப்புச் செய்திகளாயின.

ஒரு கட்சியின் தலைவர்தான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடலாம் என்கிறது இந்தோனேஷிய அரசியல் சட்டம். மெகாவதியின் போட்டியைத் தவிர்க்கவே சுகார்தோ சுர்யாடியை தலைவராக்கும் வியூகத்தை அமைத்தார். அதுவரையில் அவருக்கு வெற்றியே. ஆனால் மக்களின் ஜனநாயக உணர்வுக்கு அந்த வியூகமே எரு போட்டு விட்டது என்கிறார்கள் அரசியல் ஆய்வாளர்கள்!

1998ல் ஜனாதிபதி தேர்தல். அதற்கு முன்பாக அடுத்த ஆண்டுப் பொதுத்தேர்தல். இந்த நிலையில் சில கேள்விகள்.

சுகார்தோவின் மனைவி திருமதி தியன் சமீபத்தில் இறந்து போனார். அந்தச் சோகத்தில் இருக்கிறார் சுகார்தோ. அதைத் துடைத்துவிட்டு தேர்தலில் போட்டியிடுவாரா? வயதும் 75 ஆகி விட்டது.

அங்கே அதிபரைத் தேர்ந்தெடுப்பது ஆயிரம் பேரைக் கொண்ட மக்கள் ஆலோசனைப் பேரவை. அதில் பாதிப் பேர் அரசாங்க நியமனம். தேர்தல் நேர்மையாக நடக்குமா? சுகார்தோ நடக்க விடுவாரா? அதற்கு முன்பாக மெகாவதி மீண்டும் தன் கட்சியின் தலைமைப் பதவியைக் கைப்பற்றுவாரா? முடியுமா?

இன்னொரு யூகமும் உலா வருகிறது. ஒருவேளை சுகார்தோ தேர்தலில் நிற்பதில்லை என்று முடிவெடுத்தால் அவரது புதல்வியைத் தம் அரசியல் வாரிசாக உருவாக்கலாம்.

அப்படியானால் இந்தோனேஷியாவின் எதிர்காலக் கேள்வி இப்படி மாறும்:

சுகர்ணோபுத்ரியா? சுகார்தோ புத்ரியா?

-ராணி மைந்தன்

நரசிம்மராவே சிரித்து விடுவார்!

✉ அழகிரியின் பேட்டி அவரைப் பற்றிய பொய்யான வதந்திகளை எதிரிகள்தான் பரப்புகிறார்கள் என்பதை நிரூபித்தது. முதல்வர் மகன் என்ற பந்தா இல்லாத எளிமையான பேட்டியைத் தந்தமைக்குப் பாராட்டுக்கள்.
தூத்துக்குடி,
எஸ். ராமசுப்பிரமணியன்.

✉ "என்னைப் பற்றி எத்தனை பொய்கள்?" என்று தம் பேட்டியில் மு.க.அழகிரி அங்கலாய்த்திருக்கிறார். அதே நேரம் பத்திரிகைகள் அவரைப் பற்றி எழுதுவதிலும் உண்மை இல்லாமல் இல்லை. மதுரையில் எங்கு நோக்கினும் 'அஞ்சா நெஞ்சன்' என்ற அடைமொழியோடு ஆளுயர போஸ்டர்கள், அதுவும் மற்றவர்களின் அனுமதி பெற்ற விளம்பர போர்டுகளில். இது அத்துமீறல்களுக்கு ஒரு சான்று. இன்னும் இதுபோல் எவ்வளவோ...! இவை சின்னச் சின்ன அத்து மீறல்கள் என்றாலும் பொதுமக்களுக்கு எரிச்சல்தானே!
மதுரை, வி. சிவா.

✉ 'கிழிந்த பக்கங்கள்... தொலைந்த நியாயங்கள்' தலையங்கம், தற்போதைய அரசிலும் குண்டுவெடிப்புகள் தொடர்வதைச் சுட்டிக்காட்டிய விதமும், முன்னாள் தலைமைச் செயலர் தாக்கப்பட்டதைக் கண்டித்த விதமும் - இவையிரண்டு விஷயங்கள் குறித்து முதல்வர் வருத்தம் தெரிவித்திருந்ததையும் சுட்டிக்காட்டி, பின்னணியைக் கண்டுபிடிக்க வேண்டியதை வலியுறுத்திய விதமும் நாசுக்கானது. அதேபோல் நிலக்கரி ஊழல் தொடர்பான அவலத்தையும் சுட்டிக்காட்டி, இதற்கு பொறுப்பாளவர்கள் யாராக இருந்தாலும், உடனடியாக தண்டிக்கப்பட வேண்டும் என்று குரல் கொடுத்திருப்பது குறித்து மகிழ்ச்சி. உமது குரலுடன் எமது குரலும் சேர்ந்தே ஒலிக்கட்டும்!
விராலிமலை, ச. நாகராஜன்.

✉ சிறுகதைகளை நிறையப் போட்டு எங்களை மிரட்டியிருப்பதைப் பார்த்தால்... ஒருவேளை கல்கி தனியாக ஒரு ஸ்பெஷல் சிறை கட்ட அனுமதி கேட்டு அலைந்து கொண்டு இருக்கிறதோ என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது. எப்படியோ, கடைசியாக முன்னாள் அமைச்சர்கள் என்று நினைத்துக் கொண்டு உமது சிறையில் வாசகர்களை தள்ளிக் கொண்டுபோய் அடைத்து விடாமலிருந்தால் சரிதான்!
திருக்கோவிலூர்,
பழங்கூர் மீரா முருகன்.

✉ சுக்ராமின் டெலிபோன் ஊழல் பற்றிய கார்டூனை நரசிம்மராவ் படித்தால் கூட தன்னை மறந்து சிரித்துத் தொலைத்து விடுவார்.
சிதம்பரம், ஸ்ரீவித்யா காளிதாஸ்.

✉ சென்னை - அண்ணாநகர் வனத்துறை நாற்றங்காலைப் பார்வையிட்ட அமைச்சர் "மஸ்டர்ரோல் எங்கே?" என்று அதிகாரியை கேட்டபோது "அப்படி எல்லாம் நாங்கள் வைத்துக் கொள்வதில்லை" என பதில் அளித்தது வருந்தத்தக்க விஷயம். வனத்துறையின் "மஸ்டர்ரோல்" 20 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சென்னை மாநகராட்சி மஸ்டர் ரோல் ஊழல் வழக்கு போல் தொடராமல் இருந்தால் சரி!
சென்னை - 99,
எம். ஜெய்காந்த்.

✉ ஒரு ரசிகரின் கடிதத்திற்கு மதிப்புக் கொடுத்து அதிகப்படி பொறுப்புணர்ச்சியுடன் பாடி வரும் பாம்பே ஜெயஸ்ரீ பாராட்டுதலுக்குரியவர். ரசிகரின் பெயரைக் கூட வெளியிடாமல் கருத்தை மட்டுமே நமக்குத் தந்திருக்கிறார் பாருங்கள், இந்தப் பண்பு போற்றுதலுக்குரியது.
கமுதி, ஜே.வி.ஆர்.

✉ லலிதா - நந்தினி வயலின் வாசித்து முடித்ததும் கிளப்ப வேண்டிய கப்பலை காப்டன் கிளப்பாமல் தன்னிலை மறந்திருந்தார் என்றால், நம் கர்னாடக இசைக்கு எவ்வளவு ஈர்ப்பு சக்தி இருக்கிறது என்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிகிறது, அதுவும் நார்வே நாட்டில்!
விழுப்புரம்,
வை. வெங்கடேசன்.

✉ 'குமுறல்' பகுதியில் கலை அரசு கடிதம் (25.8.96). சில கிழிந்த நோட்டுக்களை, ஓர் ஐம்பது ரூபாய்க் கட்டில் சேர்த்து வாடிக்கையாளருக்குத் தந்தது தவறுதான். ஆனால் 'கிழிந்த நோட்டுக்களுக்கு ஒட்டு வேலை' செய்வது, ரிசர்வ் வங்கிக்குச் செலுத்தத்தானே தவிர, வாடிக்கையாளர் தலையில் கட்ட அல்ல. வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்படும் கிழிந்த நோட்டுகளை இதுபோன்று 'ஒட்டு வேலை' செய்து வேறு சில முத்திரை, கையெழுத்து எல்லாம் போட்ட பிறகுதான், ரிசர்வ் வங்கியில் பெற்றுக் கொண்டு மாற்று நோட்டுக்கள் தருவார்கள்.
கோவை - 38, ஈ. லக்ஷ்மணன்.

வாரம் ஒரு போட்டி 7; பரிசு ரூ.5000!

ரஜினியின் எந்தெந்தப் படங்களிலிருந்து எடுக்கப்பட்ட ஸ்டில்கள் இவை? சரியான விடையைப் பலர் கண்டுபிடித்தால் குலுக்கலில் ஒருவருக்கு ரூ.5000/- பரிசு!

கடைசி தேதி: 23.9.96.

ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

ஜாலி போட்டி - 7

1 ....

2. ....

3. ....

4. ....


5. ....

6. ....

1



4



3



2




5



6



ஆஹா... ஹாஹா ஹாஹா...










— இந்தியன் ஃபீச்சர்ஸ் சிண்டிகேட்

சுஜாதா பக்கம்



சில வாரங்களுக்கு முன் நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் கீதோபதேசம் பற்றிய நேரடியான குறிப்பு ஏதும் இல்லை என்று இந்தப் பக்கத்தில் எழுதியிருந்ததற்குப் பலர் பதிலெழுதியிருந்தார்கள். அறந்தை மணியன் எங்கெல்லாம் வருகிறது என்று டெலிபோனில் சொன்னார்... ஃப்ரீமாண்ட் கலிபோர்னியாவிலிருந்து அன்பர் டி. பிச்சுமணி 'வார்த்தையறிபவர் மாயவர்க்கு ஆளன்றி யாவரோ' என்பது கீதையின் பதினெட்டாவது அத்யாயத்தின் முக்கியமான 66வது சுலோகமான சரம சுலோகத்தின் பிரதிபலிப்பு என்று விளக்கி எழுதியிருந்தார். "சர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம்வ்ரஜ அஹம் த்வா சர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா சுச - எல்லா தர்மங்களையும் துறந்துவிட்டு என்னிடம் சரணடை; நான் உன்னைப் பாவங்கள் அனைத்திலிருந்தும் விடுவிக்கிறேன் கவலைப் படாதே" என்பதே அந்த சுலோகம். பெங்களூர் ப்ரொபஸர் வி. பி. ஜகன்னாதன் திருமங்கை மன்னன் திருவெழு கூற்றிருக்கையில் "ஐம்புலன் அகத்தினுள் செறுத்து நான்குடனடக்கி முக்குணத்து இரண்டவை அகற்றி ஒன்றினில் ஒன்றி நின்று" என்கிற வரிகளில் ஒவ்வொரு எண்ணுக்கும் கீதைக் கருத்துக்கள் உள்ளன என்று எழுதியிருந்தார்.

இவ்வகைக் கடிதங்களால் எனக்கு இரண்டு மகிழ்ச்சி; கல்கி கலிபோர்னியாவுக்கும் போகிறது என்பதும், வாசகர்களை சிந்திக்க வைக்கிறது என்பதும். ஆனாலும், என் சந்தேகம் இன்னும் தீரவில்லை. கீதோபதேசம் செய்ததாக நேரடியான குறிப்பு பிரபந்தத்தில் இல்லை. கீதைக் கருத்துக்கள் பல இடங்களில் விரவிக் கிடப்பதை மறுக்கவே முடியாது. கண்ணனின் வாழ்க்கையின் அத்தனை சம்பவங்களையும் ஆழ்வார்கள் குறிப்பிடுகின்றார்கள். 'பேய்முலையுண்டான்', 'மாயச்சகடம் உதைத்தான்', 'அந்தமில் வரையால் மழை தடுத்தான்', 'வன்துணை பஞ்சபாண்டவர்க்காக வாயுரை தூதுசென்றான்' என்றெல்லாம் குறிப்பிட்டவர்கள் 'அருச்சுனனுக்கு கீதோபதேசம் செய்தான்' என்று நேரடியாக எங்கும் குறிப்பிடவில்லையே, ஏன் என்பதே என் சந்தேகம். ஆசார்ய ஹ்ருதயத்தில் கீதையும் திருவாய்மொழியும் ஒப்பிடப்பட்டு ஒற்றுமை வேற்றுமைகள் இரண்டு சூத்திரங்களில் சொல்லி இருப்பதை என் தம்பி ராஜகோபாலன் சொன்னார்.

ஆடி பதினெட்டின் போது திருச்சியில் காவிரியில் நீர் கரை புரண்டு ஓடுவது கண்டு உற்சாகமாக இருந்தது. உத்தமர் கோயில் (ஒரே ஒரு பிரம்மா கோயில்), திருவெள்ளறை இரண்டு ஸ்தலங்களுக்கும் சென்றிருந்தேன். திருவெள்ளறை திருவரங்கத்திலிருந்து பதினைந்து கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள உயரமான விஸ்தாரமான கோயில். பெரியாழ்வார் பதினோரு பாடல்களும், (மஞ்சுலவும் மணிமாட மதில் திருவெள்ளறை) திருமங்கையாழ்வார் பதின்மூன்று பாடல்களும் (திசையெல்லாம் கமழும் பொழில் சூழ்திருவெள்ளறை) இத்தலத்தைப் பாடியிருக்கிறார்கள்.

கோயிலின் அமைப்பு விஸ்தாரமும் ஸ்வஸ்திக வடிவக் குளமும் சிறப்பானது. முற்றுப் பெறாத கோபுரம் கவனிக்கத்தக்கது. அஸ்திவாரம் கல்லிலும் மேற்பகுதி காரையாற் பூசப்பட்ட நீள் சதுர மெலிய செங்கல்களும் வட்டவடிவில் உள்ளே காலியிட்டும் - அந்தக் காலத்தில் கோபுரங்களை எப்படிக் கட்டினார்கள் என்று ஸ்தபதிகளுக்குப் பாடமாக இருக்கும். இதை பலமுறை கட்டி முடிக்க முயற்சித்து பல்வேறு காரணங்களுக்காகக் கைவிட்டதாகப் பேச்சு.

முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு 'புதுக் குரல்கள்' இரண்டாவது பதிப்பு வந்திருக்கிறது. தமிழில் முதல் புதுக்கவிதைத் தொகுப்பு. பதிப்பாசிரியரின் முன்னுரையில் செல்லப்பா புறநானூறு போல் ஒரு 'புது நானூறு' தொகுக்க வேண்டும் என்று சொன்னாராம். நல்ல யோசனை. யாராவது மேற்கொண்டால் நல்ல கவிதைகளைத் தேர்ந்தெடுக்க உதவ விருப்பம். ஆனால் நானூறு கவிதைகள் தேறுமா என்பது சந்தேகமே. அவைகளில் சமயவேல் அவர்களின் 'சந்தி' இடம்பெறுமா என்பதை தீர்மானிக்க கவிதையின் சில வரிகள் இதோ :-

"நான் உன் கணவரோடு
நீ என் மனைவியோடு

நம்மை எதிரெதிர் ஆசனங்களில் அமர்த்தி
வேடிக்கை பார்க்கும் மிச்சரும் காப்பியும்

நீங்கள் எங்கு படித்தீர்கள்
பஸ் ஸ்டாண்டு பக்கமா உங்கள் வீடு
77ல் சென்னையிலா இருந்தீர்கள்
குலைத் வெயில் எப்படி
டிரைவிங் கஷ்டமா அங்கே
அடடே கல்யாணத்துக்கு வந்திருக்கலாமே.
மழையா வரும்போது
மோகன் உங்கள் ப்ரெண்டா அப்படியா?

எல்லாம் பேசிக் கொண்டோம்
ஆனால் ஒரே ஒரு விஷயம் மட்டும்
தொடப்படாமல்

புதைத்து எழுந்து புதைத்து
நழுவிக் கொண்டிருக்கிறது..."

(மீண்டும் அடுத்த வாரம்)

வித்தகர் : வானதி திருநாவுக்கரசு

"அவர் ஒரு கமிட்டட் பப்ளிஷர். ஈடு பாட்டோடு புத்தகங்களை வெளியிடுகிறார். நானெல்லாம்... பிஸினஸ்மேன்!"

ஒரு பதிப்பாளரே இன்னொரு பதிப் பாளரைப் பற்றி இப்படிப் பாராட்டி இருக் கிறார் என்றால் வியப்பாக இருக்கும். பாராட்டி யவர், 'பழனியப்பா பிரதர்ஸ்' நிறுவனத்தின் ஏ.எஸ். பழனியப்பச் செட்டியார். பாராட்டப் பட்டவர் - வானதி திருநாவுக்கரசு.

புத்தகம் வெளியிடும் துறையில் நுழைந்து, இதுவரை நாலாயிரத்து ஐந்நூறு நூல்கள் வெளியிட்டு சாதனை புரிந் திருப்பவர், திருநாவுக்கரசு. 'தமிழ்ப் பண்ணை' நடத்தி வந்த சின்ன அண்ணாமலையிடம் குருகுலவாசம் மாதிரி பயின்று, ஒரு துப்பறியும் நாவல் வெளியிட்டதன் மூலம் பதிப்புத் துறைக்கு வந்தவர். ஜனரஞ்சக, பொழுதுபோக்கு இலக்கியம் மட்டுமில்லாமல் ஆன்மீகம், விஞ் ஞானம், கலை, சுயமுன்னேற்றம் என்று தாம் வெளியிடாத நூலே இல்லை என்கிற அளவுக்கு இன்று தம் திறமையால் உயர்ந்திருப்பவர்.

"அந்தக் காலத்தில் தமிழ்ப்பண்ணைக்கு மாலை வேளைகளில் ராஜாஜி, கல்கி, நாமக்கல் கவிஞர், ம.பொ.சி. எல்லாரும் வருவார்கள். தினம் தினம் இலக்கியக் கூட்டம்தான்! அங்கே பில் போடுகிற குமாஸ்தாவாக இருந்த எனக்கு, இவர்களோடெல்லாம் பேச முடியுமா? தொட் டுப் பார்க்க முடியுமா? என்றெல்லாம் ஏக்கமாக

எல்லாம் முடியும் என்கிற பாசிடிவ் அப்ரோச் வேண்டும்!

இருக்கும். ஆனால் அத்தனை மேதை களின் நூல்களையும் நானே வெளியிடக் கூடிய அதிர்ஷ்டம் எனக்கே கிடைத்ததை எப்படி வர்ணிப்பேன்!" என்று உணர்ச்சிவசப் பட்டுப் பேசுகிறார் வானதி திருநாவுக்கரசு.

முன்னாள் முதல்வர் பக்தவத்சலம் கேட் டுக் கொண்டபடி, தேசத் தலைவர்கள் பற்றிய ஐம்பத்திரண்டு சிறு நூல்களை வெளியிட்ட தைத் தம் சாதனையாகச் சொல்லும் வானதி, தெய்வத்தின் குரல், அர்த்தமுள்ள இந்து மதம் போன்ற தமிழர் நெஞ்சில் நீங்கா இடம் பெற்ற நூல்களை வெளியிட்டவர் என்கிற சிறப்புக் கும் உரியவர்.


"புத்தகம் வெளியிடுவது புனிதமான பணி. என்றாலும், பொறுமையை நிறைய சோதிக்கும்! 1975 வரை இந்தத் தொழிலில் எனக்கு சிரமங் கள்தான் அதிகம் வந்தன, லாபத்தை விட!" என்று கூறும் திருநாவுக்கரசுக்கு காகித விலை, மை விலை தவிர வேறு விஷயம் தெரியாது!


குடும்ப விஷயங்கள்?

"அதெல்லாம் அவங்களே பாத்துக்கு வாங்க!" என்று தம் குடும்பத்தாரைப் பற்றிப் புன்னகையுடன் குறிப்பிடுகிறார்.

இவரின் இத்தனை பெரிய வளர்ச்சிக்கு அடிப்படை என்ன? "எண்ணங்களுக்கு மிகுந்த வலிமை உண்டு என்று நம்புகிறவன் நான். அதனால் முடியாது என்கிற சிந்தனையே கிடையாது. எல்லாம் முடியும் என்கிற பாசி டிவ் அப்ரோச்தான் எனது வளர்ச்சிக்கு அடிப்படை!" என்கிறார்.

— சுப்ர. பாலன்





'ஆமாம்' என்று சொல்லிவிட்டு உடனே பிரதீப் நாக்கைக் கடித்துக் கொண்டதை சப்–இன்ஸ்பெக்டர் மதிவாணன் கவனித்து...
கடலோரக் கொலைகள்
கதை:
பெனிட்டோ குமார்
படம் :
சசி
7
என்ன சத்தம்? இரவு எத்தனை மணிக்கு? எத்தனைபேர்?
ராத்திரி ஒண்ணே முக்கால் இருக்கும். ரெண்டு பேர் பேச்சுக்குரல். தூக்கம் கண்ணைச் சுழற்றிய சமயம். யாருன்னு பார்க்கலை.
மதிவாணனை வழி அனுப்பி வைத்துவிட்டுத் திரும்பி வந்த நாகராஜன்...
ராத்திரி ஒரு சத்தமும் கேட்கலையே... எதுக்குப் பொய் சொன்னே?
நம்மை காப்பாத்திக்கத்தான்!
யோசி! பல வருஷங்களா இந்த ஊர் அமைதிப் பூங்கா. நாம வரோம், கொலை விழுது! அதுவும் நம்ம வீட்டிலே வேலைக்கு அமர்த்திய ஆள். ஊராருக்கு நம்ம பேர்லதானே சந்தேகம் வரும். அதனால இது கவனம் திருப்பும் முயற்சி.
மறுநாள்...
இன்னிக்கு போட்டிக்குப் போக வேண்டாம். பிரதீப்! பயமா இருக்கு!
பயந்தால் ஒரு காரியமும் நடக்காது. நாம இன்னும் நாலைந்து நாள்ல கிராமத்தைக் காலி பண்ணியாகணும்.



மாலையில்.... மதி, தாம் நடத்திய விசாரணை பற்றி இன்ஸ்பெக்டர் கோபியிடம் கூற...
பரமகுரு உயிர் பிரிந்தது மூணு மணிக்கு... போஸ்ட் மார்ட்டம் கூறுது. ஒண்ணே முக்காலுக்கு ஆளரவம்னா பொருந்துது...
ஆனா அவங்க யாருன்னு தெரியலையே... அது சரி, இன்னிக்கிக் கூட பேட்டி எடுத்தாங்களாமே...?
விசாரிச்சேன், அதிலேயெல்லாம் தப்பா ஒண்ணும் தோணலை.
தொண்டிகுப்பத்துல இன்னும் சாராயம் வடிக்கிறாங்களா? அதுக்கும் இந்த குடிகாரன் பரமகுருவோட கொலைக்கும் ஏதாவது சம்பந்தம்...?
செக் பண்றேன், சார்!
அன்றிரவு, பண்ணை வீட்டின் சொந்தக்காரர் கிருஷ்ணமூர்த்தி வந்து...
நந்து! நீ இங்கதான் இருக்கியா? பின்கட்டிலே ஒரு மண்வெட்டி வைச்சிருந்தேன். அவசரமா தேவைப்படுது.. எடுத்துப் போறேன்.
ஓ!
கொல்லைப்புறம்...
அது சரி, இங்கதானே மண்வெட்டி வைச்சிருந்தேன். எங்க காணும்?
இவர் பிரதீப்; இவர் நாகராஜ்
இருவரும் விழிக்க, நந்துவுக்குக் குழப்பம்.

(தொடரும்)

பாலம்



●● சைவ உணவின் மகத்துவம் பற்றி சென்னை, மகாவீர் சங்கத்தின் இலவச வெளியீடு இருக்குமானால் அனுப்பித் தரவும். அஞ்சல் செலவை ஏற்கிறேன்.

-எஸ். வேலுச்சாமி,
48, நேதாஜி ரோடு,
பொள்ளாச்சி - 642 001.

●● சாக்ஸ்ஃபோன் கற்றுக் கொள்ள ரொம்ப ஆசை. யார் கற்றுத் தருவார்கள்? விவரம் தந்து உதவும்படி வேண்டுகிறேன்.

-என். ராதாகிருஷ்ணன்,
13/3. சீனிவாச ரெட்டி தெரு,
தி.நகர், சென்னை - 17.

●● சித்தர் பாடல்கள், மருத்துவம், ஆன்மீகம் பற்றிய பழைய ஓலைச்சுவடிகள் தேவை. தக்க விலை கொடுத்து வாங்கிக் கொள்கிறேன்.

-டாக்டர் முரளி,
T-55/A, எலியட்ஸ் பீச் ரோடு,
பெசன்ட் நகர்,
சென்னை-90.

●● எங்கள் ஊர் தேர் புதுப்பிக்கப்பட வேண்டும். இதற்கு ஆகம விதிகள் மற்றும் மரச் சிற்ப வேலைப்பாடுகள் தெரிந்த விஸ்வ கர்மாக்களை எங்கு, எப்படி தொடர்பு கொள்ளலாம்?

- ஜி.எஸ். நடராஜன்,
14, கிருஷ்ணன் வீதி,
கோபி செட்டிப்பாளையம் 638 452

●● "பீதாம்பரம் அய்யர் ஜாலத் திரட்டு" என்ற புத்தகம் தேவை. நாற்பது ஆண்டுகளுக்கும் முற்பட்டது. விலை கொடுத்துப் பெறத் தயார்.

-எஸ். மேனகா,
26A/1. மோதிலால் தெரு,
கும்பகோணம் 612 001.

●● பத்தாம் வகுப்பு வரை படித்த பெண்கள், டெய்லரிங் கற்றுக்கொள்ள ஆசை இருந்தால் அனுகவும். ஏழைப் பெண்களுக்கு பண உதவியும் செய்து தொழிலும் கற்றுத் தரு

இறோம்.

-எம். ரகுபதி,
நிர்வாக அறங்காவலர்,"மென்டார்ஸ்"
16, 3-வது குறுக்குத் தெரு,
டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர்,
சென்னை - 41.

●● பழமலய் கவிதைகள் குறித்து எம்.ஃபில் ஆய்வு நடத்துகிறேன். அவரது கவிதைத் தொகுதிகள் வைத்திருப்போர் தொடர்பு கொள்ளவும். உரிய விலையும் அஞ்சல் செலவும் தரப்படும். கவிஞர் பற்றிய இதர செய்திகள், படங்களும் தேவை தான்.

-மு.கா. நெடுமாறன்,
657, சேலம் மெயின் ரோடு,
காவேரிப்பட்டணம் 635 112.
தருமபுரி (மாவ)

●● வீணை பயில ஆசை. புது வீணை வாங்கும் அளவுக்கு வசதி இல்லை. பழைய வீணை யாரும் தர விரும்பினால் தக்க விலை கொடுத்து பெற்றுக்கொள்வேன்.

-மோ. புவனேஸ்வரி,
D/o. சி.மோகன்,
37, குமர கட்டளை தெரு,
கூறை நாடு,
மயிலாடுதுறை 609 002.

●● திருக்குறள் தெலுங்கு மொழி பெயர்ப்பு நூல் கிடைக்கவில்லை. தகவல் பெற விரும்புகிறேன்.

-மு.ரா. பார்த்தசாரதி,
18, காளமேகம் தெரு,
கிழக்கு தாம்பரம்,
சென்னை 600 059

●● சைதாப்பேட்டையில் 5.8.96 திங்களன்று மடிப்பாக்கம் செல்லும் 51E பஸ்ஸில் ஏறும்போது, மாலை 7.10 மணிக்கு, எனது புத்தம்புது பவர்கிளாஸ் தவறி விழுந்து விட்டது. சாக்லேட் கலர். Carbon frame Photochromatic glass. யாராவது கண்டெடுத்திருந்தால் தெரிவிக்க வேண்டுகிறேன்.

- ஜி. சுந்தர்,
237/1, 4-வது தெரு,
கார்த்திகேயபுரம்,
மடிப்பாக்கம், சென்னை 91.

(பாலம் பகுதியில் இடம் பெறும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்கு கல்கி நிறுவனம் பொறுப்பு ஏற்க இயலாது - ஆ-ர்)

ஆளந்தனை அவர் 'வான் பட்டறை'யில் பார்த்துப் பேசி விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தேன்.

பஸ் நிலையம் வந்து ஊருக்குப் பஸ் ஏற வேண்டும்.

பஸ் நிலையம் அருகில் வந்தபோது, அந்தக் கார் என் அருகில் வந்து நின்றது. டிரைவர் தவிர பின்னால் ஒருவர் மட்டுமே உட்கார்ந்திருந்தார். பார்ப்பதற்குக் கம்பீரமாக 'டை' தலைமுடியோடு இருந்தார்.

"ஏய், சிவக, என்னடா அப்படிப் பார்க்கிறே? என்னை அடையாளம் தெரியலையா?"

காரில் பின்னால் உட்கார்ந்திருந்தவர் தான் அப்படிக் கேட்டார். சட்டென்று அவரை எனக்குத் தெரியவில்லை.

"என்னடா முழிக்கிறே? இங்கே திருவாரூர், பள்ளிக்கூடத்தில் ஒண்ணா படிச்சோமே... மறந்திட்டியா? நான்தான்டா சாமிநாதன்!"

ஆ!... எனக்கு உடனே புரிந்தது.

திருவாரூர் பள்ளிக்கூடத்தில் என்னோடு படித்த சாமிநாதன். ஆண்டார் தெருவைச் சேர்ந்தவன். வாலிபால் பிளேயர். எனக்கு ஞாபகம் வந்தது.

"அடாடா... அடையாளமே தெரியலே சாமிநாதா! கோவிச்சுக்காதே. பார்த்துப் பதினஞ்சு, இருபது வருஷம் ஆச்சே! நீயும் மாறிப் போயிருக்கே!"

"ஆமாம்டா, மாறித்தான் போயிட்டேன். பழைய சாமிநாதன் இல்லை."

ஆமாம், அவன் சொன்னது, உண்மைதான்! பனியன் போடாத டெட்ரஸ் சட்டைக்கு உள்ளே, மொத்தமான மைனர் செயின் மின்னியது. இரண்டு கைகளிலும் விலை உயர்ந்த வைர மோதிரங்கள். ஆள் வளமாகத் தொந்தி, சதை இல்லாமல் அளவாக இருந்தான். ஸ்போர்ட்ஸ் உடம்பு.

சாமிநாதன் தொடர்ந்து பேசினான்.

"இப்போ நல்லா இருக்கேன்டா சிவக. கிண்டியிலே ஒரு தொழிற்சாலை வச்சிருக்கேன். மூணு ஒயின் ஷாப் இருக்கு. ஆறு லாரி ஓடுது. சௌகரியமா இருக்கேன்."

அவன் சொல்லச் சொல்ல எனக்கு



போட்டிக்கதை — 3

அ. சி. மணியன்

மகிழ்ச்சியாக இருந்தது. படிக்கும் காலத்தில் அவன்பட்ட கஷ்டங்கள், அவன் குடும்பக் கஷ்டம் எனக்கு நன்றாகத் தெரியும்.

"சரி, சரி, கார்ல ஏறு. எதிரே பிரசிடெண்ட் லாட்ஜ் ரூம்லேதான் தங்கியிருக்கேன். அங்கே போய் நிறைய பேசுவோம்."

நான் காரில் ஏறினேன். கார் பிரசிடெண்ட் லாட்ஜ் போனது.

அறைக்குள் போனதும், சாமிநாதன் கேட்டான்.

"என்னடா துணி இது? உன்னிடம் பழைய தெளிவில்லை. கணக்கமா இருக்கே. பார்க்க மனசுக்குக் கஷ்டமா இருக்குடா. ஏன், என்ன ஆச்சு? உனக்குத்தான் மூணு வேலி நிலம் இருந்துச்சே, அதெல்லாம் என்ன ஆச்சு? படிக்கிற காலத்திலே என்ன 'டிரிம்'மா இருப்பே! இப்பவும் எங்கண்ணுலயே நிக்கிதுடா."

சாமிநாதன் வருத்தமாகச் சொன்னான். வருத்தத்தைக் காட்டிக் கொள்ளாமல் நான் சிரித்தேன்.

அவன் சொல்வது போலத்தான், திருவாரூருக்கு வந்திருந்தேன். பத்தாண்டுகளுக்கு முன்னால் தைத்த காலர் கிழிந்த சட்டை, நாலு முழு வேஷ்டி, படிக்கும் போது கடிகாரம் கட்டியிருந்த, தற்போதைய வெறுங்கை. நான்கைந்து நாட்களாக 'ஷேவிங்' செய்யாத முகம்.

சாமிநாதன் கேட்பதற்கு இது போதாதா?

ஆனால், அவன் பளபளப்பு எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. படிக்கும் போது நடந்த நிகழ்ச்சி. எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. அன்று மாலை...

நான், சாமிநாதன், அம்மையப்பன் சத்தியமூர்த்தி, தற்போது போலீஸ் இன்ஸ்பெக்டராக இருக்கும் அடியக்கமங்கலம் திருஞானம் எல்லோரும் பள்ளி வாலிபால் டீமில் இருந்தோம்.

மாலை நாலரை மணிக்கு விளையாடும் இடத்திற்கு வந்து விடுவோம்.

அன்றும் விளையாடிக் கொண்டிருந்தோம். என்ன நடந்ததோ தெரியவில்லை. என் பக்கம் விளையாடிக் கொண்டிருந்த சத்தியமூர்த்தியை, எதிர்ப்பக்கம் விளையாடிக் கொண்டிருந்த சாமிநாதன் பாய்ந்து வந்து திடீரென்று தாக்கினான்.

அவனை விட சத்தியமூர்த்தி ஆள் உயரம், தாட்டி. ஆனால் மூர்க்கமாகத் தாக்கிய சாமிநாதனை அவன் தாக்குப்பிடிக்க முடியவில்லை. நல்ல அடி. பின்புறம் விளையாடிக் கொண்டிருந்த நான் ஓடிப் போய் அவர்களைத் தடுத்தேன்.

என்ன நினைத்தானோ, சத்தியமூர்த்தியை விட்டு விட்டு என்னைத் தாக்க ஆரம்பித்தான், சாமிநாதன். நான் விடவில்லை. சாமிநாதன் என்னைச் சமாளிக்க முடியவில்லை. அவன் போட்டிருந்த சட்டை நார்நாராகக் கிழிந்தது.

திடீரென்று சாமிநாதன் சண்டையை நிறுத்தினான். "எலேய், சிவகு, இருடா. உன் ஊர்க்காரனுக்கு சப்போர்ட்டா என்னையா அடிக்கிறே? என் சட்டையையா கிழிச்சே? நான் 'ஆண்டா தெருக்காரன்'டா. இதோ போயிட்டு நான் உடனே வர்றேன்."

சொல்லிக்கொண்டே ஓடினான்.

நான் பதிலுக்குச் சத்தம் போட்டேன்.

"எலேய், நீ ஆண்டா தெருக்காரனா இருக்கலாம். நான் கள்ளத் தெரு மாப்பிள்ளை. எங்க மாமாதாண்டா அங்க தலைவர். வா, பார்க்கலாம்."

கேட்டுக் கொண்டே சாமிநாதன் போய் விட்டான்.

நானும், சத்தியமூர்த்தியும், இன்னும் சில பேரும் வெகுநேரம் காத்திருந்தோம். பொழுது இருட்டிக் கொண்டு வந்தது. அரைமணி நேரம் சைக்கிள் மிதித்தால்தான் எங்கள் ஊர் போய்ச் சேர முடியும்.



''நானும் என் காதலியும் ஒரு பந்தயம் கட்டியிருக்கோம்.''

''என்ன பந்தயம்?''

''எங்க ரெண்டு பேரில யாருக்கு முதல்லே கல்யாணம் நடக்கும்னு!''

— எஸ். இராஜேந்திரன்

இனிக் காத்திருப்பதில் பயன் இல்லை. சாமிநாதன் வரமாட்டான் என்ற முடிவுக்கு வந்து நாங்கள் ஊருக்குக் கிளம்பினோம்.

அன்றிரவு எனக்குத் தூக்கமே வரவில்லை. மூன்று ஆண்டுகளாக சாமிநாதன் எனக்கு நெருங்கிய நண்பன். தன் குடும்ப சேதிகளைக் கூட என்னிடம் மட்டும் சொல்வான். வேறு வழியில்லாமல் ஊர்க்காரனான சத்தியமூர்த்திக்காக அவனை அடிக்க வேண்டியதாயிற்று. எனக்கு மிகவும் வருத்தமாக இருந்தது.

அவர்களுக்குள் ஏன் சண்டை வந்தது என்று எனக்குப் புரியவில்லை. திடீரென்று நடந்த சண்டை. காரணம் தெரியவில்லை. சத்தியமூர்த்தியும் சொல்லாமல் வீட்டுக்குப் போய் விட்டான்.

சாமிநாதனை அடித்தது கூடப் பரவாயில்லை. அவன் சட்டை கிழிந்ததுதான் எனக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. அந்த ஒரே சட்டைதான் அவனுக்கு. அதையே இரண்டு, மூன்று நாட்களுக்கு ஒருதரம் துவைத்துப் போட்டுக் கொண்டு வருவான். அது கிழிந்து போய் விட்டதே! அதுவும் என்னால்!

நான் அவசரப்பட்டிருக்கக் கூடாதோ! மனசுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது.

புதிதாகத் தைத்து, இரண்டு மூன்று முறை மட்டும் போட்ட சட்டை என் பெட்டியில் இருந்தது. அதைப் பேப்பர் சுற்றிக் கட்டி என் புத்தகப் பையில் வைத்துக் கொண்டேன்.

மறுநாள் நாங்கள் பள்ளிக்கூடம் வந்தோம், சாமிநாதன் வரவில்லை. அவன் தெருப் பையன் ஒருவனை விசாரித்தேன். அவன் சரியான பதில் சொல்லவில்லை.

எனக்குக் குழப்பமாக இருந்தது. ஒரு சமயம் ஆட்களை அழைத்துக் கொண்டு என்னிடம் சண்டைக்கு வருவானோ? அவன் தெரு துணிச்சலில் பெயர் பெற்றது.

பழகியவன்தானே! நேற்று தவறுதலாக ஏதோ நடந்து விட்டது. சத்தியமூர்த்தியை அடித்ததால்தானே, நான் சாமிநாதனை அடிக்க வேண்டியதாயிற்று. எவனையாவது பிடித்துத் தூது அனுப்பலாமா? பலவாறாகச் சிந்தித்தேன். ஒன்றும் நடக்கவில்லை.

மாலை பள்ளி மணி அடித்ததும் வழக்கம் போல், 'வாலிபால்' கிரவுண்டுக்கு வந்தோம்.

சாமிநாதன் இல்லாதது வேதனையாக இருந்தது. அரை மனதோடு நான் விளையாடிக் கொண்டிருந்தேன்.

இரண்டு ஆட்டம் ஆடி விட்டோம். அந்த நேரத்தில் சாமிநாதன் வந்தான். சட்டை போடாமல் ஒரு துண்டைப் போர்த்திக் கொண்டிருந்தான்.

அப்படியே ஆட்டத்தை நிறுத்திவிட்டு, "வாடா சாமிநாதா" என்று அழைத்தபடி 'அவன்' பக்கத்தில் போனேன்.

"ஏண்டா, பள்ளிக்கூடத்துக்கு வரலே?" - மெதுவாகக் கேட்டேன்.

''அங்கே தூங்குமூஞ்சி மரத்தடிக்குப் போய்ப் பேசுவோம். இங்கே வேணாம்டா'' என்று சாமிநாதன் சொல்லிக் கொண்டே முன்னால் போக நான் பின்னால் சென்றேன்.

மற்றவர்கள் விளையாட்டைத் தொடர்ந்தார்கள்.

நானும் சாமிநாதனும் தூங்குமூஞ்சி மரத்தடியில் உட்கார்ந்தோம். நான் மறுபடியும் கேட்டேன்.

"ஏண்டா சாமிநாதா, இன்னைக்குப் பள்ளிக்கூடத்துக்கு வரலே?"

"என்னடா சிவசு, நீயே இப்படிக் கேட்கிறே? என் நிலைமை உனக்குத் தெரியுமேடா! இப்ப எப்படி வந்திருக்கேன், பார்த்தியா? டவுனுக்குள்ளே போகாம குறுக்கே சூரிய குளத்தங்கரை வழியா வர்றேன், இந்த துண்டைப் போர்த்திக்கிட்டு...."

"மன்னிச்சிக்கடா சாமிநாதா. நான்தாண்டா முட்டாள்தனமா உன் சட்டையைக் கிழிச்சிட்டேன். உன்கிட்டே இந்த ஒரே சட்டைதான் இருக்குன்னு தெரியும். அப்படியிருந்தும் அவசரப்பட்டுட்டேன். பெரிய தப்புப் பண்ணிட்டேன். என்னை மன்னிச்சேன்னு ஒரு வார்த்தை சொல்லுடா."

என் கண்கள் கலங்கின. ஆனால் சிரித்துக் கொண்டே, சாமிநாதன் பேசினான்.

"சீ...சீ! உன்னைத் தெரியாதாடா, எனக்கு. நேத்து என்னமோ அப்படி நடந்து போச்சு!"

"அது சரி... நீ ஏண்டா 'சத்தி'யை அடிச்சே திடீர்னு..."

"அதுக்கும் இதாண்டா காரணம். 'ஏ ஒத்த சட்டை, ஒழுங்கா விளையாடு'ன்னு அவன் சொன்னான். எனக்குத் தாங்க முடியலே. கோபப்பட்டு அடிச்சேன். ஆனா தடுக்க வந்த

உன்னையும் அடிச்சேன், பாரு. அது தப்பு. அது கெடக்கட்டும் விடு."

சாமிநாதன் சாதாரணமாய்ச் சொன்னான்.

நான் எழுந்து 'வாலிபால்' கிரவுண்ட் பக்கம் போய், ஓரத்தில் வைத்திருந்த என் சைக்கிள் கேரியரில் இருந்த புத்தகப் பையை எடுத்துக் கொண்டு, மறுபடியும் சாமிநாதனிடம் வந்தேன்.

நேற்றே எடுத்து வைத்திருந்த சட்டைப் பார்சலை எடுத்து அவனிடம் கொடுத்தேன்.

அவனும் சிரித்தபடி வாங்கிக் கொண்டான். பார்சலைப் பிரித்தான்.

"என்னடா சட்டை!"

வியப்போடு சொன்னான்.

"என் சட்டைதான்டா. இதப் போட்டுக்கிட்டு நாளக்கிக் கட்டாயம் பள்ளிக்கூடம் வா. நேத்து ராத்திரியே எடுத்து வச்சேன்."

சாமிநாதன் ஒன்றும் சொல்லாமல் வீட்டிற்குப் போனான். மறுநாள் அதே சட்டையைப் போட்டுக் கொண்டுதான் பள்ளிக்கூடம் வந்தான்.

அந்த சாமிநாதன்தான் இவன். இடையில் எப்போதோ ஒருமுறை பார்த்தது. சென்னையில் இருப்பதாகச் சொல்லியிருந்தான். இருபது ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான் பார்க்கிறேன்.

"என்னடா சிவகு, அப்படியே உட்கார்ந்திருக்கே. ஏதாவது பேசுடா, பள்ளிக்கூடத்திலே எப்படிப் பேசுவே! நான் வசதியாப் போனாலும் இன்னைக்கும் உன் ஆள்தான்டா. எப்போதும் போல பேசுடா. நீ பார்க்காத வசதியையா நான் பார்த்திட்டேன்!"

சாமிநாதனுக்கு என்ன பதில் சொல்வேன்? எதில் இருந்து ஆரம்பிப்பது?

ஆரம்பித்தேன்.

"நான் கெடக்கிறேன். உன்னைப் பத்தி சொல்லு, சாமிநாதா."

"என்னைப் பத்திய வசதியைச் சொல்லிட்டேன். மூணு பசங்க. நான் சாப்பிடாமல் என் பெண்டாட்டி சாப்பிட மாட்டா. ஒரு பையன் என்ஜினீயரிங் படிக்கிறான். கடைசிப் பையன் பிளஸ்-டூ படிக்கிறான். இரண்டாவது பையன் எம்.பி.பி.எஸ். படிக்கிறான். கட்டுப்பாடான குடும்பம்.

"நானும் வசதி வந்ததும் ஓகோன்னு ஆடலை. உடம்பையே எப்படி கரெக்டா வச்சிருக்கேன், பார். ஐம்பத்து மூன்று வயசு. எந்தக் கெட்ட பழக்கமும் இல்லை. எந்தக் கோளாறும் இல்லை. இளமையில் எவ்வளவோ கஷ்டப்பட்டேன். இப்போ சௌகரியமா இருக்கேன். அது சரி. உன்னைப் பத்தி சொல்லு. ஏதோ இவ்வளவு நாள் பார்க்காமல் இருந்திட்டோம். இனி அப்படி இருக்கக் கூடாது."


சாமிநாதன் வித்தியாசமானவன்தான். இவனிடம் வெட்கப்படத் தேவையில்லை. வெளிப்படையாய்ப் பேசத் தொடங்கினேன்.

"பள்ளிக்கூடம் முடிந்ததும், சென்னைக் கல்லூரியில் சேர்ந்தேன். திடீரென்று அப்பா இறந்து போனார். இருந்த நிலபுலன்களைக் கவனிக்க இங்கேயே தங்கினேன். படிப்பு நின்றது. இருபது முடிவதற்குள் அம்மா பிடிவாதம், மனைவி வந்தாள். பிள்ளைகள் நாலு. பெண் இரண்டு. தீவிர அரசியல். அநாவசிய செலவு. வருஷா வருஷம் விவசாயத்தில் நட்டம். முக்கால்வாசி போக, மீதி முக்கால் வேலி நிலத்தோடு இப்போது போராட்டம். இதற்கு மேல் என்ன சொல்ல? பையன்களெல்லாம் பெரியவர்களாகிக் குடும்பம் பார்க்கிறார்கள். என் பொறுப்பில் இல்லை. நானும்

"ஃபோட்டோ ஒண்ணு எடுக்கணும். எவ்வளவு சார் சார்ஜ்?"

"முதல்ல ஃபோட்டோவை எடுத்துக்கங்க. பிறகு ரேட் சொல்றேன்... அப்பத்தான் உங்களால ஸ்மைலிங்கா போஸ் கொடுக்க முடியும்!"

— சீர்காழி வி. ரேவதி



இருக்கிறேன், தண்டமாக.."

சாமிநாதன் குறுக்கிட்டான்.

"சீ.. சீ, அப்படிச் சொல்லாதே! எவ்வளவோ கெட்டிக்காரன் நீ. எல்லாத்திலேயும் முதல் நீ. ஏதோ நேரங்காலம், கவலைப்படாதே. நானிருக்கேன். ஏன்டா சிவகு, என்னைத் தப்பா நினைக்க மாட்டியே.. நான் ஒண்ணு சொல்றேன், கேட்பியா?"

என்ன சொல்லப் போகிறான், சாமிநாதன்? என்னால் யூகிக்க முடியவில்லை.

"என்ன சாமிநாதா, இப்படிக் கேட்கிறே? பழைய நட்பு கொஞ்சம் கூட மாறாம, மறக்காம நீ இருக்கே. நீ சொல்றதைக் கேட்க மாட்டேனா? சும்மா சொல்லு."

சாமிநாதன் சொன்னான்.

"நீ சொல்றதை பார்த்தா, உன் வீட்டிலேயே நீ ஒதுங்கி இருக்கிற மாதிரி தெரியுது. உன் கஷ்டம் எனக்குப் புரியுது. என்னோட சென்னைக்கு வந்திடு. உனக்குக் கௌரவமான வேலை. போதுமான சம்பளம். நிம்மதியா இருக்



"பையனுக்கு வீரப்பன்னு பேர் வெச்சது தப்பா போச்சு!"

"ஏன்? ரொம்ப முரட்டுத்தனமா நடந்துக்கறானா?"

"ஊரும்... இருக்கிற இடமும் தெரியாம இருக்கான்...!"

— ராதா வாசுதேவன்

கலாம். நான் ஏற்பாடு செய்றேன். இப்போது உன் நிலைமையில இதுதான் சரி. மறுக்காம, குழம்பாம முடிவுக்கு வா. எந்தச் சந்தர்ப்பத்திலும் உனக்கு நான் கைகொடுப்பேன். எனக்கும் நம்பிக்கையா உன்னை மாதிரி துணை தேவை!"

எனக்குப் புல்லரித்தது. நான் முடிவோடு தான் இருக்கிறேன். ஒரு நல்ல வாய்ப்புக்குத் தவித்துக் கொண்டிருக்கிறேன். ஆற்றில் விழுந்தவனைத் தூக்கிவிட ஒரு கை கிடைக்காதா என்கிற நிலைமை!

உடனே சம்மதித்தேன்.

"எனக்குச் சம்மதம் சாமிநாதா" என்றேன்.

"ரொம்பவும் சந்தோஷம் சிவசு! ஒரு மாதத்திற்குள் தகவல் அனுப்புகிறேன். உடனே கிளம்பி வா."

என்னை விட மகிழ்ச்சியோடு சாமிநாதன் சொன்னான்.

பிறகு அவன் தன் கார் டிரைவரை அழைத்தான்.

அறைக்கு வெளியே போய் அவனிடம் ஏதோ மெதுவாகச் சொன்னான்.

பிறகு என்னிடம் வந்து பேசினான்.

ஒரு மணி நேரம் கழித்து டிரைவர் வந்தார்.

சாமிநாதன் அவரிடம் சொன்னான்.

"டிரைவர் இவரை இவர் வீட்ல கொண்டு விட்டுட்டு வாங்க. நான் உங்களிடம் சொன்ன மாதிரி செய்ங்க."

நான் வீட்டிற்குக் கிளம்பினேன். காரில் போகும் போது டிரைவர் என்னிடம் பேச்சுக் கொடுத்தார்.

சாமிநாதனை மிகவும் புகழ்ந்தார். "அவரை மாதிரி ஒரு முதலாளியைப் பார்க்க முடியாது. அவரிடம் வேலை பார்க்கும் நாங்கள் கொடுத்து வைத்தவர்கள்" என்றார்.

எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

வீடு வந்தது. இறங்கிக் கொண்டேன்

டிரைவர் இறங்கி, காருக்குள் இருந்து பார்சல் போன்ற பேப்பர் சுற்றிய கட்டு ஒன்றை எடுத்தார்.

"ஐயா, இதை உங்களிடம் கொடுக்கச் சொன்னார். உள்ளே தனியே ஒரு கவர் இருக்காம். பத்திரமாக எடுத்துக் கொள்ளச் சொன்னார்."

டிரைவர், அதை என்னிடம் கொடுத்து விட்டுக் காரில் ஏறிப் போனார்.

அதற்குள் என்ன இருக்கும்? எதுவும் புரியாமல் வீட்டிற்குள் சென்று பிரித்தேன்.

விழிகள் வியப்பால் விரிந்தன. நெகிழ்ந்து போனேன். மூன்று சட்டைக்குரிய வெள்ளைத் துணி! மூன்று புதிய எட்டு முழ வேஷ்டிகள்!

கடிதக் கவரைப் பிரித்தேன். பத்து நூறு ரூபாய் நோட்டுகள். ஒரு கடிதம்.

"அன்பு சிவசு, நேரில் கொடுத்தால் நீ வாங்க மாட்டாய். எனவே இந்த வழி. தவறாக நினைக்காதே! பணத்தைச் செலவுக்கு வைத்துக் கொள். திடீரென்று நீ சென்னைக்கு வர இது உதவலாம். போனவுடன் தகவல் அனுப்புகிறேன்."

எனக்கு அழ வேண்டும் போலிருந்தது. இப்படி. இந்த நேரத்தில் –

எனக்காக 'இப்படியும் ஒருவன்!'



திருடர் தலைவன் : எதிலேயும் ஒரு பண்பாடு இருக்கணும். முதல்லே எங்களை அறிமுகம் செய்துக்கிறோம். இவர்தான்....

— குல்லூ

சுற்றுச் சூழல் கெட்டுப் போன சமூகம்



இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஒரு கல்லூரியின் தமிழ்ப் பேரவை விழாவில் பேச அழைத்திருந்தார்கள். அந்த நிகழ்ச்சிக்கு நடிகர் நாசரும் முக்கிய விருந்தினராக வந்திருந்தார். விழாவில் நான் பேசத் துவங்கியதும் "முதலில் நாசர் பேசட்டும், முதலில் நாசர் பேசட்டும்" என்று மாணவர்கள் கத்தி கலாட்டா செய்தார்கள். நாசர் மைக்குக்கு வந்து "பிரபஞ்சன் நல்ல தமிழ் எழுத்தாளர், நானே அவர் பேச்சைக் கேட்க ஆவலாக இருக்கிறேன்" என்று சொல்லியும் கலாட்டா ஓயவில்லை. பின்னர் நாசரே முதலில் பேச வேண்டியதாயிற்று!

இதற்கு அந்த மாணவர்களைக் குறை சொல்ல முடியாது. இன்றைக்கு தமிழ்நாட்டில் உள்ள 'சூழல்' அப்படி. அதில் பாதிக்கப்பட்டவர்கள்தான் அவர்கள். சினிமா நடிகர்கள் ஆராதிக்கப்படுவதும், பூஜிக்கப்படுவதும், மக்களின் கஷ்டங்களை அவர்களால் மட்டுமே தீர்க்க முடியும் என்ற நம்பிக்கையும் இன்று தமிழக மக்களின் தவிர்க்க முடியாத அவஸ்தைகளாகி விட்டன.

தங்களுடைய சாதனைகளையும் லட்சியங்களையும் சொல்லி வோட்டுக் கேட்க வேண்டிய மூத்த அரசியல் தலைவர்கள் கூட, நடிகர்களின் பின்னால் ஓட வேண்டிய நிலை இன்று இருக்கிறது.

நடிகர்களை 'அடுத்த முதல்வரே' என்று பேசுகிறார்கள்; போஸ்டர் போடுகிறார்கள். ஓர் அரசியல்வாதிக்குப் போட்டியாக மற்றொரு அரசியல்வாதியைத்தான் குறிப்பிட முடியும். கலைஞரா – வை.கோவா? அல்லது கலைஞரா – மூப்பனாரா? இப்படிப் பார்ப்பதுதான் ஆரோக்கியமான அரசியல் சிந்தனை. இதை விட்டு விட்டு கலைஞரா – அந்த நடிகரா? என்று பார்ப்பது எந்தவிதத்தில் சரி?

அப்படியென்றால் நடிகர்கள் அரசியலுக்கு வரவே கூடாதா? அவர்களும் சமூகத்தில் ஓர் அங்கம்தானே, மக்களின் விழிப்புணர்வைத் தூண்டுவதில் அவர்களுக்கும் பங்கு உண்டே! இதுபோல கேள்விகளும் கருத்துக்களும் எழலாம். அவர்கள் அரசியலுக்கு வரவேண்டாம் என்று சொல்லவில்லை. வரட்டும், நன்றாக வரட்டும். ஆனால், ஒரு கட்சியில் சேர்ந்து, அதன் தட்பவெப்பங்களில் சிக்கி, அரசியலில் முன்னுக்கு வர வேண்டுமே தவிர, சினிமாத் துறையில் பெற்ற புகழை மூலதனமாக வைத்து அரசியலில் இறங்கக் கூடாது.

எம்.ஜி.ஆரும், சிவாஜியும் அரசியலுக்கு வரவில்லையா? அவர்கள் ஒரு கட்சியில் இணைந்து, பல வருடங்களாகப் பாடுபட்டு, மேடைகளில் பேசி 'அரசியல் பணி' ஆற்றியவர்கள். தவிர, தங்களின் சமூகப் பிடிப்பையும், லட்சியங்களையும், படங்களாகவும், பாடல்களாகவும் வெளிப்படுத்தினார்கள்.

இன்று, நடிகர் நாசர், தமக்கு ரசிகர் மன்றமே கூடாது என்று சொல்லி, சமூகப் பார்வையுடன் செயல்படுகிறார். ஷபனா ஆஸ்மி, ரேவதி போன்றவர்களின் சமூகப் பிரக்ஞை, அவர்கள் அரசியலுக்கு வரத் தகுதியானவர்கள்தான் என்பதைத் தெரிவிக்கிறது.

ஆனால் இன்று மேடைகளில் வைத்துப் போற்றப்படும் சில நடிகர்கள் ஓரிரு ஆண்டுகள் முன்பு வரை கூட தங்கள் சமூகப் பார்வையைத் திரைப்படங்களில் பிரதிபலிக்காதவர்கள்தான்! ஆகவே, இதுபோன்றவர்களின் நிஜரூபத்தை வெளிப்படுத்தி, ஆரோக்கியமான, சிந்தனையை மக்கள் மனத்தில் விதைக்கும் பெரிய பொறுப்பு, பத்திரிகை, டி.வி. போன்ற சாதனங்களுக்கு இருக்கிறது.

சுற்றுச் சூழல் கெட்டுப் போகாத சமூகம்தான் சிறந்த தலைவர்களை உருவாக்க முடியும்; தேர்ந்தெடுக்க முடியும். அப்படிப்பட்டவர்கள்தான் சிறப்பாக ஆத்ம சுத்தியுடன் மக்களுக்குச் சேவை செய்ய முடியும். இந்த நிலை எப்போது உருவாகும்?

சந்திப்பு : ப்ரியன்

சமூக அவலங்களைத் தோலுரிக்கும் எழுத்தாளர்கள்!

'தந்தையில்லாப் பிள்ளை தறுதலை' என்பார்கள். அந்தத் தந்தையே தறுதலையாக இருக்கிறபோது, பிள்ளை எப்படி இருக்க முடியும்? சிறகுகள் முளைக்கும் முன்பே சிறைப்படும் பறவையாக அவன் கனவுகள் நசுக்கப்படும்.

இதை உயிரோட்டத்தோடு விளக்குவது தான் இந்த ஆண்டு அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற 'மறுபடியும்' சிறுகதை.

சக சிறுவர்களைப் போலவே தானும் படிக்க வேண்டும் என்று கனவு காணும் அப்புசாமிக்குப் பெற்றோர் சரியில்லை. அதனால் வேலைக்கு அனுப்பப்படுகிறான். அப்புசாமி, அப்பாண்டுவாகிறான். தான் படிக்காவிட்டாலும் தன் தம்பியையாவது படிக்க வைத்துவிட வேண்டும் என்கிற பொறுப்புணர்ச்சியோடு அவன் வேலை பார்க்கிறபோது, அதற்கும் தடை ஏற்படுகிறது. நொந்து போகும் அப்பாண்டு, விட்டால் போதும் என்று காணாமல் போய் விடுகிறான்.

• திருமதி சாந்திகுமார்





• சத்யராஜ்குமார்

அப்பாண்டு தப்பித்து விட்டாலும் சமூகத்தின் அந்த அவலமான இடம் வெற்றிடமாக வில்லை. அதே இடத்திற்கு அப்பாண்டுவின் தம்பி சுப்ரமணி, சுப்புணியாக வேலைக்கு வருகிறான்! ஆக, ஒரு சமூக அவலம், தற்செயலாக வெற்றிடமாகிறபோதுகூட அது மறுபடியும் மறுபடியும் நிரப்பப்பட்டுக் கொண்டேதான் இருக்கிறது என்பதைச் சொல்வதுதான் 'மறுபடியும்' சிறுகதை.

இதை எழுதிய என். கனகராஜன், "ஏற்கெனவே சுமார் நாற்பது சிறுகதைகளுக்கு மேல் எழுதியிருந்தாலும் பரிசு பெறுவது, அதுவும் முதல் பரிசு என்கிற முத்திரையைக் கல்கியின் மூலம் பெறுவது... அப்பப்பா... நினைக்க நினைக்கச் சந்தோஷமாய் இருக்கிறது. அப்பா, அம்மா, மூன்று தங்கைகள் என்று குடும்பமே சந்தோஷப்பட்டது. நண்பர்களெல்லாம் வாழ்த்தியபோது சந்தோஷம் பல மடங்கானது!" என்கிறார்.

பொள்ளாச்சிக்கு அருகிலிருக்கும் சமத்தூர் என்னும் கிராமத்தைச் சேர்ந்த இந்த 25 வயது இளைஞர் ஐ.டி.ஐ.யில் மெஷினிஸ்ட் மற்றும் கம்ப்யூட்டரில் இரண்டு பயிற்சிகள் முடித்திருந்தாலும் இன்னும் வேலை தேடிக் கொண்டுதான் இருக்கிறார்.

இந்த நிலையில், இவர் எழுத ஆரம்பித்தது எப்படி? "முதன் முதலில் எனது பெயரை அச்சில் பார்த்தது கோகுலத்தில்தான். பிறகு கொஞ்சம் கொஞ்சமான வளர்ச்சி... முயற்சி... இப்போது எனது முயற்சியின் வெற்றியாக – வளர்ச்சிக்கு உத்தரவாதமாகக் கல்கியில் முதல் பரிசு என்கிற முத்திரை!" என்று கூறும் இவர், ஏற்கெனவே கல்கியில் பரிசு பெற்றவர்தான்.

"ஆம்! கல்கியில் பொள்ளாச்சி சிறப்பிதழ் வெளியிட்ட பிறகு நடந்த வாசகர் சந்திப்பில் 'சந்தை' என்னும் தலைப்பில் கவிதை எழுதிப் பரிசு பெற்றிருக்கிறேன். கவிதைகளும் நிறைய எழுதுவதுண்டு!" என்கிறார்.

சிறுகதை, கவிதை என இரண்டிலும் அவர் சாதனை படைக்கவும் அவருக்கு நல்லதொரு வேலை விரைவில் கிடைக்கவும் நாம் வாழ்த்துகிறோம்.

இரண்டாம் பரிசு பெற்ற சத்யராஜ்குமாரின் 'உள்காயம்' சிறுகதையும் சமூகத்தின் இன்னொரு அவல முகத்தைக் காட்டுவதுதான். குடிப்பழக்கம் போலவே, வெறித்தனமான அரசியல் ஈடுபாடும் ஒரு குடும்பத் தலைவனை எந்த அளவுக்குக் கீழ் மகனாக்கும் என்பதை எடுத்துக்காட்டும் சிறுகதை. இதனால் மனைவியின் மனத்தில் ஏற்படுகிற 'உள்காயம்'.

இயல்பான முறையில் இந்த உள்காயத்தை விவரித்திருக்கிற சத்யராஜ்குமாரின் இந்தச் சிறுகதைக்கு இன்னொரு சிறப்பு, இது அவரது நூறாவது சிறுகதை என்பது!

பொன்னாச்சியைச் சேர்ந்த இந்த 29 வயதுக்காரர் கல்கி வாசகர்களுக்கு ஏற்கெனவே நன்கு அறிமுகமானவர்தாம். 94ம் வருடம் போட்டியில் முதல் பரிசு பெற்றவர். அதே ஆண்டில், வெளியான இவரது சிறுகதையொன்று இலக்கியச் சிந்தனையால் சிறந்த சிறுகதையாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

"கடந்த இரண்டாண்டுகளில் பெரிய மாற்றம் ஒன்றும் என் வாழ்வில் நிகழ்ந்துவிடவில்லை. இதுவரை டைப்ரைட்டரில் கதை எழுதி வந்த நான் இப்போது கம்ப்யூட்டரில் எழுதி வருகிறேன், அவ்வளவுதான்!" என்று இவர் கூறினாலும், 'எதில் எழுதினால் என்ன? வாசகர்களின் மனத்தில் எழுதுகிற வித்தை இவருக்குக் கைவந்திருக்கிறதே, அது மிகப் பெரிய விஷயம்' என்று பாராட்டுகிறோம்!

• என். கனகராஜன்



மூன்றாம் பரிசுக் கதைகளில் ஒன்றான 'எல்லாமாய் நீ இருக்கையில்' எழுதிய திருமதி சாந்தி குமாருக்கு இதுதான் முதல் சிறுகதை. நம்ப முடிகிறதா?



• ஜி. நாராயணன்

ஒரு நடுத்தரக் குடும்பத்துப் பெண்ணின் ஆழமான காதலை – காதலன் கணவனாவதற்கு முன்பே காலனிடம் இழக்க நேர்ந்துவிட்ட கொடுமையிலும் – அவர்களுடைய காதல் அவர்கள் இருவரைத் தவிர வேறு யாருக்குமே தெரியாத ஒரு சூழ்நிலையிலும் – அவனுக்காகவே வாழுகிற ஒரு நிஜக் காதலின் உயிர்த் துடிப்பை எத்தனை தத்ரூபமாக விளக்கியிருக்கிறார் இந்த அறிமுக எழுத்தாளர்!

"கல்கியின் இந்தப் பரிசு எனது முதல் திருமண நாள் பரிசாகவும் அமைந்ததில் இரட்டிப்பு மகிழ்ச்சி!" என்று கூறும் திருமதி சாந்திகுமார் திருவிடைமருதூர்க்காரர். கணவரின் வேலை காரணமாகக் கோழிக்கோட்டில் செட்டில் ஆனவர்.

"எனது எழுத்தார்வத்துக்குக் காரணம், திருமணத்துக்கு முன்னும் பின்னும் இறையருளால் அமைந்த இதமான குடும்பச் சூழ்நிலைதான். சிறுகதை எழுதுவதில் மட்டுமல்ல; கவிதை, நாடகம் எழுதுவதிலும் எனக்கு ஆர்வம் உண்டு!" என்று கூறும் திருமதி சாந்திகுமார் எல்லாத் துறைகளிலும் வெற்றி பெற வாழ்த்துகிறோம்.

சமூகத்தின் இன்றைய நடைமுறை எப்படியிருக்கிறது? அரசாங்கம் ஒதுக்குகிற இடஒதுக்கீடுகள் ஒரு பக்கம் இருக்கட்டும்; பொருளாதார வசதியோடு சமூக அந்தஸ்தையும் பெற்றிருக்கிற எல்லா ஜாதிக்காரர்களும் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? டாக்டர் மகன் டாக்டர், வக்கீல் மகன் வக்கீல், அரசியல்வாதியின் மகன் அரசியல்வாதி, இசைக் கலைஞனின் மகனும் ஓர் இசைக் கலைஞனாகவே வர வேண்டும் என்றுதான் அவரவரும் ஆசைப்படுகிறார்கள்.

இது மட்டுமல்ல; ஒரு தொழிலாளியின் மகன் ஒரு தொழிலாளியாகவும் ஒரு டிரைவரின் மகன் ஒரு டிரைவராகவும்தான் இருக்க வேண்டுமென்றும் இந்த வசதிபடைத்த மேல்தட்டு மக்கள் ஓர் ஒதுக்கீட்டு முறையை நிர்ணயிக்கப் பார்க்கிறார்கள். இதுதான் 'புதிய ஒதுக்கீடுகள்!'

மூன்றாம் பரிசுக் கதைகளில் ஒன்றான இந்தச் சிறுகதையை எழுதிய ஜி. நாராயணனும் கல்கி வாசகர்களுக்குப் புதியவரல்லர். கடந்த 24 ஆண்டுகளாக எழுதிவரும் இவர், கடந்த 86-ல் நடந்த அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியிலும் மூன்றாம் பரிசு பெற்றவர்.

இவை மட்டுமா? விகடன் வைர விழாப் போட்டியில், கலைமகளில், அமுதசுரபியில் என்று பல்வேறு பரிசுகள் பெற்றவர், இந்த தஞ்சை மாவட்டத்துக்காரர். குடும்பப் பொறுப்புகளையெல்லாம் ஏறத்தாழ முடித்துவிட்ட நிலையிலிருக்கும் இவர், இப்போது சென்னையில் செட்டிலாகி தமது ஓய்வுக் காலத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார். இருப்பினும் ஓய்வு என்பது அலுவலகப் பணிக்குத்தானே தவிர, இவரது பேனாவுக்கு அல்ல! மேலும் மேலும் சிறந்த படைப்புகளை இவரிடமிருந்து எதிர்பார்க்கிறோம்!

கூடவே, ஆயிரக்கணக்கில் கலந்துகொண்டு, அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியை வழக்கம் போலவே இந்த ஆண்டும் சிறப்படையச் செய்த எழுத்தாளர்களுக்கும் வாசகர்களுக்கும் நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். பரிசுக் கதைகளைத் தேர்ந்தெடுத்துத் தந்த நடுவர்களுக்கும் நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஆசிரியர் குழு



எனக்கொரு மகன் பிறப்பான்

குடும்பத்தில் யாருக்காவது ஒரு ஆண் குழந்தை பிறக்காதா என்று

சம்பந்தமே இல்லாமல் இடுப்பு பெல்ட்டிலிருந்து பொடி டப்பா எடுத்து, உறிஞ்சி விட்டு 'இந்தியன்' என்று வெ.ஆ. மூர்த்தி கமலை இமிட்டேட் பண்ணும்போது பொத்துக்கொண்டு சிரிப்பு வரத்தான் செய்கிறது.

யோசனையெல்லாம் பிறகுதான்.

படத்துக்கு உயிர் கொடுப்பவர் விவேக். ராம்கியின் நண்பனாக வந்து, தனக்குப் பிறந்த ஆண் குழந்தையை, அவ்வப்போது ராம்கியிடம் இரவல் கொடுத்து விட்டு, ராத்திரியில் முக்காடு போட்டுக் கொண்டு போய்

கிட்டத்தட்ட சசிகலா கெட்அப்பில் வருகிற வடிவுக்கரசி ஏங்கித் தவிக்க, பையன்களுக்கு வரிசையாக ஒரு நர்சரி வைக்கிற அளவுக்குப் பெண்களாகப் பிறக்கிறது. கடைசிப் பையன் ராம்கிக்கும் அவ்வண்ணமே நேர, கதை நகர்த்த வேண்டி ஒரு குழந்தை மாறாட்டம் நாடகத்தை அரங்கேற்றுகிறார்கள். இறுதியில் என்ன ஆகும் என்பதையெல்லாம் விளக்க வேண்டுமா என்ன?

என்னவெல்லாம் செய்தால் ஜனங்களைக் கிச்சுகிச்சு மூட்ட முடியும் என்று மேடைக்கு எஸ்.வி. சேகர் ஒரு ஃபார்முலா வைத்திருப்பது போல, திரைக்கு கேயார் வைத்திருக்கிறார். தோராயமாக மூன்று நிமிஷத்துக்கு ஒரு காமெடி என்கிற ரீதியில் படம் முழுக்க சரவெடி.

லாஜிக் உள்ளதா, இல்லையா, படத்தோடு ஒட்டுகிறதா, இல்லையா என்று ஆராய்வதெல்லாம் அநாவசியம்.

மறுபடி வாங்கி வருகிற இடமெல்லாம் வெகு நயம்.

அப்புறம் கார்த்திக்ராஜா. முழுமையாக இசையமைத்திருக்கும் முதல் படம். இரண்டு பாடல்களில் இனிமை இருக்கிறது. ஒன்று, இளையராஜா தேடிய செவ்வந்திப் பூவின் வாசனையை இரவல் பூசிக் கொண்டிருக்கிறது.

ஒளிப்பதிவு, எடிட்டிங் உள்ளிட்ட தொழில்நுட்ப விஷயங்களில் நிறைய பள்ளங்கள். எரிச்சலூட்டக்கூடிய அளவுக்குக் கூட சில இடங்களில் கேமரா தூங்கி வழிகிறது.

நகைச்சுவைக்காக மட்டும் பொறுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. இதனை மட்டுமல்ல; நம்பவே முடியாத கதை மற்றும் சம்பவங்களையும் கூட.

- ஆர்.பி.ஆர்.

பாரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி, பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன். ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

கல்பதரு பெனிஃபிட் பண்ட் லிமிடெட்டின் நிறுவன நிர்வாக இயக்குநர்களின்
புதிய நிறுவனமான

"கிருத்திகா பெனிஃபிட் பண்ட் லிமிடெட்

(கம்பெனிகள் சட்டப்படி பதிவு செய்து நிறுவப்பட்டது)
பதிவு எண் : 35664

தொலைபேசி எண் : 5359955
IIIம் மாடி, சந்தன் டவர்ஸ்
119/120, நைனியப்ப நாயக்கன் தெரு
பார்க்டவுன், சென்னை - 600 003

என்னும் முகவரியில்

செப்டம்பர் மாதம் 15ம் நாள் காலை 10 மணியளவில் திறக்கப்பட உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அனைவரும் வருக! ஆதரவு தருக!

இங்ஙனம்
இயக்குநர்குழு

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN /MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka

மின்னுவதெல்லாம் பொன்னல்ல

பொன்னான வாழ்வுக்கு வென்ச்சுராவை நாடுங்கள் !



வென்ச்சுராவின் பொன்னான தங்கத் தொட்டில் திட்டம் உங்கள் குழந்தையின் வாழ்க்கையை வளமாக்குகிறது; தக தகவென மின்னச் செய்கிறது.

இந்த திட்டத்தில் நீங்கள் செலுத்தும் குறைந்த முதலீட்டிற்கு பன்மடங்கு பலன் கிடைக்கிறது. நிறைந்த வருவாய்; நீடித்த பயன்.

ஆம். உங்கள் குழந்தைக்காக வென்ச்சுராவுடன் நீங்கள் ஏற்படுத்திக் கொள்ளும் உறவு ஒரு ஆயுட் காலப் பிணைப்பு.

தரையில் தவழ்ந்து கொண்டிருக்கும் உங்கள் சின்னஞ்சிறுசுகள் எங்களுடைய தங்கத் தொட்டிலில் தவழட்டும்; அவர்களுடைய எதிர்காலம் தழைத்தோங்கட்டும்.

முதலீடு	திட்டம் A	ரூ. 6,850
	திட்டம் B	ரூ. 600 x 12 மாதங்கள்
	திட்டம் C	ரூ. 300 x 24 மாதங்கள்
வருவாய்	ஒவ்வொரு ஆண்டும் ரூ.2,500 வீதம் 20-வருடங்களுக்கு சீரான வருமானம் (ரூ.50,000)! மேலும், 20-வருடங்கள் கழித்து, உங்கள் மகன்/ மகள் ரூ.5 லட்சம் ரொக்கமோ, அல்லது அதற்கு ஈடான தேக்கு மரங்களையோ பெறுதல்!!	
போனஸ்	அதுமட்டுமின்றி 'கோல்ட் பொனான்ஸா' ஒன்றில் நீங்கள் பங்கு பெற வாய்ப்பு!!	

Venchura

ORCHARDS & FARMLANDS

63, Eldams Road, II Floor, Teynampet, Madras - 18. Ph: 453024